தலைப்பு - 111 சுகாதார அமைச்சு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 111 – சுகாதார அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சுகாதார அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 ஜூன் 18 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சுகாதார அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய 06 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய 06 ஆம் பக்கம் தொடர்பில் கவணம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் ஆமைச்சின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை ஆமைச்சினதும், பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

- எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2018 ஆண்டின் போது நிதி அல்லாத சொத்துக்களின் கிரயம் ரூபா 46,940.73 மில்லியனினால் குறைவாக காட்டப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 7,102.99 மில்லியன் தொகை 2019 ஆண்டில் புதிதாக காணிகள் தனதாக்கல் என காட்டப்பட்டிருந்தது.	இணக்க அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென.	பிழையினை சரி செய்து 2025 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ii)	2018 ஆண்டின் போது மூலதனச் சொத்துக்கள் தனதாக்கல் ரூபா 14,793.13 மில்லியனினால் குறைவாக காட்டப்பட்டிருந்தமையால் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மூலதனச் சொத்துக்கள் அதற்கு சமமான பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	சில நீண்ட காலச் செயற்திட்டங்கள் ஊடாக உருவாக்கப்பட்டிருந்த சொத்துக்கள் இடையே சுமார் ரூபா 14,676.29 மில்லியன் பெறுமதியொன்று 2024 திசெம்பர் 31 திகதியளவில் மூலதனப்படுத்தப்பட்டதெனவும், மேலும், அமைச்சின் தலைப்பு தவிர வேறு நிறுவனங்களின் தலைப்புகளினூடக ஏற்பட்டுள்ள சொத்துக்களின் உருவாக்கத்தை இனங்காணல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென.	- மேற்படி -

(iii)	திறைசேரி கணக்குக் கூற்றின் படி 2019 ஆண்டின் போது தனதாக்கியிருந்த கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைக் கிரயம் ரூபா 6,501.94 மில்லியன் தொகை நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் உட்படுத்தியிருக்காததுடன், 2019 ஆண்டின் போது தனதாக்கியிருந்த சொத்துக்களின் கிரயம் ரூபா 2,967.27 மில்லியன் தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்கள் அந்தப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	சரி செய்வதற்காக இணக்க அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென.	- மேற்படி -
(iv)	திறைசேரியினால் பேணப்பட்டு வருகின்ற எஸ்ஏ 80 நிதியல்லாத சொத்துக்கள் கணக்கு மாதாந்த பொழிப்புக்கு மற்றும் எஸ்ஏ 82 திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் கணக்குக் கூற்றின் படி 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்களின் கிரயத்தில் காணப்பட்ட ரூபா 19,789.44 மில்லியனிற்கான வித்தியாசத்திற்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கல்கள் மேற்கொண்டிருக்கவில்லை.	நீண்ட காலச் செயற்திட்டங்கள் ஊடாக உருவாக்கப்பட்டிருந்த சொத்துக்கள் இடையே சுமார் ரூபா 14,676.29 மில்லியன் பெறுமதியொன்று 2024 திசெம்பர் 31 திகதியளவில் மூலதனப்படுத்தப்பட்டதெனவும், மேலும், அமைச்சின் தலைப்பு தவிர வேறு நிறுவனங்களின் தலைப்பினூடாக ஏற்பட்டுள்ள சொத்துக்களின் உருவாக்கத்தை இனங்காணல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென.	வித்தியாசத்திற்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கல்களை மேற்கொண்டு 2025 ஆண்டிற்காக சரியாக நிதிக்கூற்று தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.
(v)	2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக்கூற்றின் படி 2021 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 192,229.15 மில்லியன் தொகை எனினும், திறைசேரியினால் பேணிச் செல்லப்படுகின்ற நிதியல்லாத சொத்துக்களின் கணக்குகள் மாதாந்த பொழிப்பு (SA 80) மற்றும் திரண்ட நிதியல்லாத சொத்துக்களின் கணக்குக் கூற்று (SA 82) பிரகாரம் அந்தப் பெறுமதி முறையே ரூபா 172,439.71 மில்லியன் தொகை மற்றும் ரூபா 184,327.77 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால், முறையே ரூபா 19,789.44 மில்லியனிற்கான மற்றும் ரூபா 7,901.38 மில்லியனிற்கான வித்தியாசங்களுக்கான	- மேற்படி -	- மேற்படி -

	காரணங்களை கண்டறியப்படவில்லை.		
(vi)	2021 ஆண்டின் நிகழ்ச்சித் திட்டங்களின் படி செலவுக் கூற்று (படிவம் ACA 2(i)) மற்றும் திறைசேரியினால் பேணியிருந்த மாதாந்த செலவுப் பொழிப்பு (SA 10) பிரகாரம் மீளாய்வாண்டின் போது மூலதனச் சொத்துக்கள் தனதாக்கல் திறைசேரியினால் பேணியிருந்த திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் கணக்குக் கூற்று (SA 82) பிரகாரம் அந்த பெறுமதிகளிடையே காணப்பட்ட ரூபா 16,877.89 மில்லியனிற்கான வித்தியாசத்திற்கான காரணங்களை கண்டறியப்படவில்லை.	- மேற்படி -	- மேற்படி -
(vii)	2020 ஆண்டின் போது பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் அமைப்புக்கள் மற்றும் தனியாரினால், அமைப்பிற்கு மற்றும் அதன் கீழ் காணப்படும் வைத்திய நிறுவனங்கள் மற்றும் பல்வேறு பிரிவுகளுக்கு நிதியல்லாத உதவிகள் அல்லது நன்கொடைகள் என ரூபா 1,339.25 மில்லியன் பெறுமதியான பொருட்கள், உபகரணங்கள் மற்றும் மருத்துவ வழங்கல்களும் பெறுமதி அறியப்படாத பொருட்கள் மற்றும் உபகரணங்கள் 2444 அலகுகள் வழங்கப்பட்டிருந்ததென உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், அவற்றின் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருக்கவில்லை.	ஏனைய நிறுவனங்களில் இருந்து மாற்றப்பட்டுள்ள சொத்துக்கள். Transfer in இன் கீழ் New-Cigas முறைமையில் சொத்துக்கள் மொடியுலருக்கு உட்படுத்த வேண்டும் என பிரதான நிதி உத்தியோகத்தர் iii இன் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டிருந்த கடிதத்தின் மூலம் சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், தற்போது அந்த கணக்கீடு செய்தல் மேற்கொள்வதற்கு தொடர்ச்சியாக அறிவுரை வழங்கல் மற்றும் மேற்பார்வை அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றதென.	கணக்கீடு செய்யப்படாத அனைத்து சொத்துக்களையும் இனங்கண்டு கணக்கீடு செய்து 2025 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(viii)	2010 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப் பகுதியில் அமைச்சினால் செயற்படுத்தப்பட்டிருந்த 54 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 7,603.09 மில்லியனிற்கான செலவுகளில் அடங்கியுள்ள நிதி அல்லாத சொத்துக்கள் தனதாக்கல் மற்றும் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு நிதியல்லாத சொத்துக்களின் கீழ்	சில செயற்திட்டங்களின் மூலம் நிலையான சொத்துக்கள் உருவாகியிருக்கவில்லை எனவும், அதேபோல், நிலையான சொத்துக்கள் உருவாகியிருந்த சில செயற்திட்டங்களில் அனேகமாவையினால் அந்த சொத்துக்கள் வழங்கப்பட்டிருந்தது மத்திய அரசின் கீழ் நிருவகிக்கப்படாத வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களுக்காகவே எனவும்,	செயற்திட்டங்களின் கீழ் தனதாக்கப்பட்ட அனைத்து நிதியல்லாத சொத்துக்களும் அமைச்சின் அல்லது அந்த சொத்துக்களை வழங்கிய நிறுவனங்களின் நிதியல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டது என உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகள் விரைவாக

	கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சில சொத்துக்கள் Transfer in இன் கீழ் New-Cigas முறைமையில் சொத்துக்கள் மொடியுலருக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என.	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ix)	2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றின் படி மற்றும் திறைசேரியின் திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் கணக்குக் கூற்றின் படி (SA 82) அத் திகதியில் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி மற்றும் 2022 ஆண்டின் திறைசேரி திரண்ட நிதி அல்லாத சொத்துக்கள் கூற்று (SA 82) படி 2022 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு அந்தப் பெறுமதியிடையே ரூபா 5,244.56 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டிருந்ததுடன், இந்த வித்தியாசத்திற்கான காரணத்திற்காக கணக்காய்வின் போது விளக்கமளிக்கப்படவில்லை.	குறிப்பிட்ட நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்பட்டு ஒரு கோப்பாக தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த முறைமை வழுவொன்றின் காரணமாக உண்மையான பெறுமதிகள் கோப்பிலிடப்பட்டிருக்கவில்லை எனவும், அரச கணக்குத் திணைக்களத்திடம் கலந்துரையாடி அந்த நிலைமையை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	வித்தியாசங்களிற்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கல்கள் மேற்கொண்டு 2025 ஆண்டிற்காக சரியான நிதிக்கூற்று தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.
(x)	2022 ஆண்டின் நிகழ்ச்சித் திட்டத்தின் படி செலவுக் கூற்று (படிவம் ACA 2(i)) திறைசேரி அச்சுப் பதிவு SA 10 இன் படி 2022 ஆண்டின் போது மூலதன சொத்துக்கள் தனதாக்கல் மற்றும் திறைசேரியின் திரண்ட நிதியல்லாத கணக்குக் கூற்று (SA 82) படி அப் பெறுமதியிடையே ரூபா 11,423.16 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.	- மேற்படி -	- மேற்படி -
(xi)	கோவிட் 19 அவசர பதிலளித்தல் மற்றும் சுகாதார முறைமையை தயார் செய்யும் செயற்திட்டத்தினால் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 6,326.05 மில்லியனிற்கான நிதியல்லாத சொத்துக்கள் கொள்வனவு செய்திருந்ததுடன், இந்த சொத்துக்களின் கிரயம் அமைச்சின் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.	2023 மற்றும் 2024 ஆண்டுகளில் மூலதனப்படுத்தியிருந்த பெறுமதிகள் தொடர்பான தகவல்கள் 2024 ஜூன் 26 திகதி கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டதென.	செயற்திட்டத்தின் கீழ் தனதாக்கியிருந்த அனைத்து சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகள் விரைவாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(xii)	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த சுகாதார அமைச்சின் மற்றும் அதற்குரிய 59 நிறுவனங்களில் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான தகவல்களை காட்டக்கூடிய கணினி மென் பிரதிகளின் படி 25 வைத்தியசாலைகள் / நிறுவனங்களின் காணிகள் போலவே 05 வைத்தியசாலைகள் / நிறுவனங்களின் கட்டிடங்கள் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	2024 திசெம்பர் 31 திகதி அளவில் முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என.	விரைவாக இந்த சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(xiii)	இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு மற்றும் சுற்றுலா மற்றும் சிவில் விமானச் சேவை அமைச்சுக்கு உரித்தாக்கப்பட்டிருந்த இரண்டு வாகனங்களின் கிரயமாகிய ரூபா 11.55 மில்லியன் தொகை 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சுகாதார அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் அடங்கியிருந்தது.	இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு உரிமையினை உரித்தாக்கியிருந்த வாகனம் CIGAS கணக்கு முறைமையில் உட்படுத்தி அச்சுப் பிரதியொன்று அனுப்பும் படி பொலிஸ் தலைமையத்துக்கு அறிவிக்கப்பட்டதெனவும், சுற்றுலா மற்றும் சிவில் விமான சேவை அமைச்சுக்கு உரித்தான ரூபா 6,850,000 தொகை பெறுமதியான வாகனம் New Cigas முறைமையிலிருந்து அகற்றப்பட்டுள்ளது என.	பிழையினை சரி செய்து அது தொடர்பாக கணக்காய்விற்க உறுதிப்படுத்த வேண்டும்.
(xiv)	கணக்காய்வினால் வேண்டப்பட்ட தகவல்கள் சில நிறுவனங்களினால் வழங்கியிருக்கவில்லை. அமைச்சின் கீழ் காணப்படும் வைத்தியசாலைகள், ஏனைய சுகாதார நிறுவனங்கள், பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 11 பிரிவுகளினால் 2017, 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கான கூட்டுத்தொகை ரூபா 2.66 மில்லியன் கிரயத்தையுடைய பண்டங்கள் மற்றும் பதுளை மாகாண பொது வைத்தியசாலைக்குரிய கிரயம் குறிப்பிடப்படாத பண்டங்கள் பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த அந்த அப்புறப்படுத்தப்பட்ட பண்டங்களின் கிரயம் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத	2020 ஆண்டு தொடர்பாக அப்புறப்படுத்தப்பட்ட பண்டங்களின் கிரயம் தவறுதலாக பதிவு செய்ய முடியாமல் போனதுடன், அந்த பண்டங்களின் பெறுமதி ரூபா 79,800 தொகை எனவும், அந்த அப்புறப்படுத்தப்பட்ட பண்டங்களின் கிரயம் அமைச்சின் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் உட்படுத்தப்படவில்லை எனவும், 2015 ஆண்டு முதல் கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் சிகாஸ் தரவு முறையில் உட்படுத்தியுள்ளது எனவும், இந்த அப்புறப்படுத்தப்பட்ட பண்டங்கள் 2015 ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட	வேண்டப்பட்டிருந்த தகவல்கள் அனைத்து நிறுவனங்களினாலும் வழங்கப்பட வேண்டியதுடன், அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்களுக்குரிய சரியான சீராக்கல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். அதேபோல் கணிப்பீட்டுச் சபை அறிக்கை கிடைத்த பின்னர் முறைகேடுகள் மற்றும் பற்றாக்குறை மற்றும் காணாமல் போதல் ஏதும் காணப்படின் நிதிப் பிரமாணம் 757(2) பிரகாரம் செயற்பட வேண்டும்.

	சொத்துக்களில் இருந்து அகற்றப்பட்டனவா என கணக்காய்விற்கு உறுதிப்படுத்தியிருக்கவில்லை. அதேபோல் சில வைத்தியசாலைகளில் அப்புறப்படுத்தல் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத சந்தர்ப்பங்களும் நியமனம் செய்யப்பட்ட அப்புறப்படுத்தல் குழுக்களினால் குறிப்பிட்ட அப்புறப்படுத்தல் செய்முறைகள் பூர்த்தி செய்திருக்காத சந்தர்ப்பங்களும் வருடாந்த பண்டக் கணிப்பீட்டுக்குரிய பற்றாக்குறைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 757(2) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டது.	பண்டங்கள் எனவும்.	
(xv)	31 நிறுவனங்கள் / வைத்தியசாலைகள் மற்றும் பிரிவுகளுக்கு 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது கிடைத்திருந்த ரூபா 2,588.30 மில்லியன் பெறுமதியான பண்டங்கள் மற்றும் 30 நிறுவனங்கள் / வைத்தியசாலைகள் மற்றும் பிரிவுகளுக்கு கிடைத்திருந்த பெறுமதிகள் தொடர்பான தகவல்கள் காணப்படாத 2,057 சந்தர்ப்பங்கள் தொடர்பாக பண்டங்கள் முறைப் பிரகாரம் ஆவணப்படுத்தப்பட்டு அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	ஏனைய நிறுவனங்களில் இருந்து மாற்றப்பட்டுள்ள சொத்துக்கள். Transfer in இன் கீழ் New-Cigas முறைமையில் சொத்துக்கள் மொடியுலருக்கு உட்படுத்த வேண்டும் என பிரதான நிதி உத்தியோகத்தர் iii இன் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டிருந்த கடிதத்தின் மூலம் சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என.	அனைத்து நன்கொடைகளும் உரிய முறையில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(xvi)	2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றின் படி 2023 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 195,221.42 மில்லியன் தொகையாக காணப்பட்டது. எனினும், திறைசேரியின் அச்சுப் பதிவு, நிதியல்லாத சொத்துக் கணக்கின் மாதாந்த பொழிப்பு (SA 80) இல் 2023 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ஆரம்ப மீதி ரூபா 200,118.27 மில்லியன் தொகை காணப்பட்டது.	New-Cigas முறைமையின் வழுவொன்று காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததுடன், இந்தத் தவறினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என.	வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(xvii)	2022 ஆண்டின் திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் கணக்குக் கூற்று (SA 82) படி 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 200,118.27 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், 2023 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த அந்த அறிக்கையில் 2023 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு அந்தப் பெறுமதி ரூபா 195,221.42 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன்படி, ரூபா 4,896.85 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன், இந்த வித்தியாசத்திற்கான காரணம் விளக்கப்படவில்லை.	New-Cigas முறைமையில் 61 தகவல்களை ஒன்றினைக்கும் போது தொழில்நுட்ப வழு காரணமாக இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட வழுக்களை இனங்கண்டு சரி செய்தல் மேற்கொள்ளப்படுவது குறிப்பிட்ட வருடத்தின் பின்னர் வரும் வருடத்தில் ஆகும் எனவும். அவ்வாறு இனங்கண்டு சரி செய்யப்பட்ட போதிலும், அதனை பொதுவாக வழங்கப்பட்டுள்ள பழைய ஆண்டுகளுக்கான இறுதி அறிக்கைகள் தொடர்பான திருத்தங்கள் மேற்கொள்ளல் முறைமையினூடாக மேற்கொள்ள முடியாதெனவும்.	- மேற்படி -
(xviii)	2023 ஆண்டின் நிகழ்ச்சித் திட்டத்தின் படி செலவுக் கூற்று (படிவம் ACA 2(i)) மற்றும் திறைசேரி அச்சுப் பதிவு SA 10 இன் படி 2023 ஆண்டின் போது மூலதனச் சொத்துக்கள் தனதாக்கல் செலவுகள் ரூபா 11,605.50 மில்லியன் தொகை எனினும், திறைசேரியின் திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் கூற்று (SA 82) படி மீளாய்வாண்டின் போது சொத்துக்கள் கொள்வனவு செய்தல் ரூபா 3,698.37 மில்லியன் தொகையாக காணப்பட்டதால், சொத்துக்களின் கிரயம் ரூபா 7,907.13 மில்லியன் தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.	- மேற்படி -	- மேற்படி -
(xix)	அமைச்சின் நிதிக்கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 204,292.96 மில்லியன் தொகை எனினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த சுகாதார அமைச்சு மற்றும் அதற்குரிய 63 நிறுவனங்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான தகவல்களை காட்டக்கூடிய கணினி மென் பிரதியின் படி அந்தச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 215,870.86 மில்லியன் தொகையென	- மேற்படி -	- மேற்படி -

	காட்டப்பட்டடிருந்தது. அதன்படி, ரூபா 11,577.90 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.		
(xx)	2018 ஆண்டின் பின்னர் பேராதனை வைத்தியசாலை வளாகத்தில் சிறுநீரக சிகிச்சை அலகொன்று மற்றும் பேராதனை பல்கலைக் கழகத்தின் ஏற்பாடுகளின் கீழ் 03 மாடிகளைக் கொண்ட அறுவை சிகிச்கை வாட்டு தொடர் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த கட்டிடங்களின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.	பெறுமதி மதிப்பீடு மற்றும் அரச கணக்குத் திணைக்களத்தின் தீர்மானத்தின் படி இரண்டாம் சுற்று பெறுமதி மதிப்பீடு ஆரம்பிக்கும் வரை காத்திருக்கும் பதிவேட்டில் இருக்க நேரிட்டுள்ளது எனவும், எவ்வாறாயினும், இந்தக் கட்டிடத்தை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக தேவையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென.	சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும்.
(xxi)	2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் கணக்குக் கூற்று (SA 82 படி) மற்றும் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றின் நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா 204,292.96 மில்லியன் தொகையாக காணப்பட்ட போதிலும், 2024 ஆண்டின் திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் கணக்குக் கூற்று (SA 82 படி) 2024 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு அந்தப் பெறுமதி ரூபா 263,472.20 மில்லியன் தொகையாக காணப்பட்டது. இதன்படி, ரூபா 59,179.24 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன், இந்த வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்வின் போது விளக்கப்படவில்லை.	இனங்காண முடியாத முறைமை வழுவொன்றின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததெனவும், 2023 ஆண்டில் இறுதிக் கணக்குகள் தொடர்புடைய தகவல்கள் உரிய முறையில் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காமையால் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குறிப்பிட்ட மீதிகள் சரியானவையல்ல எனவும், எனினும், 2024 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு குறிப்பிட்ட மீதிகள் 2024 திசெம்பர் 31 திகதி அனுப்பப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுவதனால், 2023 திசெம்பர் 31 திகதி மீதி மற்றும் 2024 ஜனவரி 01 திகதியிடையே மீதிகள் பொருந்தாமைகள் ஏற்பட்டிருந்தமை என.	வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கல்கள் மேற்கொண்டு 2025 ஆண்டிற்காக சரியான நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.
(xxii)	அமைச்சு மற்றும் அதற்குரிய நிறுவனங்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் காணப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் காட்டப்படும் கணினி மென் பிரதியின் படி 03 செயற்திட்டங்கள் தொடர்பாக காணப்பட்ட ரூபா 1,857.48 மில்லியன் தொகைக்கான நிதியல்லாத சொத்துக்கள் 2024 ஆண்டின் மென் பிரதியின் படி ஆரம்ப மீதியென	செயற்திட்டங்கள் தீர்த்துக்கட்டிய பின்னர் அங்கு செயற்படும் New Cigas முறைமையில் காணப்டும் சொத்துக்களுக்காக அடுத்த ஆண்டு இறுதிக் கணக்குகளுக்காக அனுப்புவதற்கு உத்தியோகத்தர் ஒருவர் காணப்படாமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது என.	பிழைகளை சரி செய்து 2025 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உள்ளடங்கப்பட்டிருக்கவில்லை.

(xxiii)	2024 ஆண்டின் திறைசேரி அச்சுப்பதிவு SA 10 இன் படி, 2024 ஆண்டின் போது மூலதனச் சொத்துக்களின் தனதாக்கல் செலவு ரூபா 15,723.34 மில்லியன் தொகை எனினும், திறைசேரியின் திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் கணக்குக் கூற்றின் (SA 82) படி மீளாய்வாண்டின் போது சொத்துக்கள் கொள்வனவு செய்தல் ரூபா 10,713.70 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் சொத்துக்களின் கிரயம் ரூபா 5,009.64 மில்லியன் தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	விஷேடமாக செயற்திட்டங்கள் மூலம் உருவாகின்ற நிதியல்லாத சொத்துக்கள் செயற்திட்டம் முடிவடையும் வரை கணக்கீடு செய்யும் சிக்கல்கள், சுகாதார அமைச்சுக்கு புறம்பான நிறுவனங்களில் இருந்து சுகாதார அமைச்சிற்காக மேற்கொள்ளப்படும் செலவுகளை கணக்கீடு செய்தலில் சிக்கல்கள், செலாவணி விகிதாரங்களில் மாற்றமடைவதில் சிக்கல்கள் காணப்படுகின்றதெனவும் இனங் காணப்பட்டுள்ளதுடன், அவற்றை அரச கணக்குத் திணைக்களத்துடன் கலந்துரையாடி சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கல்கள் மேற்கொண்டு 2025 ஆண்டிற்காக சரியான நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.
(xxiv)	அமைச்சின் நிதிக்கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்களின் கிரயம் ரூபா 254,485.18 மில்லியன் தொகை காணப்பட்டது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த சுகாதார அமைச்சு மற்றும் அதற்குரிய 61 நிறுவனங்களில் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பாக தகவல்கள் காட்டப்பட்டுள்ள கணினி மென் பிரதியின் படி காணப்பட்ட சொத்துக்களின் கிரயம் ரூபா 243,639.47 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன்படி, ரூபா 10,845.71 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.	- மேற்படி -	- மேற்படி -
(xxv)	கொவிட் 19 அவசர பதிலளித்தல் மற்றும் சுகாதார முறையை தயார் செய்தல் முன்றாம் மேலதிக நிதியளிப்புச் செயற் திட்டத்தின் நிதி ஏற்பாடுகளின் மூலம் 2022 ஆண்டின் போது ரூபா 173.13 மில்லியன் கிரயத்தையுடைய 6,800 லீற்றர் கொண்ட 3,764 வெற்று ஒக்சிஜன் சிலின்டர்கள் (Oxygen	உரிய தகவல்கள் இனங்காணப்பட்டு வருவதுடன், அவற்றை இனங்கண்டு எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	செயற்திட்டங்களின் கீழ் தனதாக்கப்பட்ட அனைத்து நிதியல்லாத சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட்டதென உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகள் விரைவாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

	Cylinder) கொள்வனவு செய்து வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்களின் கிரயம் அமைச்சின் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.		
(xxvi)	அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் 02 செயற்திட்டங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 46.44 மில்லியனிற்கான நிதியல்லாத சொத்துக்கள் காணப்பட்டதுடன், அந்த சொத்துக்கள் அமைச்சின் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.	சுகாதார அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டு செயற்திட்டங்கள் மூலம் உருவாகின்ற நிதியல்லாத சொத்துக்கள் செயற்திட்டம் முடிவடையும் வரை கணக்கீடு செய்யும் சிக்கல்கள், சுகாதார அமைச்சுக்கு புறம்பான நிறுவனங்களில் இருந்து சுகாதார அமைச்சிற்காக மேற்கொள்ளப்படும் செலவுகளை கணக்கீடு செய்தலில் சிக்கல்கள் செலாவணி விகிதாரங்களில் மாற்றமடைவதில் சிக்கல்கள் காணப்படுகின்றதெனவும் இனங் காணப்பட்டுள்ளதுடன், அவற்றை அரச கணக்குத் திணைக்களத்துடன் கலந்துரையாடி சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	- மேற்படி -
(xxvii)	நாவலப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலை 2023 ஆண்டின் போது மத்திய அரசிற்கு உரித்தாக்கப்பட்டதுடன், அதில் காணப்படுகின்ற அனைத்து நிதியல்லாத சொத்துக்களையும் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த புதிய CIGAS கணினி மென் பிரதியின் படி ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 5.17 மில்லியன் தொகை மாத்திரம் நிதியல்லாத சொத்துக்கள என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	ஆண்டின் போது கொள்வனவு செய்யப்படும் சொத்துக்கள், சொத்துக்கள் மொடியுலர் ஊடாக கணக்கீடு செய்வதற்கும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மற்றும் மானியமாக கிடைத்திருந்த நிதியல்லாத சொத்துக்களுக்காக உள்ளக விலை மதிப்பீட்டுக் குழுவொன்றூடாக நிதிப் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கும் அந்தத் தகவல்கள் New Cigas முறைமையில் உரிய முறையில் உட்படுத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என.	கணக்கீடு செய்யப்படாத அனைத்து சொத்துக்களையும் இனங்கண்டு கணக்கீடு செய்து 2025 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(xxviii)	2024 ஆண்டின் திரண்ட நிதியல்லாத சொத்துக் கணக்குக் கூற்றில் (SA 82) போக்குவரத்து உபகரணங்களின் கீழ் கப்பலில் என குறிப்பிட்டு ரூபா 1.15 மில்லியன் தொகை காட்டப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 382,440 தொகை மாத்திரம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு உரிய சொத்துக்கள் என கணினி மென் பிரதியில் அடங்கியிருந்தது. மீதியான ரூபா 764,880 இற்கான மீதி எந்த நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்கள் என கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த CIGAS மென் பிரதியின் மூலம உறுதிப்படுத்தப்படவில்லை.	தகவல்கள் கோருதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என.	சொத்துக்களை இனங்கண்டு அவற்றை உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகள் விரைவாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(xxix)	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சுகாதார அமைச்சு மற்றும் அதற்குரிய 63 வைத்தியசாலைகள் / நிறுவனங்களில் காணப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான தகவலகளை காட்டும் கணினி மென் பிரதியின் படி 27 வைத்தியசாலைகள் / நிறுவனங்களின் காணிகளை போலவே 04 வைத்தியசாலைகள் / நிறுவனங்களின் கட்டிடங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த சுகாதார அமைச்சு மற்றும் அதற்குரிய 61 வைத்தியசாலைகள் / நிறுவனங்களில் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான தகவல்களை காட்டும் கணினி மென்பொருள் பிரதியின் படி 05 வைத்தியசாலைகளில் காணிகளை போலவே, ஒரு வைத்தியசாலையில் கட்டிடங்களையும் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்காததுடன், கணக்கீடு செய்யப்பட்ட தகவல்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு	வைத்தியசாலை காணிகள் தொடர்பாக சில தகவல்கள் பல்வேறு தவிர்க்க முடியாத காரணங்களினால் கண்டறிய முடியாத நிலைமையொன்று இனங்காணப் பட்டுள்ளது எனவும், அந்தத் தகவல்கள் இனங் கண்டவுடன், விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி பூர்த்தி செய்தவற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	விரைவாக இந்த சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் அதனை உறுதி செய்யும் எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமர்ப்பித்திருக்கவில்லை.

(xxx) சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு நன்கொடையாக கிடைத்திருந்த கிரயம் / பெறுமதி உரிய முறையில் மதிப்பீடு செய்யப்படாத உபகரணங்கள் / பண்டங்கள் 97 வகையைச் சேர்ந்த 237 அலகுகளின் கிரயம் / பெறுமதி மற்றும் கிரயம் / பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட 07 வகையான உபகரணங்கள் / பண்டங்களைச் சேர்ந்த மொத்த கிரயம் / பெறுமதி ரூபா 2,219,825 தொகைக்கான 20 அலகுகள் நிதியல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.	நன்கொடைகளை பட்டியலிடும் போது பெறுமதிகள் உரிய முறையில் மதிப்பீடு செய்யப்படாமையால் Cigas கணக்கு முறைமைக்கு நன்கொடைகளை உட்படுத்த முடியாமல் உள்ளது எனவும், உரிய முறையில் பெறுமதிகளை மதிப்பீடு செய்த பின்னர் அந்த நன்கொடைகளை Cigaś முறைமைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கணக்கீடு செய்யப்படாத அனைத்து நன்கொடைகளையும் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்து 2025 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ரூபா 254,485.18 மில்லியன் தொகை மொத்தக் கிரயத்தையுடைய நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான விரிவான அட்டவணை, பண்டக் கணிப்பீட்டு அறிக்கை மற்றும் CIGAS நிகழ்சசித் திட்டத்தின் படி காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் மீதான தகவல்கள் முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட சொத்துக்கள் மீதிகளுடன் சீராக்கல் செய்திருந்த ரூபா 2.46 மில்லியன் தொகைக்கு, மீளாய்வாண்டின் போது சொத்துக்கள் கொள்வனவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 10,713.70 மில்லியன் தொடர்பானது போலவே ரூபா 19,703.18 மில்லியனிற்கான சொத்துக்கள் அப்புறப்படுத்தல் தொடர்பாக விரிவான அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் அந்தப் பெறுமதிகளை திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாமல் இருந்தது. இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த, வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த, சேவையை வரிதாக்கிய மற்றும் ஓய்வு பெற்றிருந்த 62 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட	இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ஆதனங்கள் மற்றும் வாகனக் கடன் தொடர்பான கோப்புக்களை விஷேட உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது எனவும், 2021 மற்றும் 2022 ஆண்டுகள் தொடர்பான தகவல்கள் அமைச்சின் கீழ் காணப்படும் அனைத்து மருத்:துவ நிலையங்கள், வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் செயற்திட்டங்களின் மூலம் பெற்றுக்கொண்டு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளமையால் மற்றும் நீண்ட காலம் ஒன்று எடுக்கின்றமையால் உரிய தகவல்கள் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றது எனவும், உத்தியோகபூர்வ போக்குவரத்து அலுவல்களுக்காக தனிப்பட்ட வாகனங்களை பயன்படுத்துவதற்றாக போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவு தொடர்பாக 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் தகவல்கள் விரைவாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என.	தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 42(அ) பிரகாரம் செயற்பட வேண்டும்.

வேண்டிக் காணப்பட்ட ரூபா 12.71 மில்லியன் தொடர்பான ஆதன / வாகன கடன் கோப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.
அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களின் பயன்பாடு தொடர்பாக செயலாற்றுகை மதிப்பாய்விற்கு தேவையான 2021, 2022 மற்றும் 2023 ஆகிய மூன்று வருடங்களுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்காததுடன், மேலும், பல்வேறு காரணங்கள் தொடர்பாக 36 தகவல்கள் கோரும் கடிதங்கள் அழைக்கப்பட்டு கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் 2024 ஏப்ரல் 11 திகதி அளவிலும் சமர்ப்பித்திருக்காமை அல்லது முழுமையான தகவல்கள் சமர்ப்பித்திருக்காமை ஆகிய காரணங்களினால் குறிப்பிட்ட பரப்பினை உரிய முறையில் கணக்காய்வு செய்வதற்கு முடியாமல் போனது. சில தகவல்கள் கோரும் கடிதங்கள் வழங்கப்பட்டு 40 மாதங்களை விட கூடிய காலம் கடந்திருந்தது.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு	**செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரைகள்**	**இந்த அறிக்கையின் பந்திகளுடன் தொடர்பு**
1.6.1(அ)(ஆ)(இ)	இந்தத் தவரினை சரி செய்து அடுத்த வருடத்திற்காக நிதிக்கூற்றுக்களில் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	1.6.1(அ)(i)(ii)(iii)
1.6.1(ஈ)(உ)(ஊ)	வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சிராக்கல் மேற்கொண்டு அடுத்த வருடத்திற்காக சரியான நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.	1.6.1(அ)(iv)(v)(vi)

1.6.1(எ)	சமர்ப்பிக்கப்படாத அனைத்து சொத்துக்களையும் இனங்கண்டு கணக்கீடு செய்து அடுத்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.	1.6.1(அ)(vii)
1.6.1(ஏ)	செயற்திட்டங்களின் கீழ் தனதாக்கிய அனைத்துச் சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட்டதென உறுதிப்படுத்தப்பட்ட எழுத்துமூல சான்றுகள் விரைவாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	1.6.1(அ)(viii)
1.6.1(ஐ)(ஒ)	வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சிராக்கல் மேற்கொண்டு அடுத்த வருடத்திற்காக சரியான நிதிக்கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	1.6.1(அ)(ix)(x)
1.6.1(ஓ)	செயற்திட்டங்களின் கீழ் தனதாக்கிய அனைத்துச் சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட்டதென உறுதிப்படுத்தப்பட்ட எழுத்துமூல சான்றுகள் விரைவாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும்.	1.6.1(அ)(xi)
1.6.1(ஔ)	விரைவாக இந்த சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	1.6.1(அ)(xii)
1.6.1(க)	இந்த பிழையினை சரி செய்து அதனை கணக்காய்விற்கு உறுதி செய்ய வேண்டும்.	1.6.1(அ)(xiii)
1.6.1(ங)	கணக்காய்வினால் வேண்டப்பட்டிருந்த தகவல்கள் அனைத்து நிறுவனங்களிலிருந்தும் பெற்றுக்கொடுக்க வேண்டியதுடன், அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக சரியான சீராக்கல் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ள வேண்டும். அதேபோல், கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் கிடைத்த பின்னர் முரண்பாடுகள், பற்றாக்குறைகள் மற்றும் காணாமல் போதல் ஏதும் காணப்படின் நிதிப் பிரமாணம் 757(2) பிரகாரம் செயற்பட வேண்டும்.	1.6.1(அ)(xiv)
1.6.1(ச)	அனைத்து நன்கொடைகளும் உரிய முறையில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.	1.6.1(அ)(xv)
1.6.1(ஞ)(ட)(ண)(த)	வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	1.6.1(அ)(xvi)(xvii)(xviii)(xix)
1.6.1(ந)	கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	1.6.1(அ)(xx)

3. நிதி மீளாய்வு

3.1 செலவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு		பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப் பிரமாணம் 50 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சரியான மற்றும் தத்துரூபமான மதிப்பீடு தயாரித்திருக்காததுடன், விபரங்கள் கீழே பின்வருமாறு ஆகும்.			
(அ)	2024 ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் 02 மீண்டுவரும் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 34 மில்லியனிற்கான மொத்த ஏற்பாடுகளும், நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 மூலம் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.	அமைச்சு 2023 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த வாடகை அடிப்படையில் பெற்றிருந்த வாகனங்களுக்காக மீண்டும் உடன்படிக்கையை புதுப்பிக்கும் நோக்கத்துடன், 2024 ஆண்டிற்கான மதிப்பீட்டு ஏற்பாடுகள் உட்படுத்தப்பட்டது எனவும், ஆனால் தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் படி செயற்பட்டமையால் தொழிற்பாட்டு குத்தகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளாமையால் மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டன என.	ஏற்பாடுகளின் பிரகாரம் சரியான மற்றும் தத்துரூபமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	2024 ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் முறையே மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவு விடயங்கள் 8 மற்றும் 3 இற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 10,115.50 மில்லியனிற்கான மொத்த ஏற்பாடுகளில் 65 சதவீதத்திற்கும் 97 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீதாசாரத்தினால் நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 மூலம் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.	வரைவு மதிப்பீட்டின் மூலம் விண்ணப்பிக்கப்பட்ட ஏற்பாடுகள் திறைசேரியின் மூலம் வழங்கப்படாமையால் அந்த செலவு விடயங்களுக்கு ஏற்பாடுகள் தேவைப்படுகின்றதெனவும், திறைசேரியினால் மேலதிக ஏற்பாடுகள் வேண்டப்பட்ட போதிலும், நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக வரிசை அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் மூலம் முகாமைத்துவத் செய்துகொள்ளும் படி அறிவிக்கப்பட்டதெனவும், இதன் காரணமாக செலவு விடயங்களில் ஏற்பாடுகள் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் அத்தியவசியமான செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டதெனவும்.	- மேற்படி -

(இ)	2024 ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் முறையே மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவு விடயங்கள் 10 மற்றும் 03 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த முறையே ரூபா 2,132.70 மில்லியன் தொகை ரூபா 24 மில்லியன் தொகையாக கூட்டுத்தொகை ரூபா 2,156.70 மில்லியன் தொகைக்கான ஏற்பாடுகள், குறைநிரப்பு மதிப்பீடு மூலம் நிதிப் பிரமாணம் 66 மாற்றங்களின் மூலம் மற்றும் முறையே 18.995 மில்லியன் தொகை மற்றும் 8,974.97 மில்லியன் தொகை என 100 சதவீதம் தொடக்கம் 3557 சதவீதம் வரையான விகிதாசாரத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது.	2024 பாதீட்டு பிரேரணை மூலம் அரச சேவையில் அதிகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு செலுத்துவதற்காக மேலதிக ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டது என. எனினும், அரசியல் மாற்றங்கள் காரணமாக பதவியணி மாற்றங்கள் மீது இந்த ஏற்பாட்டில் சேமிப்பொன்று ஏற்பட்டிருந்தது எனவும், வரைவு மதிப்பீட்டின் மூலம் அத்தியவசியமான செலவு விடயங்களுக்காக வேண்டப்பட்ட ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையினால் ஏற்பாடுகளை அதிகரித்துக்கொள்ள நேரிட்டதெனவும், ஜப்பான் எரிபொருள் உதவி இருப்புக் கணக்கு கணக்கீடு செய்வதற்காக பாராளுமன்றத்தினால் குறைநிரப்பு மதிப்பீடொன்றின் மூலம் ஏற்பாடுகள் வழங்கப்பட்டதெனவும்.	- மேற்படி -
(ஈ)	மீண்டுவரும் மற்றும் மூலதன செலவு விடயங்கள் முறையே 07 மற்றும் 21 உட்பட 28 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 9,385.40 மில்லியனிற்கான ஆரம்ப ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது.	அவ்வப்போது ஏற்பட்டிருந்த அரசியல் மாற்றங்கள் காரணமாக சீருடைகளுக்கு உரித்துள்ள உத்தியோகத்தர்கள் காணப்படாமை அமைச்சர் அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனம் காணப்படாமை, சுதேச வைத்திய பிரிவு சுகாதார அமைச்சுக்கு உரித்தான கட்டிடம் ஒன்றில் நிறுவப்பட்டிருந்தமையால் அந்த கட்டிடத்தின் நீர், மின்சாரம், சுத்தீகரித்தல் மற்றும் பாதுகாப்பு அலுவலக்கள் இந்த அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றதெனவும், மற்றும் பிரதி பணிப்பாளர் நாயகம் (குடும்ப சுகாதார) ஓய்வு பெற்றமையால் அந்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டது என.	- மேற்படி -
(உ)	மூலதன மற்றும் மீண்டுவரும் செலவு விடயங்கள் 48 மற்றும் 18 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 49,134.28 மில்லியனிற்கான ஆரம்ப ஏற்பாடுகளில் ரூபா 1,536.81 மில்லியன் தொகை ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்ட பின்னர் மீதியான ரூபா 47,597.47 மில்லியனிற்கான மொத்த தேறிய ஏற்பாடுகளில் ரூபா 33,271.33 மில்லியனிற்கான ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த சேமிப்பு தேறிய ஏற்பாடுகளில்	தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் படி செலவு மூகாமைத்துவத்திற்காக அறிவுரை வழங்கப்பட்டது எனவும், நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து வாகனங்களையும் காப்புறுதி செய்த பின்னர் இந்த ஏற்பாடுகள் சேமிப்பு காணப்படல், 2024 ஆண்டிற்கான மதிப்பீடு தயாரிக்கும் போது போக்குவரத்து படி பெற்றுக்கொள்ளும் 05 உத்தியோகத்தர் காணப்பட்டதுடன், அவர்களில் 03 உத்தியோகத்தர்கள்	- மேற்படி -

	50 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கு இடைப்பட்ட சதவீதத்தினை கொண்டிருந்தது.	மருந்து வகை மோசடியின் கீழ் சிறையிலிடப்பட்டமை ஆகிய காரணங்களினால் இந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டதென.	
(ஊ)	மீண்டுவரும் மற்றும் மூலதன செலவு விடயங்கள் 5 மற்றும் 4 என 9 செலவு விடயங்களுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப்பட்டிருந்த ரூபா 344.92 மில்லியன் தொகைக்கான மேலதிக ஏற்பாடுகளில் ரூபா 280.65 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த சேமிப்புக்களின் சதவீதம் மேலதிக ஏற்பாடுகளினல் 45 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.	ஏற்பட்டிருந்த அரசியல் மாற்றங்கள் காரணமாக இராஜாங்க அமைச்சுக்களை இலதாக்கப்பட்டதுடன், அமைச்சு அலுவலகங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததெனவும், சுத்தம் செய்தல் செலவு விடயத்திற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட போதிலும், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் துப்புரவு செய்தல் பில் பத்திரங்கள் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்கப் பெறாமையால் கொடுப்பனவு செய்ய முடியாமல் போனது எனவும், அந்த காரணத்தினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டது எனவும்.	- மேற்படி -

3.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிக்கூற்றுக்களின் படி அமைச்சுக்கு உரிய நிறுவனங்களினால் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக 34 செலவு விடயங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் மீதியை மிகைத்து ரூபா 2,616.17 மில்லியன் தொகைக்கான பொறுப்புக்களும் அணுகியிருந்தது.	சுகாதார சேவைகள் தொடர்ச்சியாக பேணிச் செல்லும் போது காணப்படுகின்ற ஏற்பாடுகள் தொடர்பாக விஷேடமாக கவனம் செலுத்துதல் செய்முறைசார் இயலாமல் உள்ளது எனவும், எவ்வாறாயினும், நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் ஏற்பாடுகளை மிகைத்து ஈடுபாட்டு பொறுப்புக்கள் ஏற்படுத்தக்கூடாது என அனைத்து சுகாதார நிறுவனங்களின் தலைவர்களுக்கும் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டதென.	நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும.
(ஆ)	வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் அடங்கிய அல்லது புதிதாக ஏற்படுத்தப்பட்டிருந்த செலவு விடயங்கள் அல்லாத, செயற்பாட்டு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 7 செலவு விடயங்களுக்கான கூட்டுத் தொகை ரூபா 5,469.26 தொகைக்கான பொறுப்புக்கள் காட்டப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் இவ்வாறாக தாமதங்கள் ஏற்படாதவாறு உரிய விடய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என.	ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்களை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ)	மீளாய்வாண்டின் போது அமைச்சின் நிதிக்கூற்றுக்களின் படி அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு காணப்பட்ட பொறுப்புக்கள் ரூபா 1,096.53 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அரச மருந்துப் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு எதுவித பொறுப்புக்களும் இல்லை என காட்டப்பட்டிருந்தது. எனினும், அந்த இரண்டு நிறுவனங்களினதும் 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் படி அமைச்சிலிருந்து பெற வேண்டிய தொகைகள் என முறையே ரூபா 38,317.97 மில்லியன் தொகை மற்றும் ரூபா 1,777.45 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் முறையே ரூபா 37,221.44 மில்லியனிற்காக மற்றும் ரூபா 1,777.45 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.	2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் படி மருத்துவ வழங்கல் பிரிவினால் செலுத்த வேண்டிய பெறுமதிகள் தொடர்பாக மருந்து வழங்கல் பிரிவிடம் வினவப்பட்டுள்ளதுடன், மருத்துவ வழங்கல் பிரிவு அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மருந்து வகைகளுடன் இணக்கம் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அந்த இணக்கம் முடிவடையும் வரை அந்தப் பெறுமதி தொடர்பாக அறுதியாக கருத்தொன்று தெரிவிக்க முடியாது என.	- மேற்படி -
(ஈ)	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் கொள்வனவு செய்திருந்த உயிரியல் மருத்துவ உபகரணங்களுக்காக 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 346.50 மில்லியன் தொகை செலுத்த வேண்டிய மீதி காணப்பட்ட போதிலும், 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் அந்தப் பெறுமதி பொறுப்புக்கள் என காட்டப்பட்டிருக்கவில்லை.	குறைபாடுகள் ஏற்படாதவாறு பொருப்பாக இருக்க வேண்டும் என உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது என.	- மேற்படி -

3.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு குறிப்பிட்ட காலப் பகுதியினுள் அனைத்து கணக்காளர் ஐயவினாக்களுக்கும் பதில் வழங்கப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அறிக்கையில் பந்தி 4.9 பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்திருக்கவில்லை.	கணக்காய்வு ஐயவினாக்களுக்காக அமைச்சு மற்றும் அதற்குரிய ஏனைய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு விளக்கங்கள் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், அவ்வாறு பதில் பெற்றுக்கொள்வதில் கால தாமதம் ஒன்று ஏற்படுகின்றதென.	அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் குறிப்பிட்ட காலப் பகுதியினுள் பதில் அனுப்பப்பட வேண்டும்.

3.4 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சுகாதார அமைச்சினால் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு 213 சந்தர்ப்பங்களில் மருத்துவ வழங்கல்கள் மற்றும் காகிதாதிகள் 65 விடயங்களைச் சேர்ந்த 216,094 அலகுகள் இலவசமாக வழங்கப்பட்டிருந்ததுடன், இந்த விடயங்கள் இலவசமாக வழங்குவதற்காக கிடைத்திருந்த முறையான அங்கீகாரம் / அங்கீகாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல், ஏதேனும், மருந்தொன்று அல்லது அறுவைசிகிச்சை உபகரணம் ஒன்று இலவசமாக வழங்கும் போது அந்த மருந்து அல்லது அறுவைச் சிகிச்சை பண்டம் நோயாளர்களுக்கு பணம் அறவிடப்படாமல் வழங்கப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்தும செய்முறையொன்று அமைச்சிடம் காணப்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்டது.	தற்போது தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றதெனவும், எதிர் காலத்தில் முன்னேற்றம் காட்டப்படும் எனவும்.	முறையான செய்முறையொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன், முறையான அங்கீகாரம் இன்றிய வழங்குதல்களுக்குரிய பணம் அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	நோயாளர் கண்காணிப்பு பாடநெறி ஒன்றிற்காக 06 தனியார் நிறுவனங்களினால் காலி தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்த வெளிநாட்டு மாணவர்களுக்காக வைத்தியசாலைக்கு செலுத்துவதற்காக அந்த தனியார் நிறுவனங்களினால் மாணவர்களிடம் அறவீடு செய்யும் கட்டணம் வைத்தியசாலைக்கு புறம்பாக தன்னார்வ அமைப்பொன்றினால் நிருவகிக்கப்படும், தர மேம்பாட்டு நிதியம் எனப்படும் நிதியமொன்றுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2020 முதல் 2024 வரையான காலப் பகுதியில் கூட்டுத்தொகை ரூபா 32.52 மில்லியன் தொகையொன்று இவ்வாறு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் கூட்டுத்தொகை ரூபா 31.88 மில்லியன் தொகைக்கான செலவொன்றும் அந்த நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	வெளிநாட்டு மாணவர்களுக்கு வசதி வழங்கும் அலுவல்களுக்காக அமைச்சினால் கொள்கைசார் இணக்கமொன்று வெளியிட்டிருந்த போதிலும், கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக வழிகாட்டல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை எனவும், அதன் காரணமாக வெளிநாட்டு மாணவர்களை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்களினால் தர மேம்பாட்டு மன்றத்திற்கு கிடைக்கக் கூடிய நன்கொடைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததெனவும், அந்த நன்கொடைகளும் வைத்தியசாலையின் அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டதெனவும்.	அமைச்சினால் இது தொடர்பான முறையான செய்முறையொன்று அறிமுகப்படுத்த வேண்டியதுடன், கிடைக்க பெறும் அனைத்துப் பணமும் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும்.

(இ)	பதுளை போதனா வைத்தியசாலை நிர்மாணிக்கப்படுகின்ற பத்து மாடிக் கட்டிடத்தின் நிர்மாண வேலைகளுக்காக மற்றும் நிர்மாண வேலை அலுவல்களில் ஈடுபடும் ஊழியர்களின் நுகர்வுக்குத் தேவையான நீர் பெற்றுக்கொள்வதற்காக வைத்தியசாலை நிருவாகத்தின் அங்கீ:காரம் இன்றி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 2020 ஜனவரி 30 திகதி முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2024 செப்தம்பர் 30 திகதி வரை வைத்தியசாலையின் குழாய் முறைமையின மூலம் நீர் பெற்றுக்கொள்வதன் மூலம் அரசுக்கு மேற்கொள்ள நேரிட்டிருந்த நிதிசார் நட்டம் ரூபா 506,100 தொகையாக காணப்பட்டது.	நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் 2024 ஆகஸ்ட் 24 திகதி வரை ரூபா 7,500 வீதம் ரூபா 496,802 இற்கான (வரியின்றிய) நட்டமொன்று ஏற்பட்டுள்ளதென குறிப்பிட்ட கம்பனிக்கு அறிவிக்கப்பட்டதெனவும், அதன்படி, இந்த கம்பனியினால் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் மேற்கூறிய விடயத்துக்கு இணக்கமின்மையை சுட்டிக்காட்டி கடிதம் ஒன்று அனுப்பியிருந்ததெனவும், அதன்படி, குறிப்பிட்ட கம்பனியுடன் கலந்துரையாடி பணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என.	குறிப்பிட்ட விடயங்களை கவனத்தில் எடுத்த பின்னர் அரசுக்கு அறவிடப்பட வேண்டிய அனைத்துப் பணத்தையும் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சிகிச்சை கழிவுப்பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கொடுப்பனவின் போது சிகிச்சை கழிவுப்பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு தேவையான கொள்களன்கள் ஒப்பந்தக்காரர்களினால் வழங்கியிருக்காத நிலைமையொன்று காணப்பட்ட போது, அது தொடர்பாக கவனம் செலுத்தாமல், 2017 ஜனவரி 01 திகதி முதல் 2019 மார்ச் 31 திகதி வரையான காலப் பகுதியினுள் சிகிச்சை கழிவுப் பொருட்கள் 1,012,139 கிலோ கிராமிற்காக ஒரு கி.கி. இற்காக ரூபா 28.24 தொகை என மொத்தம் ரூபா 28.58 மில்லியனிற்கான கொள்களன் கட்டணமும் உட்படுத்தி ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதேபோல், 2019 ஏப்ரல் 01 முதல் 2022 ஜூலை 31 திகதி வரையான காலப் பகுதியினுள் உண்மையாகவே சிகிச்சைக் கழிவுப் பொருட்கள் 2,628,815 தொகை அப்புறப்படுத்துவதற்காக 01 கி.கி. இற்கு ரூபா 3.81 தொகை வீதம் ரூபா 10.01 மில்லியனிற்காக கொள்களன் கட்டணமும் உட்படுத்தி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த மிகையாக செலுத்திய கொள்களன் கட்டணத்தை கிரயத்தை மீண்டும் அறவீடு	மிகையாக செலுத்திய பணம் தற்போது அறவிடப்பட்டுள்ளது என.	மிகையான செலுத்திய பணத்தை அறவீடு செய்தல் தொடர்பாக கணக்காய்விற்கு உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

செய்வதற்காக கணித்த போது ரூபா 10.38 மில்லியனிற்காக தொகையொன்று குறைவாக கணிக்கப்பட்டிருந்தது. அதேபோல், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2019 ஏப்ரல் 01 திகதி முதல் 2022 ஜூலை 31 திகதி வரையான காலப்பகுதி தொடர்பாக மாத்திரம் சிகிச்சைக கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக வைத்தியசாலையினால் கொள்வனவு செய்திருந்த கொள்களன்களுக்காக ரூபா 44.28 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், அக் காலப் பகுதி தொடர்பாக ஒப்பந்தக்காரரிடம் ரூபா 5.01 மில்லியன் தொகையொன்று மாத்திரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமையால் மேலும், அந்தக் காலப் பகுதி தொடர்பாக ரூபா 39.26 மில்லியன் தொகையொன்று அரசுக்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

(உ) அரச வைத்தியசாலைகளின் மூலம் பிரஜைகளுக்கு வழங்கப்படுகின்ற பணம் செலுத்தும் வாட்டு வசதிகள் மற்றும் இலங்கை அல்லாத ஆட்களுக்காக சுகாதார சேவைகளுக்காக கட்டணங்கள் அங்கீகரித்தல் தொடர்பாக சுகாதார அமைச்சரின் 2023 ஏப்ரல் 10 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பந்தி 2.1 இன் படி தற்போது காணப்படுகின்ற அறவீட்டு பொறிமுறை காலவதியாகியுள்ளது எனவும், வழங்கப்படும் சேவைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற கிரயம் மற்றும் அறவீடு செய்வதிடையே தெளிவான ஒவ்வாமையொன்று காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டுள்ளதெனவும், அந்த விஞ்ஞாபனத்தின் 2.2 இன் படி கட்டணத்தை திருத்தும் பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தும் தேவைப்பாடு காணப்படுகின்றதெனவும், அதற்காக சுகாதார அமைச்சின் குழுவொன்று நியமனம் செய்து முன்மொழியப்பட்ட முறையை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்க குறைந்த கிரயம்

இதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், குழுவின் பரிந்துரையின் படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என.

சேவை வழங்குவதற்காக அறவீடு செய்யும் கட்டணம் சுற்றறிக்கை அறிவுரைகளின் படி மற்றும் குறைந்த அளவு மேற்கொள்ளப்படும் கிரயத்தை அணவல் செய்யக்கூடியவாறு திருத்தப்பட வேண்டும்.

	அல்லது அணவல் செய்யும் கட்டண செய்முறையொன்று 2025 ஏப்ரல் 01 திகதி அளவிலும் செயற்படுத்தியிருக்கவில்லை என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கட்டணம் செலுத்தும் வாட்டுகளுக்காக கட்டணம் அறவீடு செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.		
(ஊ)	கண்டி தேசிய வைத்தியசாலையில் ரூபா 64 மில்லியனை விட கூடிய பெறுமதியொன்றினைக் கொண்ட 06 உயிரியல் மருத்துவ உபகரணங்கள் முறையான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளாமல் திருத்த வேலைக்காக வெளி முகவர் நிலையம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த உபகரணங்கள் 2024 செப்தம்பர் 19 திகதி அளவில் வைத்தியசாலையிலிருந்து வெளியில் எடுத்து செல்லப்பட்டு 01 மாதம் முதல் 18 மாதங்கள் வரை காலம் கடந்திருந்த போதிலும், திருத்த வேலை மேற்கொண்டு வைத்தியசாலைக்கு ஒப்படைத்திருக்காததுடன், அவற்றில் 04 உபகரணங்களுக்காக அந்த முகவர் நிலையத்தினால் ரூபா 10,254,110 இற்கான திருத்த வேலைக் கட்டணம் அறவீடு செய்திருந்ததுடன், மேலும், ரூபா 16 மில்லியனுக்கு அண்மித்த பெறுமதியுடைய 02 உபகரணங்களுக்காக ரூபா 11,254,840 இற்கான மதிப்பீடொன்று வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், அவ்வாறு முகவர் நிலையத்திற்கு வழங்கியிருந்த உபகரணங்களின் திருத்த வேலை தொடர்பாக தொடர் நடவடிக்கை அல்லது கண்காணிப்பொன்று மேற்கொண்டிருக்கவில்லை.	கையொப்பமிடப்பட்டுள்ள வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவை உடன்படிக்கையின் பிரதிகளை வழங்கும் படி பிரதி பணிப்பாளர் நாயகம் (உயிரியல் மருத்துவ பொறியியல்) இற்கு அறிவித்திருந்த போதிலும், இதுவரை உடன்படிக்கையின் பிரதிகள் அல்லது உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை எனவும் அறிவித்திருக்காததுடன், உயிரியல் மருத்துவ உபகரணங்கள் திருத்த வேலைக்காக அனுப்பும் போது மற்றும் அதன் பின்னர் முன்னேற்றத்தை தொடர்ச்சியாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் கண்காணிப்பிற்கும் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் மற்றும் அந்த பதவியணியினர் போலவே பிரிவிற்கு பொறுப்பான தாதிகளினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனவும், குறிப்பிட்ட உபகரணங்களின் திருத்த வேலை மேற்கொள்ளும் போதும், உதிரிப் பாகங்கள் தாய் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதுடன், சுங்க விடுவித்தல் செய்முறையில் சிக்கல்கள் நிலைமை காரணமாக தாமதமடைகின்றதென குறிப்பிட்ட நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது என.	திருத்த வேலைகளுக்காக நிறுவனங்களுடன் முறைப் பிரகாரம் உடன்படிக்கை மேற்கொள்வதற்கும் அது தொடர்பான தொடர் நடவடிக்கை விரைவாக மேற்கொண்டு கருமத்தை நிலைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	சிரிமாவோ பண்டாரநாயக பிரத்தியேக சிறுவர் வைத்தியசாலையில் 2005 ஆண்டு நிறுவப்பட்டிருந்த MRI ஸ்கேன் இயந்திரம் 2018 ஆண்டு சிலிண்டரொன்று மோதிய காரணத்தினால் ரூபா 15,812,500 தொகை செலவிடப்பட்டு திருத்த	இந்த திருத்த வேலை அலுவல் மற்றும் பராமரிப்பு மற்றும் சேவை உடன்படிக்கைக்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது, அமைச்சின் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் எனவும், முறையான ஒழுக்காற்று விசாரணையொன்று அமைச்சினால்	சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்கள் கவனயீனத்துடன் செயற்படக் கூடாது.

வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த திருத்த வேலை மேற்கொண்டு 05 நாட்களுக்கு பின்னர் அந்த இயந்திரம் திருத்த வேலை மேற்கொள்ள முடியாதவாறு செயற்படாதிருத்தல் தொடர்பாக வைத்தியசாலையினால் முரண்பாடான கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக முறையான விசாரணை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. அதேபோல், திருத்த வேலை மேற்கொள்ள முடியாதவாறு காணப்பட்ட இந்த இயந்திரம் கடந்த காலம் தொடர்பாக 2019 மார்ச் 18 திகதி சேவை உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டு அதற்காக ரூபா 3,632,720 தொகை சேவைக் கட்டணமொன்று கம்பனிக்கு செலுத்தியிருந்த பொதிலும், 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும், இயந்திரம் உரிய நிலைமைக்கு ஆக்கப்பட்டிருக்கவில்லை.

நியமனம் செய்யப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி, ஒரு நாள் சம்பளத்தை அறவீடு செய்யும் படி, ஒழுக்காற்றுக் கட்டளை விதிக்கப்பட்டிருந்ததெனவும், அந்த ஒழுக்காற்றுக் கட்டளையின் படி அறவீடு செய்து அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டதெனவும், அந்த ஒழுக்காற்றுக் கட்டளைக்கு மேன்முறையிடு செய்த காரணத்தினால் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் ஒழுக்காற்றுக் கட்டளையை திருத்தியிருந்ததெனவும், அதன்படி, அறவீடு செய்யப்பட்ட ஒரு நாள் சம்பளத்தை திருப்பிச் செலுத்தியிருந்ததெனவும், மேலும், இது தொடர்பாக விசாரணை ஒன்று இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனவும், மேலும், இந்த இயந்திரத்தை அப்புறப்படுத்துவதற்காக உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது எனவும்.

(ஏ) மருத்துவ வழங்கல் பிரிவினால் தரக் குறைவான மருந்துகள், அறுவை சிகிச்சை பண்டங்கள் மற்றும் ஆய்வுகூட பண்டங்கள் அப்புறப்படுத்துவதற்காக 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் போது முறையே ரூபா 109.75 மில்லியன் தொகை மற்றும் ரூபா 13.49 மில்லியன் தொகை உட்பட ரூபா 123.24 மில்லியன் தொகை தனியார் கம்பனியொன்றுக்கு செலுத்தியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) மருத்துவ வழங்கள் பிரிவினால் இந்த செலவுகளுக்காக 2023 வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்குவதற்கு அல்லது அதற்காக நிதிப் பிரமாணம் 68 இன் படி புதிய செலவு விடயம் ஒன்று ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை

பதிலளித்திருக்கவில்லை.

செலவுகள் மேற்கொள்வதற்கு முன்னர் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்குவதற்கு அல்லது நிதிப் பிரமாணங்களின் படி புதிய செலவு விடயம் ஒன்று

	எடுத்திருக்கவில்லை. அதன்படி, அப்புறப்படுத்தல் செலவு ஒக்சிஜன் வினைப்பொருட்கள் மற்றும் நுகர்வுப் பண்டம் கொள்வனவு செய்தல் செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.		ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	இது தொடர்பாக 2022 ஆகஸ்ட் 25 திகதி கூறுவிலைகள் அழைக்கப்பட்ட போதிலும், கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு கம்பனியினால் 2018 ஜுன் 26 திகதி முதல் 10 வருடங்கள் வரை சுகாதார அமைச்சு அந்த தனியார் கம்பனி மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடையே முத்தரப்பு உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டு வருகின்றதென அறிவித்தமையை அடிப்படையாகக் கொண்டு அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் அப்புறப்படுத்தல் அலுவல்கள் மேற்கொள்ளல் பொருத்தம் என தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தரக் குறைவான பயன்படுத்தப்படாத அறுவை சிகிச்சை பண்டங்கள் மற்றும் ஆய்வுகூட விடயங்கள் கிலோ கிராம் ஒன்றிற்காக உடன்படிக்கையினல் குறிப்பிடப்பட்டுள்ள தொகை (ரூபா 260) செலுத்துவதற்கும் அரச வாகனங்கள் காணப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் மேற்கு மத்திய மற்றும் தெற்கு மாகாணங்களைத் தவிர ஏனைய மாகாணங்களுக்காக 200 கிலோ மீற்றர்கள் அல்லது உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளில் ஆகிய இரண்டு தொகையில் குறைந்த தொகையின் செலுத்துவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.	- மேற்படி -	தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகைக் குழு உடன்படிக்கையின் விடயப் பரப்பில் அடங்கிய விடயங்களை பரிசோதனை செய்யாமல் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமையால் பொறுப்புக்களை புறக்கணித்தல் தொடர்பாக விசாரணையொன்று மேற்கொண்டு கணக்காய்விற்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்க வேண்டும்.

	.இதன்படி, குறைந்த விலை சமர்ப்பித்திருந்த விலைகூறல்தாரரின் கிலோ கிராமிற்கான ரூபா 99.84 இற்கு பதிலாக உடன்படிக்கை பெறுமதியாகிய கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 260 வீதம் செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. அங்கு உடன்படிக்கையின் மூலம் மேவகை செய்யப்பட்ட மாகாணங்கள் தவிர ஏனைய மாகாணங்களில் சிகிச்சை கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக அவுஸ்திரேலிய செயற்திட்டம் ஒன்றின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களை பயன்படுத்தல் தொடர்பாகவோ அல்லது ஏனைய மாகாணங்களுக்காக விலைகூறல் அழைக்கப்படாமல் மற்றும் உடன்படிக்கையின் விடயப் பரப்பினை பரிசோதனை செய்யாமல் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகைக் குழு குறிப்பிட்ட அங்கீகாரங்களை வழங்கியிருந்தது.		
(iii)	இதன்படி, முத்தரப்பு உடன்படிக்கையின் பந்தி III (a) இன் பிரகாரம் மேற்கு, மத்திய மற்றும் தென் மாகாணங்களின் சுகாதார அமைச்சுக்களின் கீழ் காணப்படும் வைத்தியசாலைகளின் சிகிச்சை கழிவுப்பொருட்கள் மற்றும் உடன்படிக்கை A-2 பட்டியலின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து மாகாணங்களும் வைத்தியசாலையின் சேகரமாகும் சயிடோடொக்ஸிக் (Cytotoxic) கழிவுப் பொருட்கள் அடங்கிய போதிலும், அதற்கு முரணாக மருத்துவ வழங்கல் பிரிவினால் மேற்கு, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்கள் தவிர ஏனைய மாகாணங்களில் சிகிச்சை	- மேற்படி -	அரசுக்கு குறைந்த செலவொன்று ஏற்படக்கூடியவாறு தீர்மானங்கள் எடுக்கப்படாமை தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு ஒழுக்காற்று செயற்பாடுகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	கழிவுப் பொருட்களின் அப்புறப்படுத்தல் அலுவல்களும் 33 சந்தர்ப்பங்களில் தனியார் கம்பனி ஒன்றிற்கு சாட்டப்பட்டிருந்தது. அதன்படி, 208,520 கிலோ கிராம் அப்புறப்படுத்துவதற்காக ரூபா 62,430,286 தொகை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அங்கு அந்தக் கழிவுப் பொருட்கள் சயிடொக்சிக் அல்லது சயிடொக்சிக் அல்லாதவை என வகைப்படுத்தியிருக்கவில்லை. எனினும், அந்தக் கம்பனியினால் வழங்கியிருந்த Clinical Waste Collection Document இன் படி இவற்றில் 18 நிறுவனங்களின் கழிவுப் பொருட்கள் காலவதியாகிய மருந்துகள் என காட்டப்பட்டிருந்தது.		
(iv)	2015 இன் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 3(ஆ) இன் படி மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் தடை செய்யப்பட்ட உற்பத்திகளை அப்புறப்படுத்தல் தொடர்பான அனைத்து விடயங்களுக்குமாக மத்திய வழிகாட்டியாக செயற்படுதல் அதிகார சபையின் பிரதான குறிக்கோளாக காணப்பட்டதுடன், அதற்கு இணங்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் காலவதியாகிய மற்றும் தேவையற்ற மருந்துகளை அப்புறப்படுத்தல் தொடர்பாக வழிகாட்டல் கோவையொன்று 2021 பெப்ரவரி 01 திகதி வெளியிடப்பட்டிருந்தது. அதன்படி, மருந்துகளை அப்புறப்படுத்தல் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் அதிகாரம் அளிக்கப்பட்ட	இந்த செய்முறையின் போது அப்புறப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது அந்த அதிகார சபையின் மூலம் அகற்றுவதற்காக விதிக்கப்பட்ட மருத்துவ வழங்கல்கள் எனவும், இந்த செய்முறை மேற்கொள்ளப்பட்டது, சுகாதார அமைச்சின் மூலம் எனக் காணப்படுவதால் அதிலிருந்து விலகுவதற்காக அந்த அதிகாரசபையின் இணங்கத்துடன் மேற்கொள்ளப்பட்டதெனவும், அதன்படி, சட்டத்தின் தேவைப்பாட்டினை நிறைவேற்றுதல் இந்த செய்முறையில் தேவைப்படவில்லை எனவும், அதற்கு தேவையான அங்கீகாரம் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் மூலம் அப்புறப்படுத்தல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது எனவும், அதன்படி, அப்புறப்படுத்தப்பட்ட மருத்துவ வழங்கல் தொடர்பான விபரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் அவற்றை இணங்கியவாறு	2015 இன் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும்.

உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அப்புறப்படுத்துவதற்கு முன்னர் அதிகாரசபையின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும், மருத்துவ வழங்கல் பிரிவினால் மருந்துகள் அப்புறப்படுத்தல்கள் மேற்கொள்ளும் போது தேசிய மருந்துக்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் அந்த அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்குப் பதிலாக ஒவ்வொரு நிறுவனங்களின் அப்புறப்படுத்தலுக்காக நாட்கள் ஒதுக்கும் கடிதங்களின் பிரதிகள் அதற்குரிய விபரங்களை உட்படுத்தி அழித்தல் தொடர்பான சான்றிதழ் (Destruction Certificates) தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	ஒப்புக்கொள்ளப்பட்டது எனவும்.	

3.5 மோசடித் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அமைச்சின் பணிப்பாளர் (தகவலகள்) என கடமையாற்றும் மருத்துவ உத்தியோகத்தரினால் இரண்டு கடவுச்சீட்டுக்கள் பயன்படுத்தி மேற்கொண்டிருந்த வெளிநாட்டு பிரயாணங்கள் தொடர்பாக குடிவரவு குடியகழ்வு திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுடன் உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோப்பினை பரிசோதனை செய்த போது உத்தியோகத்தரின் 2013 ஜனவரி 21 திகதி முதல் 2024 ஜூலை 12 திகதி வரையான 18 வெளிநாட்டு பிரயாணங்களுக்காக	பதிலளித்திருக்கவில்லை.	முழுமையான முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் அவரின் தனிப்பட்ட கோப்பில் உட்படுத்தியிருக்கவில்லை.
உத்தியோகத்தருக்கு 2015 நவம்பர் 27 திகதி முதல் 2015 திசெம்பர் 07 திகதி வரை விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரின் சுகவீன நிலைமை காரணமாக இலங்கைக்கு வருகை தந்து 2015 திசெம்பர 03 திகதி மீண்டும் கடமைக்கு வந்திருந்தமையால் விடுமுறை 2015 நவம்பர் 27 முதல் 2015 திசெம்பர் 03 திகதி என குறிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் உத்தியோகத்தர் உண்மையாகவே இலங்கைக்கு 2015 நவம்பர் 27 திகதியே வந்திருந்தார். மேலும், உத்தியோகத்தருக்கு அனுமதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு விடுமுறை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னர் வெளிநாடு சென்றிருந்த சந்தர்ப்பங்களும் மற்றும் விடுமுறை முடிவடையும் திகதியின் பின்னர் இலங்கைக்கு வந்திருந்த 20 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டதுடன், அந்த வித்தியாசங்களுக்கான முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கு சொந்தமான PD – 0736 இலக்கம் கொண்ட வாகனத்தின் சம்பவக் குறிப்பேட்டின் படி 2023 மார்ச் 04 திகதி ரூபா 245,741.57 கிரயத்தையுடைய Ferentino இனத்தை சேர்ந்த 04 டயர்கள் வாகனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2024 மார்ச் 19 திகதி 04 டயர்கள் வழங்குமாறு சாரதியினால் வேண்டப்பட்டிருந்ததுடன், பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் அதனை அங்கீகரித்திருந்தது. வாகனத்தின் சம்பவக் குறிப்பேட்டின் படி 2024 செப்தம்பர் 30 திகதி (திகதி 2024 செப்தம்பர் 30 திகதியா 2024 ஏப்ரல் 30 திகதியா என தெளிவாக காணப்படவில்லை) ரூபா 193,520 தொகை கிரயத்தையுடைய Farroad இன 04 டயர்கள் வாகனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த டயர்கள் கொள்வனவு தொடர்பாக 2023 மார்ச் 04 திகதிய பில்பத்திரம் போக்குவரத்து பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது எனவும், சரியாக டயர் பொருத்தப்பட்டதென தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரையின் பின்னர் சம்பவக் குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டு வழங்கல் பிரிவிற்கு அனுப்பப்பட்டது எனவும், 2024 ஏப்ரல் 30 திகதிய பில்பத்திரம் ஒன்று போக்குவரத்துப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது எனவும், அதன்படி, டயர் பொருத்தப்பட்டதென தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் பரிந்துரைக்கப்பட்ட பின்னர் பில்பத்திரம் வழங்கல் பிரிவிற்கு அனுப்பப்பட்டதெனவும், வாகனத்தினால் அகற்றப்பட்ட டயர்கள் போக்குவரத்துப் பிரிவான ஏற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்படாததுடன், டயர் பெற்றுக்கொண்ட திகதி 2024 செப்தம்பர் 30 திகதி என

மோசடிச் செயற்பாடுகள் ஏற்பாடுகள் ஏற்படாத முறையில் வாகனங்களின் பராமரிப்பு அலுவல்கள் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டினை அதிகரிக்க வேண்டியதுடன், இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

வழங்கப்பட்டிருந்த 2024 ஏப்ரல் 30 திகதிய கொள்வனவு பில் பத்திரத்தில் 2024 ஜுன் 25 திகதி களஞ்சியத்திற்கு டயர் இருப்புச் சான்றிதழொன்று அடங்கியிருந்தது. இது தொடர்பாக கணக்காளர் (வழங்கல்) இடம் 2025 மார்ச் 18 திகதி விசாரணை செய்த போது வாகனத்திலிருந்து அகற்றப்பட்ட டயர் களஞ்சியத்திற்கு ஒப்படைக்காத காரணத்தினால் கொடுப்பனவு செய்திருக்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்டது. இதன்படி, வாகனத்தின் சம்பவக் குறிப்பேட்டின் படி 2024 செப்தம்பர் 30 திகதி 04 டயர்கள் வாகனத்திற்கு பொருத்தப்பட்டது என குறிப்பிடப்பட்ட பதிவு மோசடித் தன்மையுடன் இடப்பட்ட பதிவொன்றெனவும், டயர் கொள்வனவு செய்யப்பட்டதெனவும் மற்றும் டயரை வாகனத்திற்கு பொருத்தி wheel alignment மற்றும் wheel balancing மேற்கொள்ளப்பட்டது என சமர்ப்பிக்கப்பட்ட கொள்வனவு பில் பத்திரம் மோசடித் தன்மையுடன் சமர்ப்பிக்கப்பட்ட பில்பத்திரம் ஒன்றென உறுதிப்படுத்தப்பட்டது.	மோசடியாக பதிவு செய்யப்பட்டதென குறிப்பிடப்பட்ட போதிலும், சம்பவக் குறிப்பேட்டில் குறிப்பிட்டுள்ள திகதி 2024 ஏப்ரல் 30 திகதியாக காணப்படுவதால், போக்குவரத்து பிரிவினால் மோசடியொன்று ஏற்பட்டிருக்கவில்லை என.	
(இ) மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையினால் நேரியல் முடுக்க சிகிச்சை இயந்திரமூடாக மேற்கொள்ளப்பட்ட கதிர் வீச்சு சிகிச்சைகளுக்காக கொடுப்பனவு செலுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.		
(i) நேரியல் முடுக்க சிகிச்சை இயந்திரத்தினூடாக ஒரு நோயாளருக்கு ஒரு தடவையில் வழங்கப்படுகின்ற சிகிச்சைக்காக சிகிச்சையளிக்கும் இரண்டு கதிர்வீச்சு நிபுணர்கள் போதுமானது என 2022 மார்ச் 15 திகதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையுடனான குழுவொன்றினால் உறுதிப்படுத்தியிருந்த போதிலும், சிகிச்சையளிக்கும் 03 கதிர்வீச்சு நிபுணர்களை	பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.	இந்தச் செய்முறை தொடர்பாக தெளிவான மற்றும் முறையான சுற்றறிக்கையொன்று புதிதாக வெளியிடப்பட வேண்டியதுடன், பிழையான தகவல்களை சமர்ப்பித்து பெற்றுருந்த கொடுப்பனவுகளை மீண்டும அறவீடு செய்வதற்கும், அந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு

	சேர்ந்து நோயாளிக்கு கதிர்வீச்சு சிகிச்சை விஷேடத்துவ வைத்தியர் தீர்மானித்த திசை (பரப்பு) அளவை விட மேலதிகமாக மேலும் 10 இடங்கள் அதனுடன் கூட்டி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், சில சந்தர்ப்பங்களில் ஒரு நோயாளருக்கு இரண்டு இடங்களில் கதிர்வீச்சு பரப்புக்கள் ஒரே தடவையில் வழங்கும் போது மேற்காட்டப்பட்ட மேலதிக 10 பரப்புக்கள் வெவ்வேறாக அந்த இரண்டு இடங்களுக்குமாக கூட்டி 20 பரப்புக்கள் என கணித்து கொடுப்பனவு செயய்யப்பட்டிருந்தது.		நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	ஆயடின் சிகிச்சை வழங்கும் போது இரண்டு சிகிச்கை கதிர்வீச்சு நிபுணர்கள் தொடர்புபடுத்தப்பபடுவதுடன், நோயாளிக்கு வழங்கப்படுகின்ற அயடின் வில்லை / திரவத்தில் அடங்கியுள்ள அயடின் மூலக்கூறு மிலி கியுரி எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு மிலி கியுரி 01 இற்கு ரூபா 22.50 தொகை வீதம் மேலதிக கடமை கொடுப்பனவு ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.	உரிய சுற்றறிக்கைகளுக்கு புறம்பாக செயற்பட்டிருந்தால் மேலதிக கொடுப்பனவு மேற்கொண்டிருப்பின் அவற்றை அறவீடு செய்வதற்கு இணங்கியிருப்பதுடன், உரிய அங்கீகாரத்தின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என.	- மேற்படி -
(iii)	நேரியல் முடுக்க இயந்திரங்கள் 2 (LA2) மற்றும் 3 (LA3) ஆகிய இயந்திரங்களில் முறையே 997 நோயாளர்களுக்கு மற்றும் 1283 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கியிருந்த போதிலும், கதிர்வீச்சு சிகிச்சை நிபுணர்களினால் மேலதிக கடமை கொடுப்பனவு பெற்றுக்கொள்ளும் போது அவ்வாறே சிகிச்சையளிக்கப்பட்ட நோயாளர்கள்	பதிலளிக்கப்படவில்லை.	- மேற்படி -

	எண்ணிக்கைகள் முறையே 1910 மற்றும் 2183 என பிழையான முறையில் பதிவு செய்து 28,126 மேலதிக பரப்புக்களுக்காக ரூபா 632,835 தொகை மிகைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.		
(ஈ)	2021 ஆண்டின் போது கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு சொந்தமான இரவலிக்கண்டம் **(Iravelikkandam)** எனும் காணிக்கு கூட்டுத்தொகை ரூபா 1,408,750 தொகைக்கான 575 கியுபிக் மீற்றர் மண் பரப்புவதற்காக ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை மேற்கொண்ட போதிலும், 2235.86 கியுபிக் மீற்றர் மண் பரப்பப்பட்டதென பணம் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, மதிப்பீட்டுப் பெறுமதியை விட 288 சதவீதம் மேலதிக கொடுப்பனவு மேற்கொண்டிருந்ததுடன், கணக்காய்வு உத்தியோகத்தரின் பங்குபற்றலுடன் 2025 மார்ச் 26 திகதி மேற்கொள்ளப்பட்ட ஒன்றிணைந்த பௌதீக பரிசோதனையின் போது 1779.6 கியுபிக் மீற்றர் மண் மாத்திரம் பரப்பப்பட்டிருந்ததென உறுதிப்படுத்தப்பட்டது. அதன்படி, 456.26 கியுபிக் மீற்றர் மண்ணிற்காக ரூபா 1,117,837 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல், பயன்படுத்தப்பட்ட மண் அங்கீகரிக்கப்பட்ட மண் எனவும் மற்றும் பயன்படுத்தப்பட்ட மண் உரிய முறையில் அடர்த்தியாக்கப்பட்டது (**compaction report)** எனவும், உறுதிப்படுத்தும் ஆய்வுகூட பரிசோதனை அறிக்கை பெற்றிருக்காமையால் மண்ணிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தக் கொடுப்பனவும் பிழையானது என அவதானிக்கப்பட்டது.	- மேற்படி -	முழுமையான விசாரணையொன்று மேற்கொண்டு மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையினை அறவீடு செய்வதற்கும், பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கும் செயற்பட வேண்டும்.

3.6 முற்பணங்கள் வழங்கல் மற்றும் தீர்த்தல்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரச உத்தியோகத்தரின் முற்பணம் 'பீ' கணக்கின் இணக்கக் கூற்று தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
(அ) 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சேவையில் ஈடுபட்டுள்ள 31 உத்தியோகத்தர்கள் தொடர்பாக 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கடன் மீதிகள் 2024 ஆண்டில் அறவீடு செய்திருக்கவில்லை.	உத்தியோகத்தரினால் பெற்றுக்கொள்ளாமல் அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்ட கடன் மீதிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், 07 உத்தியோகத்தர்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 1,622,188 தொகைக்கான இடர் கடன் தொகை 2024 ஆண்டின் போது மீண்டும் புதுப்படுத்தியுள்ளதெனவும், கூட்டுத்தொகை ரூபா 813,125 தொகைக்கான இடர் கடன் மீதி வெளிநாடு சென்றுள்ள இரண்டு உத்தியோகத்தர்கள் தொடர்பானதாகும். ஏனைய உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் அறவிடப்படாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என.	இந்த ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் கடன் மீதிகள் அறவீடு செய்யாமைக்கான காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஆ) 2024 இணக்கக்கூற்றின் இணைப்பு 03 இன் படி ஏனைய அரச அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட கடன்மீதி ரூபா 49.14 மில்லியன் தொகையாகும். 2004 ஒக்தோபர் 11 திகதிய 118 இலக்கம் கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்றுச் சென்று இரண்டு மாதங்களுக்குள் கடன்மீதி தீர்க்கப்படாவிடின் இடமாற்றம் பெற்றுச் சென்ற திணைக்களத்தில் குறிப்பிட்ட உத்தியோகத்தர் கடமையாற்றுகின்றாரா என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு அந்தத் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் அறிவித்து மூன்றாவது மாதத்தில் மாற்றம் வழங்கிய	2024 ஆண்டு இறுதியளவில் தீர்க்கப்படாமல் காணப்பட்ட ஏனைய அரச அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் இடமாற்றம் பெற்று வந்துள்ள உத்தியோகத்தர்களின் கடன்மீதிகள் தற்போது தீர்க்கப்பட்டுள்ளதுடன், புதிதாக இடமாற்றம் பெற்று சென்றுள்ள மற்றும் இடமாற்றம் பெற்று வந்துள்ள உத்தியோகத்தர்க்ளின் கடன்மீதிகள் 2020 ஆண்டு முதல் தலைமை அலுவலகத்திற்கு தருவித்துக்கொண்ட பின்னர் இணக்க அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றமையால், 2020 ஆண்டிற்கு பின்னர் இணக்கஞ் செய்யப்படாத கடன்மீதிகள் கணக்குகளில் காட்டப்பட்டிருக்காததுடன், 2020 ஆண்டிற்கு முன்னரான	தாபனக் கோவையின் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்று 03 மாதங்களுக்குள் கடன்மீதிகளை தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	திணைக்களத்தினால் மாதாந்த கணக்குப் பொழிப்பு மூலம் அந்த கடன் மீதியை அறவீடு செய்ய வேண்டியதுடன், மூன்று மாதங்களின் பின்னர் அந்த கடன் மீதிகளை காட்டாமல் இருப்பதற்காக பொறுப்பாக இருக்க வேண்டும். எனினும், 2024 திசெம்பர் 31 திகதி அளவில் சுகாதார அமைச்சு சேர்ந்த 61 நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் தொடர்பாக ரூபா 49.14 இற்கான கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. அதேபோல், தாபனக் கோவையின் அத்தியாயம் xxiv பிரிவுகள் 1:6 மற்றும் 1:7 இற்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இந்த கடன்பட்டோர் மீதிகளிடையே ரூபா 40.69 மில்லியன் தொகைக்கான கடன்பட்டோர் மீதிகள் 5 வருடங்களை விட பழமையான கடன்மீதிகளாக காணபபட்டதுடன், அவை மொத்தக் கடன்பட்டோர் மீதியின் சுமார் 83 சதவீதத்தை கொண்டிருந்தது. மீதியான கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 7.30 மில்லியன் தொகைக்கான கடன்பட்டோர் மீதிகள் 03 மாதங்களை கடந்துள்ள கடன்பட்டோர் மீதிகளாக காணப்பட்டது. இதன்படி, ஒட்டுமொத்த கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 47.99 மில்லியன் தொகை எனப்படும் 98 சதவீதமும் உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக ஏற்பட்டிருந்த கடன்மீதிகளாகும்.	கடன்மீதிகளில் முன்னைய தரவுகள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் இணக்க அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனவும், மாகாண சபைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன்மீதிகள் குறிப்பிட்ட மாகாண சபைகளுக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இடமாற்றம் பெற்று வந்துள்ள உத்தியோகத்தர் தொடர்பாக கடன்மீதிகள் ஏற்பாடுகள் விடுவித்த பின்னர் தற்போது தீர்க்கப்பட்டு வருகின்றதென.	
(இ)	அட்டவணை இலக்கம் 3.2.2 அடங்கியுள்ள 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 11.37 மில்லியனிற்கான கடன்பட்டோர் மீதி சுகாதார அமைச்சைச் சேர்ந்த வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன்பட்டோர் மீதியாகும். 2019, 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள்	உள்ளக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் வந்துள்ள உத்தியோகத்தர்களின் கடன்மீதிகள் 2020 ஆண்டு முதல் தலைமை அலுவலகத்திற்கு தருவித்துக்கொண்ட பின்னர் இணக்க அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றமையால், 2020 ஆண்டிற்கு பின்னர் இணக்கஞ் செய்யப்படாத கடன்மீதிகள் கணக்குகளில் காட்டப்பட்டிருக்காததுடன், 2020 ஆண்டிற்கு முன்னரான கடன்மீதிகளைமுன்னைய தரவுகள்	- மேற்படி -

	மூலம் இந்த நிலைமையை கவனம் செலுத்தப்பட்டதுடன், ஒரே செலவுத் தலைப்பில் காணப்படுகின்ற நிறுவனங்கள் இடையே கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகள் காணப்பட முடியாது. அதனால் கடன்பட்டோர் மீதி தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி பரிந்துரைக்கப்பட்ட போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி வரை இந்த கடன்பட்டோர் மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் இணக்க அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென.	
(ஈ)	சேவை இடைநிறுத்தப்பட்டிருந்து 195 உத்தியோகத்தர்களிடம் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன்மீதி ரூபா 9.95 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 7.31 மில்லியன் தொகை எனப்படும் 73 சதவீத கடன்மீதிகள் 05 வருடங்களை விட பழமையான கடன்மீதிகளாக காணப்பட்டதுடன், ரூபா 9.28 மில்லியன் தொகை எனப்படும் 93 சதவீதம் கடன்மீதிகள் ஒரு வருடத்தை விட பழமையான கடன்மீதிகளாக காணப்பட்டது.	சில கடன்மீதிகளை அறவீடு செய்வதற்காக சட்டப் பிரிவிற்கு மற்றும் மீதியான கடன் மீதிகளை உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கு, பிணையாளர்களுக்க பிரதேசங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் தகவல்கள் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது எனவும், மேலும், தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்ட பின்னர் மேலும் மீதியாக காணப்படின் ஏடுகளிலிருந்து பதிவளிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என.	தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டு கடன்மீதிகளை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	சேவையை விட்டுச்சென்றுள்ள 1224 உத்தியோகத்தர்களிடம் கூட்டுத்தொகை ரூபா 45.28 மில்லியன் கடன்மீதிகள் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 11.28 மில்லியன் தொகை எனப்படும் 25 சதவீத கடன்மீதிகள் 05 வருடங்களுக்கு மிகையான பழமையான கடன்மீதிகளாக காணப்படுவதுடன், ரூபா 25.11 மில்லியன் தொகை எனப்படும் 55 சதவீதக் கடன்மீதிகள் ஒரு வருடத்தை விட மிகையான பழமையான கடன்மீதிகளாகும்.	தனிப்பட்ட கோப்புக்களின் படி முகவரிகளில் வதியாமை, தற்போதைய முகவரி கண்டறிய முடியாமை, 10 வருடங்களுக்கு மிகையான காலம் சேவையை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு பிணையாளர்கள் காணப்படாமை ஆகிய காரணத்தினால் கடன்மீதியை அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்த காரணங்களின் 5 வருடங்களுக்கு மிகையான கடன்மீதிகளை காணப்படுகின்றதெனவும், மேலும், அமைச்சுக்கு சொந்தமான வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு நீண்ட கால கடன்மீதிகளை தீர்ப்பதற்குரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது	- மேற்படி -

		எனவும், தொடர்ந்தும் அறவிடப்படாமல் காணப்படின் ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென.	
(ஊ)	257 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன் தொகை ரூபா 18.22 மில்லியன் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 5.79 மில்லியன் தொகை எனப்படும் 32 சதவீத கடன்மீதி ஒரு வருடத்தை விட பழமையான கடன்மீதிகள் ஆகும்.	ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன்மீதிகளை குறைப்பதற்காக ஓய்வூதியத் திணைக்களத்தை அறிவுறுத்தி கடன்மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கை 05/2019 படி அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என.	- மேற்படி -
(எ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இறந்த உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன்தொகை 8.65 மில்லியனாக காணப்பட்டதுடன், அவற்றில் 29 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 1.72 மில்லியன் எனப்படும் 20 சதவீதக் கடன்மீதிகள் 05 வருடங்களுக்கு மிகையான பழைய கடன் மீதிகளாகும். தாபனக் கோவையின் அத்தியாயம் xxiv பிரிவு 4.4 முதல் 4.6 வரை இன் படி செயற்படாமையால் கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 4.77 மில்லியன் எனப்படும் 55 சதவீதம் ஒரு வருடத்திற்கு மிகையான கடன்மீதிகள் ஆகும்.	இறந்த உத்தியோகத்தர்களிடம் அனேக எண்ணிக்கையானவர்களின் மரண பணிக் கொடுப்பனவு இதுவரை தீர்க்கப்பட்டிருக்காமை மற்றும் உரிமையாளர்கள் முன்வராமையால் கோப்பில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால், அறவீடுகள் இதுவரை மேற்கொண்டிருக்காததுடன், அமைச்சுக்குச் சொந்தமான வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு நீண்ட கால கடன்மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது எனவும். தொடர்ந்தும் அறவிடப்படாமல் காணப்படும் மீதிகளை ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும்.	- மேற்படி -

3.7 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு CIGAS முறைமையின் படி வைப்புக் கணக்குப் பொழிப்பு மற்றும் சுகாதார அமைச்சின் தனிப்பட்ட கணக்குப் பொழிப்பு பதிவேட்டு இடையே ரூபா 10.58 மில்லியனிற்கான தேறிய	இந்த வித்தியாசத்திற்கான காரணம் 2016 ஆண்டின் பழைய பொது வைப்புக் கணக்கின் மீதிகள் அரச வருமானத்திற்கு செலவு வைக்கும் போது பழைய மீதிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றும் போது சிக்கல் தன்மைகள் ஏற்பட முடியும் எனவும், உச்ச மட்ட முயற்சியுடன் இந்த	இந்த வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டறிந்து விரைவாக தீர்க்க வேண்டும்.

வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.	வித்தியாசங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.	

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பொலன்னறுவ தேசிய சிறுநீரகவியல் விஷேட வைத்தியசாலையில் சிறுநீரக நோய்க்கான ஆய்வு மேற்கொள்வதற்காக ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவு நிறுவுவதற்காக சீனா அரசாங்கத்தினால் நன்கொடையாக கிடைத்திருந்த 20 வகையான உபகரணங்களுக்குரிய 55 அலகுகள் அந்தப் பிரிவுகள் நிறுவப்படாமையால் விளைவற்று வைத்தியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், விளைவற்று காணப்படும் இந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படாமையால், தொழில்நுட்ப ரீதியாக காலவதியாவதற்கு உரிய இயலுமை தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.	முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் ஆய்வுகள் மற்றும் ஆய்வுகூடம் ஆரம்பித்தல் தொடர்பாக ஆய்வுகூட பிரதிப் பணிப்பாளர் நாயகம் உட்பட பல்கலைக்கழக பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுள்ளது எனவும், இந்தக் கருமம் தொடர்ந்து நடைபெற்றிருக்காமையால் ஆய்வுகூடத்தில் காணப்படும் உபகரணங்களில் பயன்படுத்தப்படாத உபகரணங்களை வழங்குவதற்குரிய இடங்களை கண்டறிந்து அந்த வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை விரைவாக எடுக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என.	விளைவற்றுக் காணப்படும் உபகரணங்களை பயன்படுத்துதல் அல்லது தேவைப்பாட்டின் படி வழங்கக்கூடிய இடங்களை கண்டறிந்து வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	கேகாலை போதனா வைத்தியசாலையின் 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் போது முறையே அறுவைச் சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்டிருந்த நோயாளர்கள் 1794 மற்றும் 1436 பேர்களில் 732 மற்றும் 708 ஆக 50 சதவீதத்தை விட குறைவான நோயாளர்களுக்காக சத்திர சிகிச்சை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது.	2023 ஆண்டின் ஆரம்ப அரைப் பகுதி முதல் வைத்தியசாலையினால் வழங்கப்படுகின்ற கண் வில்லைகள் Cassette போதியளவு கிடைக்கப் பெறாமை, மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் பற்றாக்குறையாக காணப்படும் சந்தர்ப்பங்களில் அந்தப் பொருட்களை பெற்றுக்கொள்ள முடியாமையினால் 2023, 2024 ஆண்டுகளின் போது அறுவை சிகிச்சைக்காக பதிவு செய்திருந்த அனைத்து நோயாளர்களும் அறுவை சிகிச்சை மேற்கொள்ள முடியாமல் போனது என.	நோயாளர் அனுசரணை சேவைகள் உச்ச செயற்திறனுடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 எதிர்ப்பார்க்கப்பட்ட நலன்கள் (outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பொலன்னறுவை தேசிய சிறுநீரகவியல் பிரத்தியேக வைத்தியசாலையின் மருத்துவ தீவிர சிகிச்சை அலகில் கணக்காய்வுத் திகதியாகிய 2025 பெப்ரவரி 10 திகதி வரை 03 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், அந்த அலகு செயற்படு மட்டத்தில் காணப்படாததுடன், அதனை செயற்படு மட்டத்திற்கு மாற்றுவதற்காக பொறுப்பான தரப்பினரின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள மருத்துவ தீவிர சிகிச்சை அலகினை செயற்படுத்துவதற்கு தேவையான விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளார் என.	திட்டமிடப்பட்டவாறு எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் குறிப்பிட்ட காலத்தினுள் நிறைவேற்றிக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.3 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாமல் கைவிடப்படல்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சிலாபம் பொது வைத்தியசாலையில் ரூபா 1,170,171,946 இற்கான மதிப்பீட்டுத் தொகையொன்றுக்கு 2016 ஆண்டு முதல் 03 கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிர்மாண வேலைகள் 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு		
(அ) எதிர்பாராத விபத்து அலகொன்று நிரமாணிப்பதின் கடுமையான தேவைப்பாட்டினை கவனத்தில் எடுத்து ரூபா 501.21 மில்லியனிற்கான மதிப்பீட்டுத் தொகைக்கு 609 நாட்களுக்குள் பூர்த்தி செய்வதற்காக 2018 ஜனவரி 15 திகதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த நிர்மாண வேலைகள் 2024 ஆண்டு இறுதி அளவில் கைவிடப்பட்டிருந்தது.	ஒப்பந்தக்காரரினால் வேலைத்தளத்திற்கு எடுத்து வரப்பட்ட இரும்புக் கம்பிகள் தொடர்பாக ஏற்பட்டிருந்த சிக்கல் நிலைமையினால் நிர்மாண வேலைகள் கணிசமான காலம் செயற்படுத்தப்படாது இருந்ததெனவும், அது தொடர்பான விசாரணை முடிவடைந்த பின்னர் மீண்டும் ஒப்பந்தக்காரரினால் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்ட போதிலும், எதுவித முன்னறிவித்தலும் இன்றி வேலைத்தளத்தை விட்டு சென்றிருந்தமையால் மீண்டும் வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது	செயற்திட்டத்தின் வேலைப் பகுதிகளை பூர்த்தி செய்து விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		எனவும், 2025 ஆண்டிற்காக மீண்டும் வேலைகளை ஆரம்பிப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருந்தமையால் விரைவாகள நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.	
(ஆ)	அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் 2018 பெப்ரவரி 19 திகதி ஆரம்பிக்கப்பட்ட ரூபா 583.78 மில்லியனிற்கான மதிப்பீட்டுப் பெறுமதிக்கு 05 மாடிகளைக் கொண்ட மருத்துவ வாட்டு தொடர் கட்டிடங்கள் 2020 ஆண்டு இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், அதன் உடன்படிக்கைக் காலம் சுமார் 1700 நாட்களை மிகைத்திருந்தது.	கொரோனா தொற்றுநோயின் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் ஏற்பட்டிருந்த நிதித் தட்டுப்பாடு காரணத்தினாலும், நிர்மாண வேலைகளை இடைநிறுத்த நேரிட்டதுடன், அதற்காக 2022 ஜூன் 21 திகதிய அமப/22/0718/520/002 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் அறிவுரையின் படி தொழில் வழங்குனர், ஒப்பந்தக்காரர் ஆகிய இரு தரப்பினருக்கும் நட்டமொன்று ஏற்படாதவாறு நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டதுடன், 2025 ஆண்டுக்கான ஏற்பாடுகள் கிடைத்துள்ளதுடன், புதிய மதிப்பீடு அழைக்கப்பட்டுள்ளது என.	செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்து நோயாளர் அனுசரணை சேவைகளுக்காக பயன்படுத்த வேண்டும்.
(இ)	வைத்தியசாலையின் காணப்படும் கடின இட நெருக்கடிக்காக அறுவை சிகிச்சை கூடமொன்று மற்றும் தீவிர சிகிச்சை அலகொன்று மிக விரைவாக நிறுவ வேண்டிய தேவைப்பாடொன்றை கவனத்தில் எடுத்து சாதாராண கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்கு எடுக்கும் காலத்தினை குறைப்பதற்காக இரும்பை பயன்படுத்தி தற்காலிக கட்டிடம் ஒன்று 06 மாதங்களினுள் நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2024 ஆண்டு இறுதி அளவிலும், இந்த கட்டிடத்தின் 02 ஆவது மாடியின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த தாமதத்திற்காக ஒப்பந்தக்காரரின் கவனயீனம், திட்டம் தயாரிக்க முன்னர் தேவைப்பாட்டினை இனங்காணாமையினால் பின்னர்	அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண வேலைக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்பந்த வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவனத்தின் பொறுப்பற்ற தன்மை, கவனயீனத் தன்மையினால் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், எதிர் காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்காக இவ்வாறான நிறுவனங்களுக்கு ஒப்பந்த வேலைகள் ஒப்படைக்காமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது எனவும், எவ்வாறாயினும், தற்போது வைத்தியசாலையின் தேவைப்பாட்டின் படி இரண்டாம் மாடியை பூர்த்தி செய்வதற்கு திட்டம்	செயற்திட்டத்தின் சாத்தியக்கூறு ஆய்வின் பின்னர் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திட்டங்களை மாற்றுதல், நிர்மாணிக்கும் நிலம் தொடர்பாக சாத்தியக்கூறு ஆய்வொன்று இன்றி திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல், பில்பத்திரங்கள் கொடுப்பனவில் தாமதங்கள் ஆகிய விடயங்களில் காரணமாக இருந்தது. அதன் விளைவாக ரூபா 85.18 மில்லியன் தொகைக்கான இந்த நிர்மாண வேலை மதிப்பீட்டுச் செலவு ரூபா 131.95 மில்லியன் தொகை வரை அதிகரிக்கும் படி ஒப்பந்தக்காரர் 2021 மே 31 திகதி வேண்டியிருந்தார்.	தயாரிக்கப்பட்டு வருகின்றதென.	

4.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மாகாண சபை ஏற்பாடுகள் மீது 2016 நவம்பர் 01 திகதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு மதிப்பீட்டுத் தொகை ரூபா 218.44 மில்லியனிற்கான எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு காணப்படும் கட்டிடத்தின் வேலை 2018 திசெம்பர் 31 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், தரை மாடியின் 30 சதவீத அளவு நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டிருந்தது.	வெளி நோயாளர் பிரிவின் இறுதி முடிவில் தரைமாடி மற்றும் முதலாம், இரண்டாம் மாடிகளின் மீதியான நிர்மாண வேலைகளை ஆரம்பிக்கப்பதற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், சப்ரகமுவ மாகாண பொறியியலாளர் சேவை அலுவலகத்தினால் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும், மீதியான பெறுகைகளுக்காக தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என.	செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்து ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு பொறுத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.5 பெறுகைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சுகாதார அமைச்சுக்கு சொந்தமான KP-0050 இலக்கம் கொண்ட (Land Rover Discovery 04) வாகனத்தில் உள்நாட்டு முகவர் நிறுவனத்தினால் 2022 ஒக்தோபர் 11 சமர்ப்பித்திருந்த ரூபா 1,995,655 இற்கான மதிப்பீட்டின் மீது திருத்த வேலை மேற்கொள்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 02 திகதி இந்த வாகனம் திருத்த வேலைக்காக	மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்த வேலைகளுக்கான பில்பத்திரங்களுக்கான கொடுப்பனவு மேற்கொண்ட பின்னர் வாகனத்தை எடுத்து வரல் மேற்கொள்ள வேண்டியதுடன், முகவர் நிறுவனத்தின் மூலம் இறுதி பில்பத்திரம் சமர்ப்பிக்காமையால் வாகனத்தை எடுத்து வருவதற்கு முடியாமல் இருந்தது எனவும், இந்த வாகனம் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக	முறையான விசாரணையொன்று மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று செயற்பாடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உள்நாட்டு முகவர் நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவனத்தினால் 2022 திசெம்பர் 16 திகதி ரூபா 2,124,076 இற்கான புதிய மதிப்பீடொன்று சமர்ப்பித்திருந்தது. 2023 பெப்ரவரி 13 திகதி முகவர் நிறுவனத்தினால் ரூபா 420,668 இற்கான மேலதிக மதிப்பீடொன்று சமர்ப்பித்திருந்ததுடன், 2023 பெப்ரவரி 27 திகதி அதற்கான அங்கீகாரம் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. மீண்டும் 2023 ஆகஸ்ட் 17 திகதி ரூபா 11,927,210 இற்கான மதிப்பீடொன்று மேலதிக சமர்ப்பித்திருந்ததுடன், அதனை பரிசோதனை செய்த போக்குவரத்து முகாரி மற்றும் இயந்திரப் பொறியியலாளரினால் அந்த வாகனத்தை அமைச்சுக்கு எடுத்து வருவதற்கான பரிந்துரை அவர்களின் திகதி குறிப்பிடப்படாத கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், பொறுப்பான உத்தியோகத்தர்கள் அது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்காததுடன், மீண்டும் 2024 பெப்ரவரி 19 திகதி போக்குவரத்து உத்தியோகத்தரினால் அறிக்கையொன்று பணிப்பாளர் (போக்குவரத்து) இற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலமும் திருத்த வேலைகள் உதிரிப்பாதங்கள் பொருத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும், வழங்கப்பட்டுள்ள பில்பத்திரத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

விரைவாக திருத்த வேலை மேற்கொண்டு ஒப்படைக்க வேண்டிய வாகனமொன்று என செயற்பட்டிருந்த போதிலும், சாரதியினால் 2022 ஜூலை 28 திகதி அறிவிக்கப்பட்டிருந்த கோளாறுகளை திருத்த வேலை மேற்கொண்டு வாகனத்தை அமைச்சுக்கு ஒப்படைப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு மிகையான காலம் தீர்மானம் ஒன்று எடுப்பதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த குழுவின் தீர்மானம் கிடைத்த பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எஞ்சின் கொள்திறன் 2300cc ஐ விட மிகையான வாகனங்களை ஏலவிற்பனை செய்தல் அரசின் கொள்கைசார் தீர்மானம் ஒன்றாக காணப்படுவதனால் அதன்படி, இந்த வாகனத்தை ஏலவிற்பனை செய்வதற்காக அனுப்பப்படவுள்ளது.

	எடுக்கப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் வரை முடியாமல் இருந்தது.		
(ஆ)	கண்டி தேசிய வைத்தியசாலையில் பச்சையுணவு மதிப்பீடு தயாரிக்கும் போது 2022 / 2023 ஆண்டில் ரூபா 380.92 மில்லயனினால் மற்றும் 2023 / 2024 ஆண்டுகளினால் ரூபா 260.41 மில்லியனினால் மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் அந்த விலைகூறலுக்காக செயலாற்றுகை பிணைமுறி கூடிய பெறுமதியொன்றில் காணப்பட்டதால் ஏனைய போட்டி விலைகூறல்தாரர்கள் சமர்ப்பிக்கக்கூடிய விலைகூறல்தாரர்கள் தைரியத்தை இலக்கக்கூடிய இயலுமை காணப்பட்டது.	2022 / 2023 மற்றும் 2023 / 2024 ஆண்டுகளைப் போலவே அதற்கு முன்னை ஆண்டுகளிலும், பச்சையுணவுக்காக மதிப்பீடு தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த குறைபாடுகள் பலவீனங்கள் போலவே மிகை மதிப்பீடுகள் காணப்பட்டது என, எனினும், தற்போது உணவு முகாமைத்துவக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு நிலவிய மிகை மதிப்பீட்டு நிலைமையினை சரி செய்து 2024 / 2025 ஆண்டிற்காக உணவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என.	தத்துரூபமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மிகவும் போட்டித் தன்மையான விலைகூறல்கள் பெற்றுக்கொள்வதற்கும் மிகை மதிப்பீடு தயாரித்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று செயற்பாடுகள் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	சிரிமாவோ பண்டாரநாயக பிரத்தியேக சிறுவர் வைத்தியசாலையால் வழங்கப்படும் சேவைகளை கணினிமயப்படுத்துவதற்காக **E-Health System** நிகழ்ச்சித் திட்டமொன்று நிறுவுவதற்காக 02 சந்தர்ப்பங்களில் கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்ததுடன், இரண்டாவது சந்தர்ப்பத்தில் ரூபா 19.49 மில்லியன் தொகை (வெட் இன்றிய பெறுமதியொன்றிற்காக அதாவது ஆரம்ப சந்தர்ப்பத்தை விட ரூபா 879,105 இற்கான கூடிய விலையொன்றுக்கு மற்றும் ஆரம்ப சந்தர்ப்பத்தில் 05 வருடங்களுக்கு திருத்த வேலைகள் மற்றும் புணரமைப்பு வேலைகள் கட்டணமின்றி 25 வருடங்கள் உத்தரவாத காலம் என காணப்பட்ட அநுகூலமான நிலைமைக்கு பதிலாக 03 வருட உத்தரவாத காலமும் மற்றும் உத்தரவாத காலத்தின் பின்னர் 10 வருடங்களுக்காக ரூபா 3,500,000 இற்கான தொகைக்கு பராமரிப்பு மற்றும் சேவைகள் 10 வருடங்கள் என அரசிற்கு பிரதிகூலமான முறையில்	தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரையின் படி பதிலளித்திருந்த குறைந்த விலைகூறல்தாரருக்கு ஒப்பந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருந்ததால் அரசுக்கு உச்சமட்ட அனுகூலம் என பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்ததெனவும், முதலாவது விலைகூறலுக்காக வழங்கியிருந்த உத்தரவாத நிபந்தனைகள் இரண்டாவது விலைகூறலுக்காக வழங்கப்பட்டிருந்ததெனவும், அதன்படி, இரண்டு சந்தர்ப்பங்களிலும் Passive Item களுக்காக 25 வருட உத்தரவாத காலம் வழங்கப்பட்டது எனவும், ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்ய முன்னர், அதாவது 2019 நவம்பர் 19 திகதிக்கு முன்னரும் அதன் பின்னரும் வைத்திசாலைக்கு பொருத்தமான நிகழ்ச்சித் திட்டமொன்று நிறுவுதல் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் படி அமைச்சினால் வேண்டிடப்பட்டிருந்ததெனவும்,	சுயாதீனமான விசாரணையொன்று மேற்கொள்ள வேண்டும்.

	ஒப்பந்த வேலை சாட்டப்பட்டிருந்தது. அதேபோல், எவ்வாறாயினும், 2019 நவம்பர் 19 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்த இந்த செயற்திட்டத்தை 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் செயற்படுத்துவதற்கு எதுவித திட்டமும் தொழிநுட்ப உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படாமல் முழுமையாக செயலிழந்து காணப்பட்டது.	இந்த முறைமையை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல் சுகாதார அமைச்சின் அங்கீகாரத்தின் மீது மாத்திரம் காணப்பட்டதால் எமது வைத்தியசாலையினால் நேரடியாக நிலைவேற்ற முடியாதெனவும், சுகாதார அசைமச்சின் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டிருந்த அறிக்கையின் படி fire wall துணைக் கருவியின் அனுமதிப்பத்திரத்தை புதுப்படுத்தாமையால் அதன்மூலம் வழங்கப்படுகின்ற சேவைகள் ஒரளவு மேற்கொள்ளப்படாததுடன், அது முழுமையாக செயற்படாதுள்ளது என்பதல்ல.	
(ஈ)	சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் 2015 மே 28 திகதிய 01-21/2015 இலக்க பொதுச் சுற்றறிக்கையின் பந்தி 6.1 இன் படி வைத்தியசாலைகளில் கனிஷ்ட ஊழியர்களின் பகல் உணவு அல்லது இரவு உணவு என ஒரு உணவு வேளை உட்படக் கூடியவாறு அரை உணவுச் சுற்றொன்று வழங்க வேண்டியிருந்த போதிலும், இந்த பெறுகை தொடர்பாக மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருந்த விலைகூறல் பத்திரத்தின் கனிஷ்ட ஊழியர்களுக்காக வழங்கப்படுகின்ற உணவுச் சுற்றொன்று என்பதற்கு இரவு மற்றும் பகல் உணவு என 02 உணவு வேளைகள் என உட்படுத்த வேண்டும் என பிழையாக காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக தெரிவு செய்யப்பட்ட வழங்குனரினால் அரை உணவுச் சுற்றுக்காக கூடிய கூறுவிலைகள் காட்டப்பட்டு விலைகூறல் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததென மத்திய மாகாணத்தின் மத்திய அரசின் ஏனைய	உணவு வழங்கல் ஒப்பந்த வேலை தொடர்பாக விலைகூறல் பத்திரம் இந்த அரை உணவு சுற்று ஒரு உணவு வேலை என திருத்தப்பட்டு விலைகூறல் பத்திரம் திருத்தப்பட்டு 2024.07.23 திகதிய திருத்திய பெறுகை தீர்மானத்திற்கு அணுகியிருந்ததெனவும், அந்த திருத்திய பெறுகை தீர்மானமும் சுகாதார அமைச்சின் பெறுகை (ஸீ) குழுவினால் 2024 ஒக்தோபர் 16 திகதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்ததென.	பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் கவனத்துடன் செயற்பட வேண்டியிருந்ததுடன், கவனையீனத்துடன் செயற்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வைத்தியசாலைகளில் கூறுவிலைகளில் ஒப்பீடு செய்யும் போது அவதானிக்கப்பட்டது. அதன்படி, வழங்கப்பட்ட ஒரு உணவு வேளைக்காக இரண்டு உணவு வேளைக்கான பணம் செலுத்தப்பட்டமையால் 2024 ஜனவரி 01 திகதி முதல் 2024 ஏப்ரல் 31 திகதி வரையான 04 மாத காலப் பகுதிக்காக ரூபா 3,695,875 தொகையினை அண்மித்த மிகை கொடுப்பனவு ஒன்று ஏற்பட்டிருந்தது. 2024 ஆண்டின் மீதியான 08 மாதங்களுக்காக ரூபா 7,391,750 தொகையை அண்மித்த மிகைக் கொடுப்பனவொன்று ஏற்படக் கூடியதாக உள்ளது.

(உ) ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலை சுத்திகரிப்புச் சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) குறிப்பிட்ட விலைகூறல் நிபந்தனைகளின் பிரகாரம் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் நியமங்களுக்கு இணங்கியுள்ளது என கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ITI) மூலம் உறுதிப்படுத்தப்பட்ட இரசாயனப் பண்டங்கள் அவற்றில் அடங்கியுள்ள இரசாயன இணைவு மற்றும் எண்ணிக்கை என்பன முறைப் பிரகாரம் குறிப்பிடப்பட்ட அச்சிடப்பட்ட பொதிகளுடன் வழங்கப்பட வேண்டியதுடன், வழங்கும் நிறுவனத்தினால் வைத்தியசாலைக்கு வழங்கியிருந்த சுத்திகரிப்பு இரசாயன பண்டங்களின் உற்பத்தித் திகதி, காலவதியாகும் திகதி, தொகுதி இலக்கம் மற்றும் எண்ணிக்கை என்பன கையினால் எழுதப்பட்டு பொதிகளில் மற்றும் பொதி

2024 திசெம்பர் 31 திகதிய கடிதத்தின் மூலம் ஒப்பந்த கம்பனியில் காணப்படும் குறைபாடுகளை ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் சரி செய்யுமாறு அறிவுரை வழங்கப்பட்டது என.

விலைகூறல் நிபந்தனைகளுக்கு முரணாக செயற்படுதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	செய்யப்படாத பொதிகளில் இரசாயன பணடங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் நியமங்களினை சான்றுபடுத்தியிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.		
	(ii) விலைகூறல் நிபந்தனைகளின் பிரகாரம் நிறுவனத் தலைவரினால சுத்திகரித்தல் பணி தொடர்பாக உரிய நிலப் பரப்பளவு மற்றும் கட்டிடங்களின் விபரங்கள் வழங்கியிருக்காததுடன், விலைகூறல் நிபந்தனைகளில் 2.19 இன் பிரகாரம் சுத்திகரிப்பு ஊழியர்களின் நாளாந்த உள்வரவு பதிவேடு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் பரிசோதனை செய்யப்பட்டு சான்றுபடுத்தல் மற்றும் நிபந்தனை இலக்கம் 2.7 பிரகாரம் சுத்திகரிப்பு கருமங்களுக்காக சேவையில் ஈடுபடுத்த வேண்டிய குறைந்தளவு ஆண் ஊழியர்கள் எண்ணிக்கையை ஈடுபடுத்தல் மற்றும் நிபந்தனை 16.3 இன் பிரகாரம் சுத்திகரிப்புக் கருமங்களுக்காக பயன்படுத்தப்படும் இரசாயன பொருட்கள் உரிய நியமத்துடன் காணப்படுகின்றனவா என தொற்றுக் கட்டுப்பாட்டு அலகினால் பரிசோதனை மேற்கொண்டு உறுதிப்படுத்துதல் ஆகிய நிபந்தனைகளின் பிரகாரம் செயற்பட்டமையை உறுதிப்படுத்தல் மேற்கொண்டிருக்கவில்லை.	- மேற்படி -	- மேற்படி -
(ஊ)	அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பாதுகாப்புச் சேவைக்காக அரசுடன் இணைந்த கம்பனி ஒன்றிற்கு 20 வருடங்களை மிகையான காலம்	2025 ஏப்ரல் 01 திகதி முதல் வைத்தியசாலைக்காக பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கு வைத்தியசாலையினால் பெறுகை	பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும்.

	முதல் தொடர்ச்சியாக வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த கம்பனிக்கு எதிராக பல தரப்பினரால் முறைபாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், கொள்கை தீர்மானம் எடுக்கும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் 2024 ஒக்தோபர் 01 திகதி முதல் 2025 மார்ச் 31 திகதி வரையான 06 மாத காலத்திற்காக ரூபா 23,975,022 இற்கான பெறுமதி ஒன்றிற்கு போட்டி விலைகூறல் அழைக்காமல் குறிப்பிட்ட கம்பனிக்கு மீண்டும் ஒருமுறை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், பாதுகாப்புக் கம்பனியின் ஊழியர்களின் நாளாந்த உள்வரவு மற்றும் வெளிச் செல்லல் மற்றும் சேவை முறைமாற்றம் ஈடுபடுத்தப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை என்பவற்றை உண்மையாக உறுதிப்படுத்துவற்கான செய்முறை ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.	அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய ஒப்பந்தக்காரர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது என.	
(எ)	அனுராதபுர போதனா வைத்தியசாலை ஒன்றினால் அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் மூலம் 2023 / 2024 ஆண்டிற்கான சுத்திகரிப்பு செய்யும் சேவை 20 ஆண்டுகளுக்கு மிகையான காலம் முதல் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கூறுவிலைகள் அழைக்கப்படாமல் வழங்கப்பட்டிருந்தது. மேலும், பெறுகைத் தீர்மானம் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக சுத்திகரிப்பு வேலைக்காக பயன்படுத்தப்படும் இரசாயனப் பண்டங்கள் உரிய நியமத்தில் காணப்பட வேண்டும் என உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2024 ஒக்தோபர் 22 திகதி வைத்தியசாலை நிறுவாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது சுத்திகரிப்பு மேற்கொள்ளும் இரசாயன பண்டங்கள் உரிய நியமத்தில் காணப்படவில்லை என கண்டறியப்பட்டது. 2024	வைத்தியசாலையின் தொற்றுக் கட்டுப்பாட்டு அலகினால் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வழங்கப்பட்டிருந்த சில சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்களின் நியமம் தொடர்பாக சிக்கல் தன்மை அவதானிக்கப்பட்டதுடன், வழங்கல் மேற்கொள்வதற்கு முன்னர் நியமம் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி வழங்கல் மேற்கொள்ள வேண்டும் என ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டது என. அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட புதிய ஒப்பந்தக்காரருக்கான தேவையான தகவல்கள் தற்போது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது என.	- மேற்படி -

	செப்தம்பர் 15 திகதி ஒப்பந்த காலம் முடிவடைந்திருநத போதிலும், இந்த நிறுவனம் தொடர்ச்சியாக சுத்திகரிப்புச் சேவையில் ஈடுபட்டிருந்தது.		
(ஏ)	நாகொட போதனா வைத்தியசாலைக்கு மீன் தவிர ஏனைய பச்சை உணவு வழங்குவதற்காக அணுகியிருந்த ரூபா 147.76 மில்லியனிற்கான உடன்படிக்கை தொகைக்கு தனியார் வழங்குனர் ஒருவருக்கு பச்சை உணவு வகைகள் வழங்குதலுக்கான கொடுப்பனவு மற்றும் வழங்கப்பட்ட உணவு தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	(i) பல வருட காலம் முதல் தொடர்ச்சியாக ஒரே வழங்குனருக்கு மாத்திரம் விலை சமர்ப்பித்திருத்தல் மற்றும் அந்த வழங்குனருக்கு விலைகூறல் வழங்கப்பட்டிருந்தமையால் போட்டியடிப்படையில் விலைகூறலின் படி மிகவும் நியாயமான மற்றும் அனுகூலமான வழங்குனர் ஒருவரை தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தை வைத்தியசாலை நழுவியிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	போட்டித் தன்மையை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
	(ii) வழங்குனருடன் அணுகியிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் தோல் அகற்றி கோழி இறைச்சி வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும், தொடர்ச்சியாக கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 1,580 தொகைக்கு உடன்படிக்கை மேற்கொண்டிருந்ததுடன், கூடிய விலைக்கு தோலுடனான கோழி இறைச்சி வழங்கியிருந்ததெனவும், முறைப்பாட்டுப் பதிவேட்டின் குறிப்புக்கள் பொது சுகாதார பரிசோதகர்	ஒப்பந்தக்காரரினால் 2024 ஒக்தோபர் 31 திகதி முதல் 2024 திசெம்பர் 15 திகதி வரை தோல் உடனான கோழி இறைச்சி வழங்கப்பட்டிருந்ததென உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் வழங்கப்பட்ட 397,280 கிலோ கிராம் கோழி இறைச்சி தோலின் அளவு 59,592 கிலோ கிராம் ஆகும் (01 கிலோவிற்கான தோழின் அளவு 150 கிராம்) சமையலறை சமையலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, மிகையாக செலுத்தியிருந்த ரூபா 94,155.36 இற்கான தொகை மார்ச் மாதத்திற்கான உறுதிப் பத்திரத்தின் மூலம் அறவீடு	உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், அறவிடப்பட வேண்டிய அனைத்துத் தொகைகளையும் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	அறிக்கைப் படி மற்றும் வழங்குனர் இறைச்சி வழங்கிய சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது. தோல் அகற்றிய கோழி இறைச்சி கிலோகிராம் ஒன்று இந்தக் காலப் பகுதியில் ரூபா 1,000 தொகை அண்மித்த விலையில் சந்தையில் கொள்வனவு செய்ய இயலுமாக இருக்கும் போது ரூபா 1,580 தொகை போன்ற கூடிய விலையொன்றுக்கு தோலுடனான கோழி இறைச்சி ஒரு கிலோவிற்கு கொடுப்பனவு செய்யப்பட்ட காரணத்தினால் கொள்வனவு செய்திருந்த அனைத்து கோழி இறைச்சி கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 500 தொகைக்கு கூடிய தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.	செய்வதற்கு நடவடிக்க எடுக்கப்படும் என.	
(iii)	பச்சையுணவு வழங்குனர் தோலுடன் வழங்கப்பட்ட கோழி இறைச்சியின் தோலை அகற்றி துண்டுகளாக வெட்டும் போது ஒரு துண்டில் இருக்க வேண்டிய பாரத்தின் அளவு குறைவடைகின்றதென குற்றச்சாட்டிலிருந்து தப்பிக் கொள்வதற்காக மற்றும் அதிகுளிரூட்டப்பட்ட இறைச்சியை வெட்டுவதற்கு கூடிய காலம் எடுப்பதனால், உணவு சமைப்பதில் ஏற்படுகின்ற தாமதத்தை தவிர்ப்பதற்காக சமையலாளரினால் தோலுடனான இறைச்சி சமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமை நோயாளர்களுக்கு வியாகூலத்தை ஏற்படுத்தக்கூடிய மிகவும் பிரதிகூலமான நிலைமையொன்றென	ஒப்பந்தக்காரருக்கு அறிவுறுத்திய பின்னர் (2024 திசெம்பர் 16 திகதி முதல்) தற்போது உரிய முறையில் தோல் அகற்றிய கோழி வழங்கப்படுகின்றதென.	விலைகூறல் நிபந்தனைகளுக்கு முரணாக செயற்படுதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.		
(iv) அதேபோல், பச்சையுணவு வழங்கப்படுகின்ற வழங்குனரினால் வழங்கப்பட்டிருந்த தேயிலை தரக்குறைவாக காணப்படுகின்றதென தரப் பரிசோதனை அறிக்கையின் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன், வழங்கியிருந்த மரக்கறிகளும் சேற்றுடனான அசுத்தமான நிலையில் காணப்பட்டது என முறைப்பாட்டு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கை எடுக்காமல் வழங்கியிருந்த பச்சை உணவுப் பொருட்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	உடன்படிக்கையின் தேயிலை தரம் தொடர்பாக உரிய முறையில் குறிப்பிடப்படாமை மற்றும் சர்ச்சைக்குரிய தன்மையுடையதாக இருப்பதுடன், எனினும் தேயிலை மாதிரிப் பரிசோதனையின் பின்னர் ஒப்பந்தக்காரருக்கு எச்சரிக்கை செய்து முறையான பொதியிடப்பட்ட லேபலுடனான தேயிலை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், அந்தத் தேயிலையும் தரப் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதெனவும், வழங்குனரினால் வழங்கப்படுகின்ற பச்சை உணவுப் பொருட்கள் சில நாட்களில் மிகவும் தரக்குறைவானதாக இருந்ததென ஏற்றுக்கொள்கின்றேன். அவ்வாறு தரக்குறைவான பச்சை உணவுப் வகைகளை திருப்பி அனுப்பி தரமான உணவுப் பொருட்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எ:டுக்கப்படும் என.	நியமொன்றுடனான தரத்தில் உயர்ந்த உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஐ) நாகொட போதனா வைத்தியசாலையில் சுத்திகரிப்பு சேவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.		
(i) சுத்திகரிப்பு சேவை ஒப்பந்த வேலை உடன்படிக்கையின் பிரகாரம் தெரவு செய்யப்பட்ட விலைகூறல்தாரரினால் சேவைகள் நிறைவேற்றுதல் திருப்திகரமற்றதென, சுகாதார செயலாளரினால் கண்டறியப்பட்டால் அல்லாது ஒப்பந்தக்காரர் உடன்படிக்கை நிபந்தனைகளை மீறியிருந்தால்	பதிலளிக்கப்படவில்லை.	ஒப்பந்தக்காரர் உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறியிருந்தால் உடன்படிக்கையின் பிரகாரம் சாட்டப்பட்டுள்ள அதிகாரத்தின் படி செயற்பட வேண்டும்.

	ஒப்பந்தக்காரரின் செயலாற்றுகை பிணைமுறியின் உரிமையை உரித்தில்லாமல் ஆக்குவதற்கும், ஒப்பந்த வேலையை முடிவுறுத்தி ஒப்பந்தக்காரரை கறைநிரப்படுத்துவதற்கும் சுகாதார செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயினும், 2023 ஆண்டின் சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்களின் தரப் பரிசோதனையின் போது கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ITI) மாதிரி பரிசோதனை அறிக்கை தோல்வியடைந்திருந்த போது போலவே, வைத்தியசாலை பணிப்பாளரினால் 2024 ஜனவரி 08 திகதிய கடிதத்தின் மூலம், சுத்திகரிப்பு சேவை வழங்கும் நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களின் தரம் குறைவானதென சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (வழங்கல்கள்) இற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு ஒப்பந்த வேலை முடிவுறுத்துவதற்கு அல்லது ஒப்பந்தக்காரரை கறைநிரல்படுத்துவதற்கு 2023 / 2024 ஆண்டிற்கான சுத்திகரிப்பு ஒப்பந்த வேலை அந்த தனியார் நிறுவனத்திற்கே வழங்கப்பட்டிருந்தது.		
(ii)	விலைகூறல் நிபந்தனையின் பிரகாரம் சுத்திகரிப்பு சேவைக்காக பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் உரிய தரத்தில் காணப்படுகின்றதென கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் தரப்	- மேற்படி -	பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நிறுவனம் அந்த அறிக்கையை சமர்ப்பித்திருக்கவில்லை என தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அவதானித்திருந்த போதிலும், அமைச்சின் பெறுகைக் குழு அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்ற அடிப்படையில் ஒப்பந்த வேலையை வழங்கல் பொருத்தம் என பரிந்துரைக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2023 / 2024 ஆண்டிற்கான தரப் பரிசோதனை அறிக்கை 2024 ஆண்டு இறுதி வரை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், சுகாதார அமைச்சினாலும் அது தொடர்பாக கவனம் செலுத்திருக்கவில்லை.		
(iii) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவை வழங்குவதற்காக ஒரு நாளைக்கு 140 தொழிலாளர்கள் மற்றும் 06 மேற்பார்வையாளர்கள் சேவையில் ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும், 2023 ஒக்தோபர் முதல் 2024 செப்தம்பர் வரையான காலப் பகுதியில் எல்லா மாதங்களிலும், சேவையை ஈடுபடுத்த வேண்டிய தொழிலாளர்களின் எண்ணிக்கை 207 முதல் 40 வரையான வீச்சில் குறைவாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதன்படி, ஒரு நாளைக்கு 09 மணித்தியாளங்கள் சேவைமுறை மாற்றத்திற்காக 140 பேர் ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும் 127 தொழிலாளர் எண்ணிக்கை மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	ஊழியர்கள் குறைவென தொடர்ச்சியாக ஒப்பந்தக்காரருக்கு மற்றும் வேலை மேற்பார்வையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டதன் மூலம் ஊழியர் குறைவினை ஓரளவு குறைப்பதற்கு முடியுமானது எனவும், குறைவாக ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களுக்காக ஒரு நபருக்காக ரூபா 450 வீதம் தண்டப்பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என.	ஒப்பந்த வேலை உடன்படிக்கைகளின் படி சேவைகளை பெற்றுக்கொள்வற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும்.

(iv) சுத்திகரித்தல் சேவை வழங்கும் தனியார் நிறுவனங்களினால் சேவையாற்றும் ஊழியர்களுக்காக சேவை வழங்கும் நிறுவனத்தினால் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்பளிப்புத் தொகை முறையே 12 சதவீதம் மற்றும் 03 சதவீதம் பங்களிப்பு இரண்டிலும் கூட்டுத்தொகை 15 சதவீதம் என ரூபா 1,207,478 இற்கான தொகையொன்று ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து கழித்து வைத்திசாலையினால் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த போதிலும், தொழிலாளர் சட்டவிதிகள் மற்றும் உரிய சட்டங்களை மீறி மீண்டும் அந்தப் பங்களிப்புத் தொகை ஊழியர் சம்பளத்தில் இருந்து கழித்து ஒப்பந்தகாரரினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.	சேவை வழங்குனரினால் ஊழியர்களுக்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய 03 சதவீத பங்களிப்பு மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய 12 சதவீத பங்களிப்பு அனைத்து மாதங்களிலும் ஒப்பந்தக்காரர்களினால் தடுத்து வைக்கப்பட்டு ஊழியர்களிடம் கழித்தல் மேற்கொள்ளக்கூடாது என அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், எதிர்காலத்தில் தொடர்ந்தும் இந்த தொழிலாளர் சட்டங்களை மீறினால் ஒப்பந்த நிறுவனத்தை கறைநிரல்படுத்ததுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	தொழிலாளர் சட்டங்கள், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியச் சட்டங்களின் படி பங்களிப்புத் தொகை செலுத்தாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 32 – 2344 இலக்கம் கொண்ட வாகனத்தின் எஞ்சின் செயற்படாதிருக்கின்றதென 2020 ஜனவரி 24 திகதி சாரதியினால் பணிப்பாளர் (போக்குவரத்து) இற்கு அறிவித்திருந்ததுடன், அதன்படி, அவரினால் அந்த வாகனத்திற்கு மதிப்பீடொன்று பெற்றுகொள்வதற்காக 2020 ஜனவரி 27 திகதி முகவர் நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. ஒரு வருடத்திற்கு மிகையான காலம் கடந்திருந்த பின்னர் 2021 மார்ச் 06 திகதி இந்த வாகனத்ததை அமைச்சுக்கு எடுத்து	Covid – 19 காலப் பகுதியில் உதிரிப் பாகங்களின் விலை தீர்மானிப்பதற்கு முகவர் நிலையத்திற்கு முடியாமல் இருந்த காரணத்தினால் மதிப்பீடொன்று வழங்குவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்ததெனவும், இந்த வாகனம் 10 வருடங்களை விட பழமையான வாகனமொன்றாக காணப்பட்டமையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் கூறுவிலைகள் அழைப்பதற்காக மீண்டும் எடுத்துவரப்பட்டது எனவும், அதன் பின்னர் இயந்திரப் பொறியியலாளரின்	சுவாதீனமான விராணையொன்று மேற்கொண்டு பொறுப்பான தரப்பினர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வருவதற்காக முகாரிக்கு ஒப்படைக்கும் படி முகவர் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. மீண்டும் அந்த வாகனத்தை உயிர்ப்பிப்பதற்கு முடியாதென வாகனத்தின் சாரதியினால் 2021 மே 13 திகதி பணிப்பாளர் (போக்குவரத்து) அறிவிக்கப்பட்டிருந்தது. 2021 மார்ச் 10 திகதி முகாரி மற்றும் பொறியியலாளரினால் வாகனத்தை பரிசோதனை செய்து அறிக்கையொன்று வழங்கியிருந்ததுடன், பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் 2021 மே 17 திகதி இந்த திருத்த வேலைக்காக மதிப்பீடொன்று வழங்கும் படி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தினாலும், கிடைத்திருந்த மதிப்பீடொன்று கோப்பில் காணப்படாததுடன், மீண்டும் இந்த வாகனத்தினை பரீட்சக ஒட்டத்தில் ஈடுபடுத்தி 2021 செப்தம்பர் 03 திகதி முகாரியினால் அறிக்கையொன்று வழங்கப்பட்டிருந்தது. 2021 செப்தம்பர் 08 திகதி கூறுவிலை அழைக்கப்பட்டு முகாரியால் வழங்கியிருந்த பரிந்துரையின் படி குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு ரூபா 394,703 தொகைக்காக சாட்டப்பட்டிருந்தது. திருத்த வேலைக்காக வாகனத்தை ஒப்படைக்கப்பட்டு சுமார் 13 மாதங்களின் பின்னர் 2023 ஜனவரி 23 திகதி பில்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதனை 2023 மார்ச் 29 திகதி கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த வாகனத்தின் திருத்த் வேலையின் பின்னர் 85,000 கிலோ மீற்றர் ஒட்டத்திற்கான உத்தரவாதம் ஒன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், வாகனத்தின் திருத்த வேலையின் பின்னர் ஒட்டப்பட்டது என்பதற்கான எதுவித சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

பரிந்துரையின் படி வாகனத்தை கழற்றிப்பார்த்து மதிப்பீடொன்று பெற்றுக்கொள்வதற்காக ஜெகோமோ ஒடோ கேஸ் கென்வேசனிற்கு அனுப்புவதற்க நடவடிக்கை எடுத்ததுடன், அந்த நிறுவனத்தினாலும் மதிப்பீடொன்று கிடைக்காமையால் போக்குவரத்து முகாரியினால் வாகனத்தை பரீட்சாத்த ஓட்டத்தில் ஈடுபடுத்தி அறிக்கையொன்று வழங்கப்பட்டிருந்ததெனவும், எஞ்சின் திருத்த வேலையின் பின்னர் வாகனத்தை ஒப்படைத்த போதிலும், வாகனத்தின் வெளிப்பகுதி துறுப்பிடித்து காணப்பட்டமையால் ஓட்டப்படவில்லை எனவும், இந்த வாகனம் ஆரம்ப அனுசரணை செயற்திட்டத்தின் கீழ் வாகனத்தை திருத்துவதற்காக உத்தேச வாகனப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்தமையால வர்ணம் தீட்டுவதற்காக மின்னேரியா செயற்களத்திற்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது எனவும், 2022 ஜூலை 22 திகதி கூறுவிலை அழைக்கப்பட்டுள்ளதுடன், திருத்த வேலைக்காக 2022 திசெம்பர் 05 திகதி நிறுவனவத்திற்கு அனுப்பப்பட்டது எனவும்.

(ஆ)	சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கு சொந்தமான PB – 7902 இலக்கம் கொண்ட வாகனம் தொடர்பாக 2021 திசெம்பர் 14 திகதி முகாரியால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரையின் படி 2021 திசெம்பர் 27 திகதி 14 நிறுவனங்களில் இருந்து கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்தது. 05 நிறுவனங்களிலிருந்து கிடைத்திருந்த கூறுவிலைகளில் ரூபா 652,460 இற்கான குறைந்த விலை சமர்ப்பித்தருந்த நிறுவனத்திற்கு திருத்த வேலையின் விடயப் பரப்பை மாற்றி ரூபா 382,460 இற்கான தொகையொன்றுக்கு குறிப்பிட்ட திருத்த வேலை மேற்கொள்வதற்காக போக்குவரத்து முகாரியினால் 2022 பெப்ரவரி 02 பரிந்துரை வழங்கியருந்தது. அதன்படி 2022 ஜூன் 08 திகதி குறிப்பிட்ட நிறுவனத்திற்கு வாகனம் அனுப்பப்பட்டிருந்தது. இந்த வாகனம் பத்தரமுல்ல பகுதியில் வீதியோரம் ஒன்றில் நீண்ட காலம் முதல் நிறுத்தப்பட்டிருந்ததென கணக்காய்விற்கு கிடைத்த தகவல் ஒன்றின் படி 2023 ஜனவரி 10 திகதி அமைச்சின் விசாரணை பிரிவு மற்றும் போக்குவரத்துப் பிரிவு உத்தியோகத்தர்களுடன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. சிரேஷ்ட உதவிச் செயலாளர் (விசாரணை) இற்கு 2023 ஜனவரி 12 திகதி இது தொடர்பாக கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கும் படி பணிப்பாளர் (போக்குவரத்து) இற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2025 ஜனவரி 02 திகதி இந்த வாகனத்திற்குரிய கோப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கும் படி எதுவித நடவடிக்கையும் பொறுப்பான உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டிருக்காதுடன், இந்த வாகனம் முல்லேரியா வாகன செயற்களத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு எதுவித	சாரதியினால் 2021 திசெம்பர் 13 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த வேண்டுதலை போக்குவரத்து முகாரியினால் பரிந்துரைக்கப்பட்டு அதன்படி, கூறுவிலை அழைக்கப்பட்டு குறைந்த விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிறுவனத்தினால் திருத்த வேலை விடயப் பரப்பை மாற்றம் செய்யாமல் ECU முறைமை புதிதாக பொருத்துவதற்கு பதிலாக திருத்த வேலைக்காக இணக்கத்தினை பெற்றுக்கொண்டு ரூபா 382,460 தொகையொன்றுக்கு வாகனத்தின் திருத்த வேலை மேற்கொள்வதற்காக 2022 ஜூன் 08 திகதி குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததெனவும், சி.உ. செயலாளர் (அவசர சுற்றிவலைப்புக்கள்) இனால் 2023 ஜனவரி 12 திகதிய பணிப்பாளர் போக்குவரத்துக்கு அனுப்பிய கடிதத்தின் படி திருத்த வேலை மேற்கொண்டிருக்காத போதிலும், வாகனத்தை திருப்பி எடுத்துவந்து முல்லேரியாவின் செயற்களத்தில் நிறுத்தப்பட்டிருந்ததெனவும், இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது போக்குவரத்து முகாரி உத்தியோகத்தருக்கு அறிவுரைக் கடிதமொன்று வழங்கியிருந்ததுடன், அந்த வாகனத்ததை திருத்த வேலை மேற்கொள்ளல் ஆக்கபூர்வமானதல்ல எனவும், எதிர் காலத்தில் நடைபெறக்கூடிய ஏலவிற்பனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும்.	வாகன திருத்த வேலை அலுவல்கள் அரசிற்கு உச்சமட்ட அனுகூலமான முறையிலும், சொத்துக்கள் பாதுகாக்கப்படக்கூடிய முறையில் நிறைவேற்றுவதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	ஆக்கபூர்வமான வேலைக்கும் பயன்படுத்தப்படாமல் செயற்களத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.		
(இ)	பொலன்னறுவ தேசிய சிறுநீரக பிரத்தியேக வைத்தியசாலையின் இரத்த டயாலிசிஸ் அலகில் காணப்படுகின்ற இரத்த டயாலிசிஸ் இற்காக பயன்படுகின்ற 04 Hemodialysis இயந்திரங்கள் 2025 பெப்ரவரி 13 திகதி கணக்காய்வுத் திகதி அளவிலும் செயற்படாத மட்டத்தில் காணப்பட்டதென பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.	இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்காக பாரிய செலவொன்று மேற்கொள்ள நேரிடும் என பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உள்நாட்டு முகவர் நிலையத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது என. இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கும் படி உயிரியல் மருத்துவப் பொறியியல் பிரிவிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என.	இயந்திரங்களை பரிசோதனை செய்து விரைவாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதற்காக செயற்பட வேண்டும்.
(ஈ)	அவுஸ்திரேலிய கடன் உதவித் திட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சினால் செயற்படுத்தப்பட்டிருந்த அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் எம்பிலிப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் பொறுத்தப்பட்டிருந்த சிகிச்சை கழிவுப் பொருள் முகாமைத்துவ இயந்திரம் (மெடாமைசர் இயந்திரம்) முறையே 2024 ஏப்ரல் 22 மற்றும் ஏப்ரல் 23 ஆகிய தினங்களில இருந்து செயற்படாத நிலைமைக்கு மாறியிருந்தது. இதன் காரணமாக குவிக்கப்படுகின்ற தொற்று மற்றும் கூர்மையான கழிவுப் பொருட்கள் காரணமாக வைத்தியசாலை வளாகத்தில் சிக்கல் தன்மையொன்று ஏற்பட்டிருந்தது.	எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை கழிவுப் பொருட்கள் இன்சினரேடர் இந்த மெடா மைசர் இயந்திரங்களின் சேவை பராமரிப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்ற தனியார் கம்பனி சுகாதார அமைச்சுடன் காணப்பட்ட உடன்படிக்கை முடிவடைந்திருந்ததெனவும், பராமரிப்பு மற்றும் சேவை அலுவல்களிலிருந்து விலகியிருந்தது எனவும், அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக இந்த இயந்திரங்கள தொடர்பாக தொடர் நடவடிக்கை தீர்மானிப்பதற்காக பொறியியலாளரின் தலைமையில் சுகாதாரச் செயலாளரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதெனவும், இந்தக் குழுவின் பரிந்துரையின் படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எதிர் காலத்தில் அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.	இயந்திரங்களை பரிசோதனை செய்து விரைவாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(உ)	2017 ஜுன் 30 திகதி இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த இரத்த வங்கி காணப்படும் கட்டிடத்தின் சிலப் இன் ஊடாக 2019 ஆண்டு முதல் நீர் ஒழுகுகின்றது என இரத்த வங்கி உத்தியோகத்தரினால் வைத்தியசாலை பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2024 நவம்பர் 28 திகதி அளவிலும் அந்த நிலைமை அவ்வாறே காணப்பட்டது.	CECB நிறுவத்தினால் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு மதிப்பீட்டில் அடங்கியுள்ள வேலை விடயங்களை அங்கீகரித்துக்கொள்வதற்காக 2025 மார்ச் 12 திகதிய கடிதத்தின் மூலம் கட்டிடங்கள் மற்றும் பொறியியல் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், ஏற்பாடுகள் மற்றும் அங்கீகாரம் கிடைத்தவுடன், குறிப்பிட்ட கருமம் நிறைவேற்றப்படும் என.	அரச சொத்துக்கள் உரிய முறையில் திருத்த வேலைகள் மேற்கொண்டு பாதுகாப்பான முறையில் பேணிச் செல்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலைக்காக ஒதுக்கப்பட்டிருந்த வைத்தியசாலையிலிருந்து 2.5 கிலோ மீற்றர் தூரத்தில் காணப்படுகின்ற எலபிடிவல வீடமைப்பு கட்டிடத் தொகுதியில் பட்டியலிடப்பட்ட வீடொன்றுடன் 25 பொது சேவை வீடுகளும் காணப்பட்டது. இந்த எலபிடிவல வீட்டுத் தொகுதியில் வீடுகள் திருமணமான வைத்தியர்களுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2025 ஜனவரி மாதம் 15 மற்றும் 16 திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது இந்த வீடுகளில் 19 வீடுகளில் எவரும் குடியிருக்காததுடன், அவற்றில் 18 வீடுகள் 04 வருடங்களுக்கு மிகையாக காலம் முதல் வெற்றிடமாக காணப்பட்டதென கணக்காய்வினால் கண்டறியப்பட்டது. இந்த வீடுகள் மற்றும் சுற்றுச்சூழல் உரிய முறையில் பராமரிக்கப்படாமையால் தற்போது பயன்படுத்தப்படும் வீடுகளையும் மற்றும் பயன்படுத்தப்படாத வீடுகளையும் சுற்றி காடுகள் வளர்ந்து காணப்பட்டன.	வீடுகளின் திருத்த வேலை மேற்கொள்வதற்காக பரிசோதனை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கையின் படி கட்டிடத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்காக பொறியியல் கருமங்களுக்கான மத்திய உசாத்துணை பணியகம் மூலம் மதிப்பீடு அழைக்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளின் படி அரசாங்க வீடுகளினதும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் என.	சொத்துக்கள் உச்ச செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் எலபிடிகல வீடமைப்புக் கட்டிடத் தொகுதியில் சுகாதார பதவியணியினருக்கு ஒதுக்கப்பட்டிருந்த F கட்டிடத்தின்	F கட்டிடம் அமைந்துள்ள காணியின் வரைபினை கண்டறிந்து அவ்வாறின்றேல் சுகாதார அமைச்சின் இந்தக் கட்டிடம் அமைந்துள்ள காணியின் வைத்தியசாலை	இந்தக் காணியின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், பாதுகாப்புத் தன்மையுடன் பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்க

	பின் பக்கப் பகுதியில் இந்தக் கட்டிடத்தின் சாக்கடைக் கிடங்குகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அந்தத் தரைப் பகுதியில் வெளித் தரப்பினரினால் வாழை பயிர் செய்யப்பட்டிருந்தது. இந்தக் காணியைச் சுற்றி பாதுகாப்பு வேலியொன்று அல்லது எல்லைகள் செப்பணிட்டிருக்காததுடன், இந்தக் காணிக்கான வைத்தியசாலையின் உரிமை அல்லது சுகாதார அமைச்சின் உரிமையை பரிசோதனை செய்து வேலிகளின் எல்லைகளை அமைத்து அரச ஆதனங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உரிமையை உறுதிப்படுத்திய பின்னர் எல்லை வேலி அமைத்து அரச ஆதனங்களை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.	வேண்டும்.
(ஏ)	பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் பல் சீரமைப்பு சிகிச்சைப் பிரிவின் மூலம் 2024 ஆண்டின் போது அம்பாறை, திருகோணமலை, மாத்தளை, தம்புள்ள, மட்டக்களப்பு, மொணராகலை மற்றும் பதுளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்களினால் சிகிச்சை பெற்றுக்கொள்ளப்படுகின்ற போதிலும், போதியளவு பதவியணியொன்று காணப்படாமையால் 03 உடற்பயிற்சி ECG இயந்திரங்களும் மற்றும் 24 மணித்தியாளம் இயங்கக்கூடிய 03 இரத்த அழுத்த இயந்திரங்களும் செயற்படாமல் காணப்பட்டதுடன், குறிப்பிட்ட இயந்திரங்களை வழங்கிய கம்பனி மூடப்பட்டிருந்ததனால் திருத்த வேலை மேற்கொள்ள முடியாத நிலைமையொன்று காணப்பட்ட காரணத்தினால் நோயாளர் அனுசரணை சேவைகளுக்கு பாதிப்பொன்று ஏற்பட்டிருந்தது.	03 உடற்பயிற்சி ECG இயந்திரங்களும் மற்றும் 24 மணித்தியாளம் இயங்கக்கூடிய 03 இரத்த அழுத்த இயந்திரங்களும் குறிப்பிட்ட தாய்க் கம்பனி மூடப்பட்டுள்ளதால் அந்த நிறுவனத்துடன் இணைந்த நிறுவனங்களில் இருந்து விலை மதிப்பீடுகள் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், இந்த நிறுவனங்கள் ஒன்றிற்கு ஒன்று தொடர்பில்லாமையால் இந்த இயந்திரத்துக்காக முகராண்மை சான்றிதழ் (NMR சான்றிதழ்) பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது எனவும், அதன்படி, எதிர்காலத்தில் இது தொடர்பாக கடிதங்கள் வழங்கப்படும் எனவும், திருத்த வேலைகள் விரைவாக நிறைவேற்றிக் கொடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.	நோயாளர் உபசரணை சேவைகள் தடங்கள் இன்றி பேணிச் செல்வதற்காக போதியளவு பதியணியினர் இணைத்துக் கொள்வதற்காகவும், இயந்திரங்களின் திருத்த வேலை அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்து செயற்திரனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஐ)	குருநாகல் போதனா வைத்தியசாலை அமைந்துள்ள காணி குருநாகல் பிரதேச செயலகத்தின் பெயரில் காணப்படுவதுடன், அதனை	அங்கீகாரமின்றி வதிவோர் தொடர்பான விபரங்களை வழங்குவதற்காக வைத்தியசாலைக் காணியின் நில அளவை அலுவல்கள்	குறிப்பிட்ட அறிக்கையை விரைவாக பெற்றுக்கொண்டு ஆதனங்களின் உரிமையை

	குருநாகல் வைத்தியசாலையின் பெயரில் விடுவித்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதனை தீர்ப்பதற்காக 2024 ஜுலை 12 திகதிய பிரதேச செயலாளரின் 4/5/1/60 இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் வைத்தியசாலை காணியில் வதியும் அங்கீகாரமற்றோர் தொடர்பான அறிக்கையொன்று வினவியிருந்த போதிலும், 2024 ஒக்தோபர் மாதம் கணக்காய்வுத் திகதி வரை அந்த அறிக்கை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அங்கீகாரம் இன்றி வதிவோரை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பூர்த்தி செய்து அறிக்கையொன்று வழங்க வேண்டியதுடன், அந்த அறிக்கை இதுவரை கிடைக்கப் பெறாமையால் விபரங்கள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதெனவும், தேவையான தகவல்கள் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என.	தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஒ)	மருத்துவ வழங்கல் பிரிவினால் 2021 முதல் 2022 வரையான காலப் பகுதியில் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு கிடைத்திருந்த அண்ணளவான பெறுமதி ரூபா 14.57 மில்லியன் தொகைக்கான உபகரண இருப்பொன்று கிடைத்த நாள் முதல் பயன்படுத்தப்படாமல் குறை பயன்பாட்டுடன் 2024 ஆகஸ்ட் 29 திகதி அளவிலும் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.	விடயங்களில் Bi pap Machine, High flow Oxygen Therapy, Portable OT Lamp மற்றும் Vital Signs Monitor உபகரணங்களை பயன்படுத்தும் போது தேவைப்படுகின்ற Accessories கொள்வனவு செய்யும் போது உள்நாட்டு முகவரிடம் அல்லது திறந்த சந்தையில் காணப்படவில்லை எனவும் (NMRA சான்றிதழ் காணப்படவில்லை). Micro Hemoteri Centrifuge – 03 மற்றும் Plus Oxy meter Finger Tip – Dental Light Curing machin 123 ஏனைய பிரிவுகள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என.	- மேற்படி -
(ஓ)	நுவரெலிய மாவட்ட பொது வைத்தியசாலையின் நிர்மாண வேலைகள் பாதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த மிகவும் பழமையான 3600 சதுர அடி பரப்பளவைக் கொண்ட கீழிறங்குவதற்கு அல்லது உடைந்து விழுவதற்குரிய ஆபத்து நிலைமையில் காணப்படுவதுடன், அந்த	சுத்திகரிப்பு பிரிவு அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளதுடன், அப்புறப்படுத்தல் களஞ்சியத்திற்காக பொருத்தமான இடமொன்று கிடைத்த பின்னர் உடைத்து அகற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என.	சொத்துக்களை விரைவாக மிகவும் ஆக்கபூர்வான கருமங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	கட்டிடம் ஒன்று வைத்தியசாலையின் சுத்திகரிப்பு ஊழியர்களினால் பயன்படுத்தப்படுவதுடன், அந்தக் கட்டிடத்தை விரைவாக முறைப் பிரகாரம் அகற்றி அந்த வளாகத்தை மிகவும் ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(ஔ)	நுவரெலிய மாவட்ட பொது வைத்தியசாலைக்கு உரித்தான 0.4401 ஹெக்டயர் காணிப் பகுதியொன்று 07 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர்களினால் 15 வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் அங்கீகாரம் இன்றி அனுபவித்து வந்த போதிலும், அதற்காக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பிரதேச செயலகம் மற்றும் சுகாதார அமைச்சுக்கு உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட பிரிவுகளினால் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என.	அங்கீகாரமின்ற அனுபவித்தல் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்து ஆதனங்களை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(க)	நுவரெலிய மாவட்ட வைத்தியசாலை அமைந்துள்ள காணியை வைத்தியசாலைக்கு உரித்தாக்குவதற்கு மற்றும் 4.6824 ஹெக்டயரிற்கான புதிய வைத்தியசாலைக் காணி மற்றும் கட்டிடங்கள் என்பவற்றை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு குறிப்பிட்ட பெறுமதி மதிப்பீட்டை மேற்கொண்டு தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட அறிக்கை கிடைத்தவுடன் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை வைத்திசாலைக்கு பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்தவற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ங)	நுவரெலிய மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சொந்தமான காணியில் 15 பர்சஸ் சனசமூக நிலையமொன்று நிர்மாணிப்பதற்காக நுவரெலிய மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் காணி வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், காணியை வழங்கியிருந்த கருமத்திற்காக பயன்படுத்தாமையால் காணியை மீண்டும் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மீண்டும் வைத்தியசாலைக்கு குறிப்பிட்ட காணியை உரித்தாக்கித் தரும்படி பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என.	பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடம் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கை எடுக்க செயற்பட வேண்டும்.

(ச)	அரச நிதியத்தை பயன்படுத்தி அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ள முன்னர் குறிப்பிட்ட காணியை முறைப் பிரகாரம் நில அளவை செய்து உரிமையை சட்டரீதியாக உரித்தாக்கி உரித்துச் சான்றிதழொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பல மில்லியன் ரூபா பெறுமதியான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியங்களை பயன்படுத்தி ஈடுபடுத்தி அபிவிருத்தி செய்திருந்த அனுராதபுர போதனா வைத்தியசாலை அமைந்துள்ள காணியின் உரிமை, வைத்தியசாலைக்கு அல்லது சுகாதார அமைச்சுக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. வைத்தியசாலைக் காணியின் உரிமையை சட்டரீதியாக உரித்தாக்கப்படாமையால் வைத்தியசாலை வளாகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. அதேபோல், வைத்தியசாலை வளாகத்தின் ஒரு பகுதி 12 அனுமதியின்றிய வதிவோரினால் அபகரித்திருந்ததுடன், அதற்குரிய வழக்குத் தீர்பொன்றின் மூலம் உரித்தினை திருத்தி எடுப்பதற்கான நீதிமன்றக் கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 திசெம்பர் அளவிலும், அந்தக் காணியை மீண்டும் வைத்தியசாலையின் பொறுப்பில் பெற்றுக்கொள்வதற்காக வைத்தியசாலை நிருவாகத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிலஅளவைத் திணைக்களம் 2023 ஆண்டில் நில அளவை அலுவல்களை ஆரம்பித்த போதிலும், இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது எனவும், 2025 மார்ச் 17 திகதி முதல் மீண்டும் எனது வைத்தியசாலையின் நில அளவை அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அலுவல்கள் முடிவடைந்த பின்னர் முறைப் பிரகாரம் வைத்தியசாலை வளாகத்தின் உரிமை சுகாதாரச் செயலாளரின் பெயரில் உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனவும், அங்கீகாரமின்றி வதிவோர் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்து காணியின் உரிமையை சிக்கலின்றி உரித்தாக்கி ஒப்படைத்தல் சான்றிதழ் ஒன்று வழங்கப்படும் என.	காணியின் உரிமையை வைத்தியசாலைக்கு பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் அங்கீகாரம் இன்றி அனுபவிப்போர் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆதனங்களை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஞ)	அனுராதபுரம் போதனா வைத்தியசாலை கழிவுப் பொருள் எரிப்பதற்காக 2014 ஆண்டின் போது நிறுவப்பட்டிருந்த எரியூட்டி இயந்திரம் 2022 ஆண்டு முதல் செயற்படாது காணப்பட்டதுடன், இதனை மீண்டும் திருத்துவதற்காக 2022 நவம்பர் மாதத்தில் வரியின்றி ரூபா 392;895 தொகை பிரதேச	வைத்தியசாலையில் ஏற்பட்டிருந்த உக்கிர குப்பை சிக்கல் காரணத்தினால் இந்த பழைய இயந்திரத்தை மீண்டும் திருத்த வேலை பயன்படுத்துவதற்கு முடியுமா என ஆய்வு செய்யப்பட்டு வருகின்றதெனவும், திருத்த வேலை மேற்கொள்ள முடியும் எனின் அப்புறப்படுத்தாமல்	இயந்திரங்களை விளைவற்று வைத்திருக்காமல் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு அல்லது வேறு நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும்.

பெறுகைக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 திசெம்பர் 11 திகதி அளவிலும் அந்த இயந்திரத்தை திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இயந்திரம் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து குப்பை முகாமைத்துவ அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என.

(ட) அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு சொந்தமான Metamizer இயந்திரம் மற்றும் Incinerator இயந்திரம் செயற்பாட்டு நிலைக்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்காமை மற்றும் புதிய Incinerator இயந்திரம் செயற்படாத நிலைக்கு உள்ளாகியிருந்ததால் சிகிச்சைக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக 2023 ஆண்டின் போது, 2024 முதலாவது இரண்டு மாதங்களில் மற்றும் 2024 ஆகஸ்ட் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் முறையே வெளித்தரப்பினர் ஒருவருக்கு ரூபா 39.95 மில்லியன், ரூபா 24.14 மில்லியன், ரூபா 49.09 மில்லியன் என மொத்தம் 113.18 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த உபகரணங்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதன் மூலம் வெளித்தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகையினை குறைத்துக்கொள்வதற்கான இயலுமை தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. மேலும், கேகாலை போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சினால் செயற்படுத்தப்பட்டிருந்த அரச வைத்தியசாலைகளின் சிகிச்சை கழிவுப் பொருள் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் கீழ் 701,335.83 அமெரிக்க டொலர் பெறுமதியான Metamizer இயந்திரமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், அது செயற்படாமல் இருத்தல்

துண்டுகளை அப்புறப்படுத்துவதற்காக பொருத்தமான கணியொன்று காட்டப்படாமையால் துண்டுகளாக்கப்பட்ட பாரிய இருப்பொன்று வைத்தியசாலையின் வடிகாலமைப்பு முறைமைக்கு அண்மித்து சேகரமாக இருக்கின்றமையால் மெடாமைஸர் இயந்திரம் பல வருட காலம் முதல் குப்பை முகாமைத்துவ அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன், அந்த இயந்திரத்தை அப்புறப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சினால் வேண்டப்பட்டுள்ளதெனவும், பழைய எரியூட்டும் இயந்திரம் வைத்தியசாலைக் கொள்திறனுக்காக போதியளவாக காணப்படாமை பராமரிப்புச் செலவுகள் மிகையாகக் காணப்படல், தொடர்ச்சியாக திருத்த வேலைகள் மேற்கொள்ள நேரிடல் மற்றும் அமைச்சிலிருந்து புதிய எரியூட்டும் இயந்திரமொன்று வழங்கப்படவுள்ளது என அறிவிக்கப்படல் ஆகிய காரணங்களினால் பயன்படுத்துதல் இடைநிறுத்தப்பட்டதெனவும், அதற்குப் பதிலான வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு, சிகிச்சை குப்பைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என.

அரசிற்கு பிரதிகூலமற்ற முறையில் தீர்மானம் எடுப்பதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும்.

	மற்றும் அகற்றப்பட்ட மீதிப் பொருட்கள் அகற்றுவதற்கும் செய்முறையொன்று காணப்படாத காரணத்தினால் இந்த இயந்திரம் 2024 ஏப்ரல் 25 திகதி முதல் முழுமையாக பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.		
(ண)	கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு 1,350,000 அமெரிக்க டொலர் பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த PET-CT Scanner இயந்திரம் 2016 ஜூன் 10 திகதி காக்காய்வலிப்பு அலகில் நிறுவப்பட்டு, 03 வருட உத்தரவாத காலத்தினுள் 13 நாட்களும், மற்றும் 2019 முதல் 2023 வரையான ஆண்டுகளின் போது 20 நாட்களுக்கும் 28 நாட்களுக்கும் இடைப்பட்ட மிகவும் குறைந்த எண்ணிக்கையான நாட்கள் பரிசோதனைகளுக்கு வரையறுப்பட்டிருந்தது. மிகை கதிர்வீச்சு FDG எனும் சேர்க்கை நோயாளருக்கு உட்செலுத்தி மேற்கொள்ளப்படுகின்ற PET-CT Scan பரிசோதனைக்காக தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கலொன்று இயந்திரத்திற்கு தேவையாக காணப்படுவதால் இந்த PET-CT Scanner இயந்திரத்திற்கு உரிய UPS (Uninterruptable Power Supply) உபகரணத்தில் காணப்படும் பட்டரியின் ஆயுட்காலம் முடிவடைந்திருந்ததென 2023 நவம்பர் 02 திகதி குறிப்பிட்ட பிரிவின் கதிர்வீச்சு நிபுணரினால் வைத்தியசாலை முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், தேவைப்பாட்டினை பூர்த்தி செய்திருக்கவில்லை.	இந்த சந்தர்ப்பத்தில் இயந்திரத்தை செயற்படுத்துவதற்கு தேவையான பல உபகரணங்கள் காணப்படாமையால் பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருக்கின்றதெனவும், கதிர்வீச்சு நிபுணர்களின் தட்டுப்பாடு காரணமாக போதியளவு பரிசோதனைகள் மேற்கொள்ள முடியாதிருந்ததெனவும், உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவைப் பிரிவினால் UPS பட்டரி கொள்வனவு செய்வதற்கு தேவையான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென.	இயந்திரத்தை பொருத்துவதற்கு முன்னர் இயந்திரத்தை செயற்படுத்துவதற்கு தேவையான ஏனைய வசதிகள் மற்றும் துணைக் கருவிகள் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.
(த)	இலங்கை தேசிய வைத்தியசாலையின் காக்காய் வலிப்பு அலகிற்கு கிடைத்திருந்த TECHIFINE(DC 12-100) UPS 96 பட்டரிகளில் 32 பட்டரிகள் மாத்திரம் 2023 ஒக்தோபர் 17 திகதி UPS உபகரணத்திற்கு பொருத்தப்பட்டு ஒரு	பதிலளிக்கப்படவில்லை.	சுவாதீன விசாரணை மேற்கொண்டு பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும்.

	வருடத்திற்கு அண்மித்த காலம் MRI Scanner இயந்திரத்தின் சுற்றுக்கு தொடர்புபடுத்தாமல் காணப்பட்டதுடன், மீதியான 64 பெட்டரிகளில் 40 பட்டரிகள் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 24 பட்டரிகளின் பயன்பாடு தொடர்பாக எதுவித பதிவுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. UPS உபகரணத்திற்காக இரண்டு வகையான பட்டரிகள் ஒன்றாக இணைக்கப்பட்டு வழங்கப்பட்ட நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்டிருக்காத போதிலும், 64 பட்டரிகளுக்கு பதிலாக 2023 ஜூலை மாதம் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் பொளித்தீன் உரை (முத்திரை) இன்றிய இந்திய ரூபா 16,763 தொகைக்கு OPTI 100 (12v /100 Ah) 64 பட்டரிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுச் சந்தர்ப்பம் அளவில் அதனை பயன்படுத்தாமல் சுமார் 14 மாதங்கள் கடந்திருந்தமையால் பட்டரிகளை களஞ்சியப்படுத்தும் உஷ்ணத்தின் அளவு மற்றும் காலத்தின் படி UPS பட்டரிகளின் கொள்திறனுக்கு ஏற்பட்டுள்ள சேதம் தொடர்பாக மற்றும் இரண்டு வகையான பெட்டரிகள் ஒன்றாக இணைப்பது தொடர்பாக உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவின் பொறுப்பான உத்தியோகத்தர்களின் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளல் மேற்கொண்டிருக்கவில்லை.		

4.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த நட்டங்கள் மற்றும் கைவிடல் கூற்றில் ரூபா 31.98 மில்லியன் பெறுமதி காணப்பட்ட போதிலும், வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்டிருந்த கூற்றுக்களின்	பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.	வித்தியாசங்களை இனங்கண்டு தேவையான சரி செய்தல்கள் மேற்கொள்ள வேண்டியதுடன், சரியான தகவல்களை

	படி அந்தப் பெறுமதி ரூபா 160.64 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன்படி, ரூபா 128.66 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.		அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	தொற்று நோயியல் பிரிவின் சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காமையால் பின்வரும் தடுப்பு மருந்துகளில் காலவதியானவைகளை ஆவணப்படுத்தியிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.		
	i. கொவிட் - 19 அவசர பதிலளித்தல் மற்றும் சுகாதார முறைமையை தயாரித்தல் மூன்றாவது மேலதிக நிதி அளிப்புச் செயற்திட்டத்தின் நிதி ஏற்பாடுகள் மூலம் 2021 திசெம்பர் மற்றும் 2022 ஜனவரி மாதங்களில் ரூபா 16,102 மில்லியனிற்கான கிரயத்திற்கு கொவிட் - 19 நோயிற்கான பயிஸர் தடுப்பு மருந்து வேலைகள் 14 மில்லியன் தொகை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த தடுப்பு மருந்துகளின் காலவதியாகிய தடுப்பு மருந்துகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கும் படி வேண்டிய போதிலும், அந்தத் தகவல்கள் 2025 மார்ச் 14 திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மத்திய தடுப்பு மருந்து களஞ்சியத்தின் இருப்புப் பதிவேட்டின் படி இந்த செயற்திட்டத்தின் கீழ் மற்றும் வேறு முறைகளின் கீழ் கிடைத்திருந்த பயிஸர் தடுப்பு மருந்து வேலைகள் 20.7 மில்லியன் தொகை ஒரே தடவையில் பதிவேட்டில் பதியப்பட்டிருந்ததடன், அவற்றில் தடுத்து மருந்து வேலைகள் 7.5 மில்லியன் மத்திய தடுப்பு மருந்துக் களஞ்சியத்திலேயே காலவதியாகியிருந்தது. மத்திய தடுப்பு மருந்து	- மேற்படி -	கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 42(அ) பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வேண்டப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் ஏனைய சான்றுகள் வழங்கப்படாத அனைத்து ஆட்களுக்கும் குற்றமொன்று விளைவிக்கப்பட்டுள்ளது என கணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	களஞ்சியத்தினால் வழங்கப்பட்டிருந்த மருந்துகளில் எவ்வளவு தடுப்பு மருந்து எண்ணிக்கையொன்று அந்த நிறுவனத்திலே காலவதியாகியிருந்த எண்ணிக்கை பற்றிய தகவல்கள் மத்திய தடுப்பு மருந்துக் களஞ்சியத்தில் காணப்படவில்லை.		
	ii. கொவிட் - 19 தடுப்பூசி பதிலளிக்கக்கூடிய எதிர்ப்புச் சக்தி செயற்திட்டத்தின் மூலம் மீளளிப்புச் செய்யப்பட்ட 105 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் மீதித் தொகை அமைச்சின் நிதி ஏற்பாடுகளுடன் செலவிடப்பட்டு அலகு ஒன்று 07 அமெரிக்க டொலர்கள் வீதம் Sino pharm தடுப்பூசி 16.86 மில்லியன் கொள்வனவு செய்திருந்ததுடன், அவற்றில் தடுப்பூசி 1.78 மில்லியன் எண்ணிக்கையொன்று மத்திய தடுப்பு மருந்து களஞ்சியத்தில் காலவதியாகியிருந்தது. அதேபோல், மத்திய தடுப்பு மருந்து களஞ்சியத்தில் இருந்து வழங்கப்பட்டிருந்த தடுப்பு மருந்துகளில் எந்தளவு அந்த நிறுவனத்திலேயே காலவதியாகியிருந்த எண்ணிக்கை பற்றிய தகவல்கள் மத்திய தடுப்பு மருந்துக் களஞ்சியத்தில் காணப்படவில்லை.	- மேற்படி -	- மேற்படி -
(இ)	மருத்துவ வழங்கல் பிரிவிற்கு சொந்தமான மருந்துக் களஞ்சியங்களில் 2009 ஆண்டு முதல் 2020 வரையான காலப் பகுதியில் ஏற்பட்டிருந்தவை என இனங் காணப்பட்டிருந்த மருந்து சேதங்கள் மற்றும் நட்டங்கள் 285 சம்பவங்கள் தொடர்பாக தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய அல்லது பதிவழிக்கப்பட வேண்டிய ரூபா 452.27 மில்லியன் தொகைக்கான நட்டங்கள் நிதிக்கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் கைவிடல் தொடர்பான கூற்றில் உட்படுத்தியிருக்கவில்லை.	- மேற்படி -	உரிய அனைத்துத் தகவல்களையும் உட்படுத்தி நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.

4.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஆண்டின் போது ரூபா 34.2 மில்லியன் செலவிடப்பட்டு அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டு 2022 திசெம்பர் 16 திகதி முதல் 2023 ஜுன் 28 திகதி வரையான காலப் பகுதியில் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்த 10 Automated Immunoassay/ Hormone analyzer (Mindray Clia 2000i) உபகரணங்களை பயன்படுத்தி பரிசோதனைகள் மேற்கொள்ளல் ஆரம்பிப்பதற்காக கணிசமான காலம் தாமதமடைந்திருந்ததெனவும் மற்றும் 2025 ஜனவரி 23 திகதி வரை பயன்படுத்தியிருக்கவில்லை. இதன்படி, கொள்வனவு செய்தல், தேவைப்பாடு மற்றும் பயன்படுத்துவதற்கு தேவையான ஏனைய வளங்களை பெற்றுக்கொளவதின் இயலுமை தொடர்பாக ஆய்வொன்று இன்றி மேற்கொள்ளப்பட்டதென அதவானிக்கப்பட்டது. இந்த நிலைமையில் 04 உபகரணங்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 13.68 மில்லியன் தொகை முழுமையாகவே விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்தது. இந்த உபகரணங்களின் மூலம் 49 வகையான பரிசோதனைகள் மேற்கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும், அவற்றில் 08 வகையான பரிசோதனைகள் மாத்திரம் வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், உண்மையான தேவைப்பாட்டை இனங்கண்டு அந்தப் பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளல் கொள்திறனுடனான உபகரணங்களை கொள்வனவு செய்திருந்தால் இதைவிட குறைந்த அலகு விலையொன்றின் கீழ் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு இயலுமை காணப்பட்டதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இந்த	அனலைசரை பயன்படுத்தி மேற்கொள்ளக்கூடிய சிறப்புப் பரிசோதனைகள் இடையே பொதுவான மேற்கொள்ளக்கூடிய 05 பரிசோதனைகள் கணக்காய்வுத் திகதியளவிலும் மேற்கொள்ளப்பட்டு வந்தது என. ஏனைய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படின் அதற்காக பிரத்தியேக தரக் கட்டுப்பாடு QC மற்றும் Calibrators வினைப்பொருட்கள் (Reagent) விலைகள் மிகவும் உயர்வாக இருப்பதனால அந்த QC மற்றும் Calibrators மற்றும் அனேகமாக மேற்கொள்ப்படுகின்ற 05 பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றது என. தேவைப்படுகின்றதெனவும், Reagent pack ஒன்றின் மூலம் 100 எண்ணிக்கையான Test மேற்கொள்ள முடியுமாக இருந்த போதிலும், அந்த அளவு எண்ணிக்கையொன்று மேற்கொள்ள கிடைக்காமையால் மேலதிகமாக Calibrators, QC மற்றும் Reagent இற்காக பாரிய செலவொன்று மேற்கொண்டு அந்தப் பரிசோதனை மேற்கொள்வதற்கான செலவு ஆக்கபூர்வமற்றதாகும் என.	கொள்வனவு செய்தல் தொடர்பாக முழுமையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உபகரணங்கள் தொடர்பாக மாத்தளை வைத்தியசாலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேலதிக பரிசோதனையின் போது இயந்திரம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்ட போதிலும், அது தன்னியமக்கமாக செயற்படுத்துவதற்கு தேவையான பொருட்கள் (Consumables) மற்றும் வினைப்பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக வருடாந்தம் ரூபா 12 மில்லியன் தொகையினை மிகைத்த கிரமொன்றை மேற்கொள்ள நேரிட்டிருந்தது.

(ஆ) மஹமோதர போதனா வைத்தியசாலைக்காக 2009 ஆண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த Hydroclave கழிவுப் பொருள் முகாமைத்துவ அலகு வைத்தியசாலைக்கு கிடைத்த நாள் முதல் பயன்படுத்தப்படாது இருக்கும் போது ஜேர்மன் இலங்கை நட்புறவு மகளிர் வைத்தியசாலைக்காகவும், அதே கம்பனியினால் அந்த வியாபார சின்னத்தின் கீழ் சிகிச்சை கழிவுப் பொருள் முகாமைத்துவ அலகொன்று (உபகரணம் ஒன்று) 2023 திசெம்பர் 28 திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், இந்த இயந்திரம் பயன்படுத்தப்பட்ட போதிலும், தொற்று கழிவுப் பொருட்கள் எண்ணிக்கையில மாற்றமொன்று காணப்படாமை, ஈரத் தன்மை ஏற்படல் மற்றும் துர்நாற்றம் வீசுதல் Shredder ஒன்றினை பயன்படுத்தி மேற்கொள்ள முடியும் எனினும், அது செய்முறை சாத்தியமற்றதென மற்றும் செலவு அதிகரித்தல் Hydroclave உரிய முறையில் செயற்படுத்தப்படுகின்றதென நுண்ணங்கி விஷேடத்துவ மருத்துவரினால் உறுதிப்படுத்தலொன்று பெற்றுக்கொள்ளாமை ஆகிய காரணங்களினால் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு சுமார் 05 நாட்கள் பயன்படுத்தப்பட்ட பின்னர் 2024 மார்ச் 12 திகதியின் பின்னர் கழிவுப் பொருள் முகாமைத்துவ அலுவல்களுக்காக பயன்படுத்த முடியாமல் காணப்பட்டதுடன்,

இந்தக் கழிவுப் பொருள் முகாமைததுவ அலகு வழங்குவதற்கு முன்னர் வைத்தியசாலை அதிகாரிகளிடமிருந்து அல்லது இந்த விடயம் தொடர்பாக விஷேடத்துவ அறிவுடைய உத்தியோகத்தரிடம் பூர்வாங்க விசாரணையொன்று அல்லது பரிந்துரை பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும், இந்த இயந்திரம் புதிய வைத்தியசாலை திறக்கப்பட்ட பின்னர் செயற்படுத்த தொடங்கிய போதிலும், செயற்படுத்தலின் போது ஏற்பட்டிருந்த சிக்கல் நிலைமை தொடர்பாக சுகாதார அமைச்சிற்கு அறிவுறுத்தப்பட்டது எனவும், அதன் பின்னர் கழிவுப் பொருள் அகற்றும் சிக்கலுக்கு பரிகாரம் ஒன்றாக அப்போது சுகாதார அமைச்சு உடன்படிக்கை மேற்கொண்டிருந்த நிறுவனம் ஒன்றான சிசிலிஹனாரோ நிறுவனத்திற்கு சிகிச்சை கழிவுப் பொருட்கள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது எனவும், எமது வைத்தியசாலையில் அந்த உடன்படிக்கையில் சேவை பெறும் நிறுவனம் ஒன்றென அடங்கியிருப்பதனால் குறிப்பிட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அந்த சேவைகளுக்காக பில் பத்திரங்கள் தீர்க்கப்படுகின்றதென.

பெறுகையின் போது அரசிற்கு நட்டம் ஏற்படாதவாறு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், ஏற்பட்டிருந்த நட்டத்திற்கு பொறுப்பானவர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

	அதற்காக செலவிடப்பட்ட பணம் விளைவற்றதாகியுள்ளது. அதன்படி, தனியார் வழங்குனர் ஒருவருக்கு வைத்தியசாலையின் சிகிச்சை கழிவுப் பொருட்கள் எடுத்துச் செல்வதற்கு சாட்டப்பட்ட காரணத்தினால் 2024 மே முதல் 2024 திசெம்பர் இறுதி வரை கூட்டுத்தொகை ரூபா 8.14 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.		
(இ)	கேகாலை போதனா வைத்தியசாலையில் நாளாந்தம் சேகரிக்கப்படும் சிகிச்சை கழிவுப் பொருள் உட்பட பொதுவாக சுற்றாடலுக்கு நேரிடியாக அகற்ற முடியாத அழிக்கப்பட வேண்டிய, 365 கிலோ கிராமிற்கு அண்மித்த கழிவுப் பொருட்களை எரிப்பதற்காக ரூபா 17 மில்லியனுக்கு அண்மித்த செலவொன்று மேற்கொண்டு எரிகூடமொன்று (incinerator) நிர்மாணிக்கப்பட்டு 2024 ஜுன் 07 திகதி அளவில் செயற்பாடுகளையும் பரிசோதனை செய்யப்பட்டிருந்த போதிலும், வைத்தியசாலை பதவியணியினருக்கு முறையான பயிற்சியொன்று வழங்கியிருக்காமை மற்றும் முறைப் பிரகாரம் வைத்தியசாலைக்கு ஒப்படைத்து / ஒப்புக் கொண்டு இருக்காமையால் ஒரு கிலோ கிராம் கழிவுப் பொருளுக்கு ரூபா 185(வட் இன்றிய) செலவொன்று மேற்கொள்ளப்பட்டு தனியார் கம்பனியொன்றின் மூலம் அகற்றுவதற்கு நேரிட்டிருந்ததுடன், அதற்காக ஒரு வருடத்திற்கு அண்ணளவாக ரூபா 24 மில்லியனை விட கூடிய பயனற்ற செலவொன்று மேற்கொள்ள நேரிட்டிருந்தது.	இன்சினரேடர் இயந்திரம் செயற்படு மட்டத்தில் வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்படவில்லை எனவும், அதனால் அமைச்சின் அங்கீகாரத்தின் கீழ் சிகிச்சை கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக வெளி நிறுவனம் ஒன்றிற்கு அனுப்பப்படுகின்றதெனவும், இன்சினரேடர் இயந்திரம் செயற்படு மட்டத்தில் வைத்தியசாலைக்கு கிடைத்த பின்னர் வெளி நிறுவனத்திற்கு அனுப்புவது முடிவுறுத்தப்படும் எனவும்.	முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
(ஈ)	கேகாலை போதனா வைத்தியசாலையினால் 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 34,485,827 தொகை பெறுமதியான 04 இயந்திரங்களின் கொள்வனவின் போது தேவைப்பாடுகள் மற்றும் இயந்திரத்தின் செயற்பாடுகள் தொடர்பாக முறையான	Urine Analyzer- தற்போது தேவையான நுண்ணுயிர் விண்ணப்பிக்கப்பட்டு பரிசோதனை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு பரிசோதனை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனவும், ஏனைய இயந்திரங்கள் தேவையான வைத்தியசாலைகளை கண்டறிந்து அந்த	- மேற்படி -

சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்படாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் பயன்படுத்துவதற்கு அல்லது இந்த இயந்திரத்தை தேவைப்பாடுள்ள வேறு வைத்தியசாலையொன்றுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் விளைவற்று காணப்பட்டது.	நிறுவனங்களுக்கு முறைப் பிரகாரம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	

4.9 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாமை

கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பான விபரம்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு குறிப்பிட்ட கால வரையறையினுள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளித்தல் மேற்கொள்ளப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், 2025 ஏப்ரல் 20 திகதி அளவிலும் பதிலளிக்கப்படாத மொத்த கணக்காய்வு ஐயவினாக்கள் எண்ணிக்கை 117 ஆக காணப்பட்டதுடன், பதிலளிக்கப்படாத ஒரு வருடத்திற்கு மிகையான காலம் கடந்துள்ள கணக்காய்வு ஐயவினாக்கள் 27 ஆகும்.	கணக்காய்வு ஐயவினாக்கள் சுகாதார அமைச்சு மற்றும் அதற்குரிய ஏனைய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு தெளிவுகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தமையால் அவ்வாறு பதில்கள் பெற்றுக்கொள்ளும் போது கால தாமதம் ஏற்படுவதுடன், அந்த காரணத்தினால் 2025 ஏப்ரல் 20 திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்தை விட மிகையான காலம் கடந்திருந்த கணக்காய்வு ஐயவினாக்கள் எண்ணிக்கை 05 காணப்படுகின்றதெனவும் மற்றும் முடியுமான எல்லா சந்தர்ப்பங்களும் குறிப்பிட்ட காலத்தினுள் பதிலளிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	கணக்காய்வு ஐயவினாக்களில் காட்டப்பட்டுள்ள நிச்சயிக்கப்பட்ட காலப் பகுதியில் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.10 முகாமைத்துவ திறமையின்மை

	கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பான விபரம்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் பச்சை உணவு வழங்கல் மற்றும் நோயாளிகளுக்கு மற்றும் கனிஷ்ட ஊழியர்களுக்கு சமைத்த உணவு வழங்கல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		

(i)	2024 ஜனவரி முதல் ஒக்தோபர் வரை பச்சை உணவு வழங்குதல் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்ட போது தேவையான போசாக்குள்ள உணவு வேலையொன்று வழங்குவதற்காக வழங்கப்பட வேண்டிய மீன், கருவாடு, முட்டை, பால்மா, தோடம்பழம், அவகாடோ பழம் அனேக நாட்களில் வழங்குதல் புறக்கணிக்கப்பட்டிருந்தது.	இந்தக் காலப் பகுதியில் முட்டை மற்றும் பால்மாவிற்கு சந்தையில் தட்டுப்பாடொன்று காணப்பட்டமையால் உடன்படிக்கையின் பிரகாரம் அதற்கு பொருத்தமான பதிலீடுகள் வழங்கப்பட்டிருந்ததென அவகாடோ / ஜெலி / சமபோஷ உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டளையிடும் சந்தர்ப்பத்தில் மாதத்திற்கான வரையறையை மிகைத்திருந்தமையால் பெற்றுக்கொள்ளவில்லை எனவும், மீன் மற்றும் கருவாடு வழங்குதல் சிக்கல் நிலைமை காணப்படுகின்றது என.	நோயாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட போஷாக்குள்ள உணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.
(ii)	பச்சை உணவுக்காக கூறுவிலை அழைக்கும் போது மற்றும் உச்ச விலையை தீர்மானிக்கும் போது நிலவுகின்ற சந்தை விலை தளம்பல்கள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்காததுடன், பச்சையுணவு 16 விடயங்களுக்காக சந்தை விலையை விட மிகையான விலை செலுத்தப்பட்டிருந்தமையால், 2024 ஆண்டின் போது அரசிற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 9,462,819 தொகையாக காணப்பட்டது.	பதிலளிக்கப்படவில்லை.	பெறுகைகள் அரசிற்கு நட்டம் ஏற்படாதவாறு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், ஏற்பட்டிருந்த நட்டத்திற்கு பொறுப்பானவர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(iii)	2024 செப்தம்பர் மற்றும் ஒக்தோபரில் மாத்திரம் உணவுகளுக்காக கட்டளை இடப்பட்டு பெற்றுக்கொள்ளாத ஊழியர் எண்ணிக்கை முறையே காலை 644, பகல் 2236 மற்றும் இரவு 2032 தொகை காணப்பட்டது. இதன்படி பாரிய எண்ணிக்கையான உணவு மீதியாக காணப்பட்டதுடன், அந்த மீதியின் எண்ணிக்கையை ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் இவ்வாறு ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கும் படியும், மேற்பார்வை அலுவல்கள் சரியாக மேற்கொள்ளும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என.	முறையான செய்முறை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	2024 ஜூலை 30 திகதி கையொப்பமிடப்பட்டிருந்த இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவை வழங்குவதற்கான திருத்தி உடன்படிக்கையில் நிபந்தனை இலக்கம் 10 இன் படி அனைத்துப் பிரிவுகளிலும் வேலைகளும் திருப்திகரமான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதென உரிய உத்தியோகத்தரினால் சான்றுபடுத்திய பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2024 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் தொடர்பாக சுத்திகரிப்பின் முன்னேற்றம் தொடர்பாக விபரங்கள் பெற்றுக்கொள்ளாமல் அந்தக் காலப் பகுதிக்காக ரூபா 34.77 மில்லியனிற்கான தொகையொன்று ஒப்பந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.	இந்த பில்பத்திரம் 2024 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்குரிய முன்னைய பில்பத்திரமாக காணப்படுவதுடன், அந்தக் காலப் பகுதியில் நிலவிய காகிதாகிகள் தட்டுப்பாடு காரணமாக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை முன்னேற்றம் பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும், அதன்படி மாதாந்தம் இனங்காணப்பட்ட சிக்கல்கள் அறிவிக்கப்படவில்லை எனவும், அந்த மூன்று மாதங்களுக்குரிய பெற்றுக்கொள்ளப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் அடிப்படையில் உறுதிப்பத்திரங்கள் பரிசோதனை செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டது என.	தேவையை திருப்திகரமாக நிறைவேற்றியதை உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலையில் இரத்த சுத்திகரிப்பு (Dialysis) மேற்கொள்ளும் 05 இயந்திரங்கள் மாத்திரம் காணப்படுவதுடன், அதன் மூலம் இரத்த சுத்திகரிப்பு (Dialysis) மேற்கொள்ளும் 42 நோயாளிகள் 2025 பெப்ரவரி கணக்காய்வுத் திகதியளவில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்ததுடன், வைத்தியசாலையில் ஏனைய வாட்டு ஒன்றிலிருக்கும் நெருக்கமாக கவனம் செலுத்த வேண்டிய நோயாளர்களை இந்த வாட்டுக்கு அவசர சிகிச்சைக்காக அனுப்பப்படுகின்றது. இரத்த சுத்திகரிப்பு (Dialysis) மேற்கொள்ளும் தேவைப்பாடு காணப்படும் மேலும் 42 நோயாளர்கள் காத்திருக்கும் பதிவேட்டில் காணப்பட்டது. காத்திருக்கும் பதிவேட்டில் காணப்படும் மூன்று நோயாளர்கள் இறந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்ட நோயாளர் இடையே வைத்தியசாலை	வைத்தியசாலையில் கடந்த 05 வருடங்களுக்குள் நோயாளர் உபசரிப்பு சேவைக்காக பயன்படுத்தக்கூடிய வாட்டு ஒன்று அல்லது அலகு ஒன்று முறையான வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை எனவும், அதன் காரணமாக இரத்த சுத்திகரிப்பு (Dialysis) அலகு காணப்படும் ஐந்து மாடிக் கட்டிடத்தை விரிவாக்குவதற்காக அடிப்படை தயாரிக்கப்பட்டுள்ளது எனவும், சுற்றியுள்ள வாட்டுக்கள் மற்றும் அலகுகளில் இடங்களை இரத்த சுத்திகரிப்பு அலகிற்காக பயன்படுத்துதல் செய்முறைசார் சிக்கல்கள் காணப்படுவதுடன், அண்மையிலுள்ள வைத்தியசாலைகளில் இரத்த சுத்தகரிப்பு மேற்கொள்வதற்காக சந்தர்ப்பமளித்துள்ள நோயாளர்கள் பொருளாதார, சமூக காரணங்களால் தூர இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு இரத்த சுத்திகரிப்பிற்காக குறிப்பிட்ட நேரத்தில் பங்குபற்றாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது எனவும், அதன் காரணமாக	அத்தியவசிய வசதிகளை அபிவிருத்தி செய்து நோயாளர் உபசரிப்பு சேவை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 16 நோயாளர்களுக்கு வேறு வைத்தியசாலைகளின் மூலம் இரத்த சுத்திகரிப்பு (Dialysis) மேற்கொள்ளப்படுகின்றது. அதிகாரப் பிரதேசத்தின் நோயாளர்களின் வாழ்க்கை ஆபத்து நிலையை குறைப்பதற்காக இரத்த சுத்திகரிப்பு (Dialysis) இயந்திரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய கடின தேவைப்பாடு காணப்பட்டதுடன், அதற்காக வைத்தியசாலை வளாகத்தில் இடவசதி போதாமை சிக்கலொன்று காணப்படுகின்றதென கணக்காய்வு சந்தர்ப்பத்தில் அவதானிக்கப்பட்டதுடன், போதனா வைத்தியசாலை என தரம் உயர்த்தப்பட்ட போது நோயாளர் எண்ணிக்கை அதிகரித்த போதிலும், அத்தியவசியமான வசதிகள் அதிகரிக்கப்பட்டிருக்கவில்லை.	வைத்தியசாலையில் இரத்த சுத்திகரிப்புச் சேவைகள் தேவைப்படும் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கக்கூடியவாறு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நோயாளர் உபசரிப்பு சேவை கூடிய விரைவில் விரிவாக்கப்பட வேண்டியுள்ளது என.	
(ஈ)	கண்டி தேசிய வைத்தியசாலை இழைய நோயியல் ஆய்வுகூடத்தில் புற்றுநோயை இனங்காண்பதற்காக மேறகொள்ளப்படுகின்ற பிரத்தியேக பரிசோதனையொன்றான Immune His to Chemistry (IHC) பரிசோதனை மேற்கொள்ளப்படும் பகுப்பாய்வு செய்யும் இயந்திரத்திற்கு தேவையான 53 வகையான வினைப்பொருட்கள் (Regents) மற்றும் பிறபொருளெதிரி (Antibodies) மற்றும் Biospy பரிசோதனைக்கு பயன்படுத்தப்படுகின்ற 39 வகையான IHC Markers 2023 நவம்பர் 17 திகதியளவிலும் காலவதியாகிய காலத்தை மிகைத்து 01 மாதத்திற்கும் 14 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அவை பரிசோதனைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.	கண்டி தேசிய வைத்தியசாலையின் இழைய நோயியல் ஆய்வுகூடத்தில் Biospy மாதிரி பரிசோதனைக்கு செய்யும் செய்முறைக்காக பயன்படுத்தப்படும் Automated Slide Stainer இயந்திரத்தின் திருத்த வேலைகளை பூர்த்தி செய்து செயற்படு நிலையில் காணப்படுகின்றதெனவும், 2024.12.11 திகதி இந்த இயந்திரத்தின் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றதென.	காலவதியாகாதவாறு சரியான எண்ணிக்கைகளில் ஆய்வுகூடப் பண்டங்கள் கட்டளையிட்டு களஞ்சியப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும்.

(உ)	கண்டி தேசிய வைத்தியசாலையில் 03 கதிர்வீச்சு விஷேடத்துவ வைத்தியர்களினால் வழங்கப்பட்ட தகவல்களின் படி 2024 மார்ச் 06 திகதி அளவில் CT பரிசோதனை காத்திருக்கும் பதிவேட்டில் 1738 நோயாளர்கள் காணப்பட்டனர். அந்த நோயாளர்களின் காத்திருக்கும் காலம் 2026 மார்ச் 12 திகதி வரையாக இருந்தது. எவ்வாறாயினும், நோயாளர் ஒருவருக்கு தனது CT பரிசோதனை மேற்கொள்வதற்கு இரண்டு வருடங்களுக்கு அண்மித்த காலம் ஒன்று காத்திருக்கும் பதிவேட்டில் தங்கியிருக்க நேரிட்டிருந்தது.	வைத்தியசாலையில் காணப்படும் மனித மற்றும் பௌதீக வளங்களில் காணப்படும் பற்றாக்குறை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததுடன், மேலதிக கடமைகளுக்காக மாதிரி கொடுப்பனவுகளை அங்கீகரித்தல், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், தரவுகளை களஞ்சியப்படுத்தல் வசதிகள் ஆகியவற்றின் மூலம் இந்த நிலைமைகளை குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	அத்தியவசியமான மனித மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்து நோயாளர் உபசரிப்பு சேவைகள் போதியளவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	கண்டி தேசிய வைத்தியசாலையில் 08 வகையான Ultrasound Scan பரிசோதனைகள் மேற்கொள்வதற்காக 2024 மார்ச் 06 திகதி அளவில் 03 வைத்தியர்களின் படி 10,551 நோயாளர்களுக்காக 14 காத்திருக்கும் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருந்தது. அதன்படி, அந்தப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்காக நோயாளர்கள் 02 மாதங்களும் 21 நாட்கள் முதல் 09 மாதங்களும் 20 நாட்கள் வரையான காலம் காத்திருக்கும் பதிவேட்டில் இருக்க நேரிட்டிருந்தது.	இந்த நிலைமையை குறைப்பதற்காக புதிய மருத்துவ உபகரணங்கள் போலவே தேவையான ஏனைய மனித மற்றும் பௌதீக வளங்களை சுகாதார அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்வதற்காக வேண்டப்பட்டுள்ளது எனவும், மேலும், ஒரு நாளைக்கு 300 புற்றுநோயாளர்கள் பதிவு செய்யப்பட்டு சிகிட்சை பெற்றுக்கொள்ளப்படுவதுடன், அவர்களின் சிகிச்சை செய்முறையினுள் கதிர் வீச்சு மற்றும் கீமோதெரபி சிகிச்சைகளுக்கு முன்னர் மற்றும் பின்னர் Ultrasound Scan பரிசோதனை மேற்கொள்ள வேண்டியிருந்தது. மேலும், மிக உணர்வுபூர்வமான உறுப்புக்களுக்காக CT பரிசோதனை மேற்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் Ultrasound Scan பரிசோதனை மேற்கொள்ள வேண்டியிருந்ததென.	விஞ்ஞான ரீதியான அடிப்படையொன்றுடன் ஆய்வுகள் மேற்கொண்டு நோயாளர்களுக்கு மிகவும் சிறந்த சேவையொன்று வழங்கக்கூடியவாறு செய்முறையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	சுகாதார, போஷாக்கு மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சின் மருத்துவப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற மருத்துவ வழங்கல்கள், வழங்கல் செய்முறை தொடர்பாக 2018 மார்ச் 14 திகதிய	தற்போது மருத்துவ வழங்கல்களுக்குரிய வெப்பநிலை வீச்சினுள் களஞ்சியப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு மத்திய வாயு சீராக்கல் முறைமை செயற்படுத்தப்படுகின்றதெனவும். டெண்டர் தெரிவு மாதிரிகள்	மாதிரிகளின் களஞ்சியத்தின் நவீனமயப்படுத்தும் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்து உரிய கருமதத்திற்காக பயன்படுத்த வேண்டும்.

	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விஷேட கணக்காய்வு அறிக்கையின் பரிந்துரை 8.30 இன் படி மருத்துவ வழங்கலுக்குரிய வெப்பநிலை வீச்சுக்களினுள் களஞ்சியப்படுத்தாமையால் அவற்றின் பண்புசார் தன்மை வீழச்சியடைதல் நேரிடுகின்றமையால் மருந்துகள் கொள்வனவின் போது மாதிரிகள் மற்றும் பெற்றுகொள்ளக்கூடிய தெரிவு மாதிரிகள் அந்த இருப்பு வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டு பயன்பாடு முடிவடையும் வரை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எனினும், ஏழு வருடங்களை அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், இந்த மாதிரிகளை களஞ்சியத்தில் ஒழுங்குபடுத்திக் கொள்வதற்காக 2024 திசெம்பர் 31 திகதி வரை தேவையான அலுவல்கள் மேற்கொண்டிருக்காததுடன், இந்த மாதிரிக் களஞ்சியங்களை தயாரிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த வாயு சீராக்கப்பட்ட களஞ்சியங்கள் கணக்காய்வுத் திகதி வரையும் எதுவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் காணப்பட்டதென மேற்கொள்ளப்பட்ட பௌதீக களஞ்சிய பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.	பெற்றுக்கொள்ளல், மருத்துவ வழங்கல் பிரிவினால் மேற்கொள்ளப்படாததுடன், மருத்துவ வழங்கல்கள் - மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கும் போது மாதிரிகள் பெற்றுக்கொள்ளல், குறிப்பிட்ட மாதிரிகள் களஞ்சியத்தின் வேலைகள் 2024 மே 31 திகதி பூர்த்தி செய்வதற்கு முயற்சி எடுத்த போதிலும், அங்கு தொழில்நுட்ப சிக்கல்களினால் CEEB நிறுவனத்திற்கு வேலை விடயங்கள் பூர்த்தி செய்ய முடியாமல் போனது எனவும், தற்போது குறிப்பிட்ட அலுவல்கள் இறுதிக் கட்டத்தில் உள்ளது என.	
(ஏ)	2024 ஆண்டின் வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து மருத்துவ வழங்கள் பிரிவிற்கு கிடைத்த நன்கொடைகளை துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்காக 38 சந்தர்ப்பங்களில் ரூபா 321.38 மில்லியனை விட மிகையான தாமதக் கட்டணம் ஒன்று மற்றும் பண்டகசாலைக் கட்டணமொன்று செலுத்தியிருந்ததெனவும், அவற்றில் 07 சந்தர்ப்பங்களில் குளிரூட்டப்பட்ட கொள்களன்களுக்காக மின்சாரக் கிரயம் ரூபா 65.33 மில்லியன் தொகை உட்பட ரூபா 115.45 மில்லியன் தொகை தாமதக்	இது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு அறிவிக்கும் படி பிரதான உள்ளகக் கணக்காய்வாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், அதன்படி கிடைக்கக்கூடிய அறிக்கையின் படி தேவையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என.	சுவாதீன விசாரணை ஒன்று மேற்கொண்டு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு செயற்பட வேண்டும்.

கட்டணம் மற்றும் பண்டகசாலைக் கட்டணம் என செலுத்தப்பட்டிருந்ததென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து இலங்கை வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கு கிடைக்கக்கூடிய நன்கொடைகள் தொடர்பாக முறையான ஒருங்கிணைப்பொன்று காணப்படாமையால் மருத்துவ வழங்கல் பிரிவின் பண்டகசாலைப் பிரிவிற்கு ஆவணங்கள் கிடைப்பதில் தாமதம் அடைதல் மற்றும் தேசிய மருத்துப் பொருட்கள் ஒழுங்குறுத்தல் அதிகாரசபையின் அங்கீகாரம் கிடைத்தலின் தாமதங்கள் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தெனவும், அதற்காக 26 நாட்களுக்கும் 306 நாட்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்ததெனவும், அதன் காரணமாக 08 சந்தர்ப்பங்களில் நன்கொடைகளை விடுவிப்பதற்கு ரூபா 10 மில்லியனை விட கூடிய தாமதக் கட்டணம் மற்றும் துறைமுக பண்டகசாலைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. சில சந்தர்ப்பங்களில் முன்கூட்டிய அறிவுறுத்தல் மருத்துவ வழங்கல் பண்டகசாலை பிரிவிற்கு கிடைக்கப் பெறாமையால் விடுவத்தல் செய்முறை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டதால் துறைமுகத்தினால் அந்த இருப்புக்களை ஏலவிற்னை செய்வதற்காக ஏலவிற்பனை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்ததெனவும், லொறிகள், கெப் வண்டிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் விடுவிப்பதில் மேற்கொள்ளப்பட்ட தாமதக் கட்டணங்கள் மருத்துவ வழங்கல் பிரிவின் மருந்ததுகள் கொள்வனவிற்கான செலவு விடயத்தின் மூலம் செலவிடப்பட்டிருந்தது என தெரிவுக் கணக்கய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(ஐ)	மருத்துவ வழங்கல் பிரிவினால் குறிப்பிட்டவாறு வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் வழங்குதல் முகாமைத்துவப்படுத்தாமை காரணத்தினால் 2024 ஆண்டின் போது குருநாகல் போதனா வைத்தியசாலை மற்றும் கேகாலை பொது வைத்தியசாலையினால் ரூபா 10,782,466 தொகை பெறுமதியான மருந்துகள் மற்றும் ரூபா 3,184,000 தொகை பெறுமதியான அறுவை சிகிச்சை விடயங்கள் உள்நாட்டு கொள்வனவின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், மருத்துவ வழங்கல் பிரிவினால் குருநாகல் போதனா வைத்தியசாலையின் மருந்து களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த மருந்துகளில் ரூபா 50,445,026 தொகையை விட கூடிய பெறுமதியையுடைய 26 வகையான மருந்துகள் களஞ்சியக் கட்டிடத்தின் தரை மாடியில் மற்றும் முதலாவது மாடியின் நடைவழிகளில் 2025 பெப்ரவரி 27 திகதி அளவிலும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு நடைவழிகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த காலம் 02 நாட்கள் முதல் 01 வருடமும் 07 மாதங்களும் கடந்திருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	- மேற்படி -
(ஒ)	2024 ஆண்டின் போது 55 சந்தர்ப்பங்களில் கேகாலை பொது வைத்தியசாலையினால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 2,680,284 தொகை பெறுமதியான மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சைப் பொருட்கள் உள்நாட்டுக் கொள்வனவின் கீழ் கொள்வனவு செய்வதற்கும் நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையினால் 10 சந்தர்ப்பங்களில் ரூபா 308,725 தொகை பெறுமதியான 09 இரசாயன பொருள் விடயங்கள் கொள்வனவு செய்வதற்காக அங்கீகாரம் வழங்குவதற்காக மருத்துவ வழங்கல் பிரிவினால் 04 நாட்கள் முதல் 46 நாட்கள்	பதிலளிக்கப்படவில்லை.	- மேற்படி -

	வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தது.		
(ஓ)	வைத்தியசாலை முறைமையில் நிறுவப்படுகின்ற மையப்படுத்தப்பட்ட வாயு சீராக்கல் முறைமை சத்திர சிகிச்சை கூட அலுவல்களை பாதுகாப்பாக செயற்படுத்துவதற்கான காரணியொன்றாகும். இதன் மூலம் சத்திர சிகிச்சை கூடத்தில் சத்திர சிகிச்சை அலுவல்கள் மேற்கொள்ளப்படும் போது சேகரமாகும் பிரதிகூலமான கிருமிகள் அடங்கிய வாயு வெளிப்படல் வழமையாக நேரிடுகின்றது. அதன்படி, மையப்படுத்திய வாயு சீராக்கல் முறைமை வைத்தியசாலைகளுக்கு அத்தியவசியமான காரணியாக இருந்த போதிலும், கண்டி தேசிய வைத்தியசாலையில் காணப்படும் 08 மையப்படுத்தப்பட்ட வாயு சீராக்கல் முறைமைகளில் ரூபா 50 மில்லியனுக்கு மிகையான பெறுமதியுள்ள 04 முறைமைகள் 04 மாங்களுக்கும் 25 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் செயற்படாமல் காணப்பட்டது.	திருத்த வேலை மேற்கொள்ளல் பொருளாதார ரீதியாக பயனற்றதாகும் என மின்சார சபையினால் மற்றும் சுகாதார அமைச்சின் பொறியியலாளரின் பரிந்துரையாக இருந்த போதிலும், அதற்காக புதிய மையப்படுத்தப்பட்ட வாயு சீராக்கல் முறைமையொன்று நிறுவுவதற்காக தற்போது பல வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும், அதன்படி, தற்போது DU பிரிவின் புதிய chiller இயந்திரம் வழங்கப்பட்டு பொருத்தப்பட்டு பெறுகை அலுவல்கள் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது என.	வாயு சீராக்கல் முறைமை நிறுவுவதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் செயற்பட வேண்டும்.
(ஔ)	பிரத்தியேக சிறுவர் சிகிச்சை அலகொன்றிற்காக Ventilator இயந்திரமொன்று அத்தியவசிய உபகரணமொன்றாக காணப்படுவதுடன், அதனை செயற்படுத்துவதற்கு Compressor இயந்திரம் மிகவும் அத்தியவசியமாகும். கம்பளை தள (போதனா) வைத்தியசாலையின் பிரத்தியேக சிறுவர் சிகிச்சை அலகில் ஒரு மாதத்தில் 200 குழந்தைகளுக்கு அண்மித்த எண்ணிக்கையொன்று சிகிச்சை பெறுவதுடன், அந்தப் பிரிவிற்கு தேவையான மருத்துவ வாயு வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் இரண்டு Compressor இயந்திங்கள் 2018 ஆண்டு முதல் செயற்படாமல் காணப்பட்டது அவற்றில் ஒரு	தற்போது Ventilator இயந்திரத்தை செயற்படுத்துவதற்காக மருத்துவ வாயு சிலிண்டர்கள் சிக்கலொன்றின்றி பயன்படுத்தப்படுகின்றதெனவும், அதன் காரணமாக முதிர்ச்சியற்ற குழந்தைகளுக்காக சிகிச்சை அலுவல்கள் தடங்களின்றி செயற்படுத்தப்படுகின்றதெனவும், மருத்துவ வாயு முறைமை நிறுவுவதற்காக திறந்த கூறுவிலைகள் அழைக்கப்பட்டு கூறுவிலைகள் அமைச்சின் பெறுகை குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது என.	மருத்துவ வாயு முறைமை நிறுவுவதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் செயற்பட வேண்டும்.

	இயந்திரம் திருத்த வேலை மேற்கொள்ள முடியாது என உயிரியல் மருத்துவப் பொறியியலாளரினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன், அடுத்த இயந்திரமும் 2023 திசெம்பர் 18 திகதி முதல் செயற்படாமல் காணப்பட்டது.		
(க)	சுகாதார சேவைத் திணைக்களத்திற்காக நியதிச் சட்ட முறை அதிகாரம் வழங்குவதற்கும் அதன் பொறுப்புக்களை நிச்சயப்படுத்துவதற்கும், பிரதேச சுகாதார சபைகள் மற்றும் வைத்தியசாலைக் குழுக்கள் நியமனம் செய்வதற்கும் பொதுமக்கள் சுகாதாரம் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களினால் மிகவும் ஆக்கபூர்வமான நிருவாகம் ஒன்றினை ஏற்படுத்துவதற்கும் குறிக்கோளாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட 1952 இன் 12 ஆம் இலக்கம் கொண்டு சுகாதார சேவைச் சட்டம் தற்போதைய மாற்றங்களுக்கு பொருத்தமானவாறு திருத்துவற்கு பொறுப்பான தரப்பினர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 13 ஆவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபைச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டதுடன், இந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2024 ஆண்டு வரை அதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. சட்டத்தின் 2(1) மற்றும் 2(2) பிரிவுகளின் மூலம் காட்டப்பட்டுள்ள சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் அதன் பிரிவுகள் தற்போது செயற்படும் முறை, மாகாண சபை செயற்படுத்தப்பட்டவுடன், நிறுவப்பட்ட மாகாண சுகாதார திணைக்களங்களுக்கு இந்த பிரிவு தாக்கத்தை ஏற்படுத்தும் முறை மற்றும் மத்திய அரசின் சுகாதார திணைக்களம் தற்போது செயற்படாமையால் இந்த பிரிவுகளை வலியுறுத்தும்	குறிப்பிட்ட வைத்தியசாலைக் குழுக்கள் நியமனம் செய்த பின்னர் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அந்தக் குழுக்களை பகிரங்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், சட்டத்தின் 14 ஆவது பிரிவின் படி வைத்தியசாலைக் குழுக்களில் இருந்து வருடாந்த அறிக்கை பெற்றுக்கொள்வதற்கும் அவ்வாறு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படாத வைத்தியசாலை தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என.	தற்போதைய மாற்றங்களுக்கு பொருத்தமாக சட்டத்தை திருத்துவதற்கு பொறுப்பான தரப்பினர் செயற்பட வேண்டும்.

முறைகள் தொடர்பாக விடயங்களை சமர்ப்பிக்கும் படி வேண்டப்பட்டு 21 மாதங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், முறையான பதிலொன்று கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.
சட்டத்தின் 4(1) பிரிவின் காட்டப்பட்டுள்ள தேசிய சுகாதார சபை 2006 ஆண்டின் பின்னர் கூடியிருக்கவில்லை. சட்டத்தின் 9(1) மற்றும் 11(1) பிரிவுகளின் கீழ் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் வைத்தியசாலை சபைகள் (Hospital Board) மற்றும் வைத்தியசாலைக் குழுக்கள் (Hospital Committees) நியமனம் செய்யப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி, நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
அமைச்சினால் வைத்தியசாலைச் சபைகள் எந்த வைத்திசாலைகளிலும் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை எனவும், 37 வைத்தியசாலைகளுக்காக மாத்திரம் வைத்தியசாலைக் குழுக்கள் நியமிக்கப்ட்டிருந்தது. சட்டத்தின் பிரிவு 10(5) இன் படி வைத்தியசாலைக் குழுக் கூட்ட அறிக்கைகளின் பிரதிகள் மற்றும் சட்டத்தின் 14 பிரிவின் படி வருடாந்த அறிக்கை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், வைத்தியசாலைக் குழுக்கள் நியமனம் செய்யப்பட்டிருந்த 37 வைத்தியசாலைகளில் 08 வைத்தியசாலைகளில் மாத்திரம் குழுக்களின் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், எந்த வைத்தியசாலையினாலும் குழுக் கூட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ங) சுகாதார அமைச்சுக்கு சொந்தமான இலக்கம் PA – 6192 கொண்ட வாகனம் 2014 ஜனவரி 02 திகதி பொலன்னறுவை முதுன்கம பிரதேசத்தில் விபத்தொன்றுக்கு உள்ளாகியிருந்தது. விபத்து

நிதிப் பிரமாணம் 104(1) பிரகாரம் விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு விசாரணை ஆரம்பிக்கப்பட்டதா என தொடர்பான தகவல்கள் போக்குவரத்துப் பிரிவிடம்

நிதிப் பிரமாணங்கள் 102(இ), 104(1) பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், தேவையான சட்ட ஆலோசனைகள் வழங்கப்படாமை, கோப்பு காணாமல் போதல் மற்றும் வாகனத்தின் திருத்த வேலை

ஏற்பட்டு 10 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த பின்னர் 2024 ஜூலை 05 திகதி இந்த விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணைகாக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. விபத்து தொடர்பாக காப்புறுதி நட்டஈடு பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்த போதிலும், விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் வாகனத்தை ஓட்டிய சாரதி என காப்புறுதி விண்ணபப்பத்திரத்தில் காட்டப்பட்டிருந்த சாரதியினால் உண்மையாகவே விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் வாகனத்தை ஓட்டியிருக்கவில்லை என காப்புறுதிக் கம்பனியினால் மேறகொள்ளப்பட்ட விசாரணையின் போது உறுதிப்படுத்தப்பட்டமையால், காப்புறுதி உரிமை வழங்க முடியாது என சுகாதார செயலாளருக்கு 2014 மார்ச் 20 திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்குரிய அறிவுரைகள் பிரதான சட்ட உத்தியோகத்தரின் வேண்டியிருந்த போதிலும், அறிவுரை கிடைக்கப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமையில் இந்த விபத்து ஏற்பட்டு 11 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், 2024 திசெம்பர் அளவிலும், இந்த வாகனத்தின் திருத்த வேலை மேற்கொள்ளாமல் முல்லேரியா கராஜில் நிறுத்தப்பட்டிருந்தது. விபத்து ஏற்பட்டு இரண்டு வருடங்களின் பின்னர் 2016 மார்ச் 28 திகதி சட்டமா அதிபரின் அறிவுரை பெற்றுக்கொள்வதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 2018 செப்தம்பர் 07 திகதி நிறுவனம் இரண்டும் அரச நிறுவனங்களாக காணப்படுவதனால் 2018 மே 22 திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் தீரமான இலக்கம் காணப்படவில்லை எனவும், தற்போது குழுவொன்று நியமனம் செய்யப்பட்ட நி.பி. 104(1) விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும், 2014 ஆண்டின் போது மேற்குறிப்பிட்ட இலக்கத்தையுடைய வாகனம் விபத்துக்குள்ளாதல் தொடர்பான தகவல்கள் அறிவிக்கப்படவில்லை எனவும், பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விசாரணை) இன் இலக்கம் CF/DPM/பொது/2019 மற்றும் 2024 பெப்ரவரி 13 திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததெனவும், கணக்காய்வு அவதானிப்புக்களின் படி விசாரணையொன்று மேற்கொள்வதற்காக சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அவசர சுற்றிவலைப்பு) இற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது எனவும், வாகனத்தை திருத்த வேலை மேற்கொள்ளல் தொடர்பாக தேவையான அறிவுரைகள் சட்டப் பிரிவிலிருந்து கிடைக்கப்படாமையால் திருத்த வேலைகள் மேற்கொள்ள முடியாமல் இருந்ததெனவும், இந்த வாகனத்திற்கு விபத்துக்குரிய நட்டத்தை அறவீடு செய்வதற்காக கலந்துரையாடல் ஒன்று நடாத்துவதற்கு தீர்மானம் ஒன்று எடுக்கக்கூடிய உத்தியோகத்தர் ஒருவரை குறிப்பிட்டு அனுப்புமாறு இலக்கம் LO/13/2014 மற்றும் 2021 ஏப்ரல் 09 திகதிய கடிதத்தின் மூலம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டதெனவும், அந்த கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக போக்குவரத்து பிரிவினை அறிவுறுத்தியிருக்கவில்லை.

மேற்கொள்ளாமை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபரினால் வழங்கப்பட்ட அறிவுரையின் படி செயற்பட வேண்டும்.

75(i)(c) படி செயற்படுமாறு சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் வரை சட்டமா அதிபரினால் வழங்கப்பட்டிருந்த அறிவுரையின் படியும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அப்போதைய விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பதவியணியினருக்கு இணைக்கப்பட்டிருந்த இந்த வாகனத்தின் கோப்பினை அமைச்சர் அலுவலகத்திற்கு எடுத்து வரப்பட்டு அதனை காணாமல் ஆக்கியிருந்தது. இந்த கோப்பு காணாமல் போதல் தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொண்டிருக்கவில்லை. பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் 2020 நவம்பர் 18 திகதியும், பிரதான சட்ட உத்தியோகத்தரிடம் அரச நிதி செலவிடப்பட்டு இந்த வாகனத்தை திருத்த வேலை மேற்கொள்வதற்குரிய இயலுமையை வினவியிருந்த போதிலும், அதற்கு பதில் கிடைத்திருக்கவில்லை.

(ச) சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 414 வாகனங்களுக்குரிய 473 கோப்புக்கள் 2022 ஆண்டின் போது அப்புறப்படுத்தப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) 2019 ஏப்ரல் 22 திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்டிருந்த சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் வாகன முகாமைத்துவம் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை மூலம் அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களின் முகாமைத்துவம் தொடர்பாக வாகனங்களின் திருத்தங்கள் தொடர்பான கோப்புக்களை பரிசோதனை செய்வதனூடாக அப்போது வாகனம் காணப்பட்ட பிரிவு தொடர்பான தகவல் ஒன்று கண்டறியக் கூடிய இயலுமை ஒன்று காணப்படக் கூடும் என அவதானிக்கப்பட்ட போதிலும், வாகனம் அப்புறப்படுத்தப்பட்டதா அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டதா என தகவல்கள் கண்டறிய முடியாதிருந்தது என. விஷேட கணக்காய்வு அறிக்கையின் மூலம் காணாமல் போன அல்லது தகவல்கள் காணப்படாத வாகனங்கள் என இனங்காணப்பட்ட வாகனங்கள் தொடர்பான கோப்புக்களை அப்புறப்படுத்தல் தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ள வேண்டும்.

	காணப்படுகின்ற உள்ளகக் கட்டுபாட்டுப் பலவீனங்கள் அனேகமானவை சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இந்த விஷேட கணக்காய்வு அறிக்கையின் மூலம் அமைச்சுக்கு சொந்தமான பாரிய எண்ணிக்கையான வாகனங்கள் காணாமல் போதல் அல்லது தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை சுட்டிக்காட்டப்பட்டது. 2022 ஆண்டின் போது வாகனக் கோப்புக்கள் அப்புறப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அந்த விஷேட கணக்காய்வு அறிக்கையின் மூலம் தகவல்கள் கண்டறிய முடியாத அல்லது காணாமல் போயிருந்ததென இனங்காணப்பட்ட வாகனங்கள் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அந்த வாகனங்கள் தொடர்பாக போதியளவு தகவல்கள் கண்டறிந்திருக்கவில்லை. இந்த அப்புறப்படுத்தப்பட்ட வாகனக் கோப்புக்களில் 17 வாகனங்கள் மேற்கூறிய விஷேட கணக்காய்வு அறிக்கை மூலம் காணாமல் போதல் அல்லது தகவல்கள் காணப்படாத வாகனங்கள் என காட்டப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனங்களுக்குரிய கோப்புக்களும் அப்புறப்படுத்தப்பட்டிருந்தது.		
(ii)	விஷேட கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த அவதானிப்புக்கள் தொடர்பாக அமைச்சினால் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள் மற்றும் வழங்கியருந்த பரிந்துரைகளை செயற்படுத்திய முன்னேற்றத்தை பரிசோதனை செய்து வெளியிடப்பட்டிருந்த	பல வருட காலம் செயற்படாமல் துருப்பிடித்த நிலையில் காணப்பட்ட வாகனங்களின் திருத்த வேலை கோப்புக்கள் அப்புறப்படுத்தியிருந்ததுடன், அந்தக் கோப்புக்களை பரிசோதனை செய்வதன் மூலம் வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டதா அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டதா என்ற தகவல்கள் கண்டறிய முடியாதிருந்தது என்.	- மேற்படி -

கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் காணாமல் போதல் அல்லது தகவல்கள் காணப்படாத வாகனங்கள் என இனங்காணப்பட்டிருந்த 196 வாகனங்கள் தொடர்பாக கோப்புக்களும் 2022 ஆண்டின் போது அப்புறப்படுத்தப்பட்டிருந்தது.

(ஞ)	சுகாதார அமைச்சுச் செயலாளரின் 2001 மே 03 திகதிய எம்எச்/எப்எஸ்/28/2001 இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் உடனடியாக செயற்படுமாறு வேலை இடைநிறுத்தப்பட்ட கழுத்துறை பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய சட்ட வைத்திய அதிகாரியின் வேலை இடைநிறுத்தப்பட்ட காலத்திற்காக அரைச் சம்பளம் செலுத்தும் படி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் 2001 ஜூலை 03 திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. வேலை இடைநிறுத்தப்பட்டு 2002 மார்ச் 09 திகதி குற்றப்பத்திரம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வைத்தியர் முறையான அங்கீகாரம் இன்றி வெளிநாடு சென்றிருந்தார். இதன்படி, சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் 2003 மார்ச் 10 திகதிய கடிதத்தின் படி அவர் 2002 ஜூன் 01 திகதி முதல் பதவியை வரிதாக்கியதாக கணித்து செயற்படுமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நிருவாகம் (வைத்திய சேவை II) பிரிவில் நடாத்தப்பட்டு வரும் அவரின் தனிப்பட்ட கோப்பினை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கழுத்துறை போதனா வைத்தியசாலையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மேற்கூறிய வைத்திய உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோப்பை பரிசோதனை செய்த போது தாபனக் கோவையின் அத்தியாயம் II பிரிவு 8.1 இன் பிரகாரம் நியமனக் கடிதம் ஒன்று	ஒரு வருட உள்ளகப் பயிற்சி நியமனத்தின் பின்னர் குறிப்பிட்ட வைத்திய உத்தியோகத்தர் ஆரம்ப தரத்தில் வைத்தியர் உத்தியோகத்தர் என நியமனம் செய்யப்படுவதுடன், ஆரம்ப தரத்தின் நியமனத்தின் பின்னர் இரண்டு வருட கால சேவையின் பின்னர் வைத்திய உத்தியோகத்தர் II தரத்திற்கு பதவி உயர்த்தப்படும் எனவும், ஆரம்ப தர நியமனம் மூன்று வருட கால சேவையின் பின்னர் குறிப்பிட்ட வைத்திய உத்தியோகத்தரின் நியமனம் நிரந்தரப்படுத்தப்படுகின்றதெனவும், வாகனக் கடன் பெற்றுக்கொள்ளல் மற்றும் அறவீடு செய்தல் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், ஆரம்ப விசாரணை அறிக்கையின் மூலம் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகளை செயற்படுத்தல் தொடர்பான முன்னேற்றம் மற்றும் வேண்டப்பட்டுள்ள தனிப்பட்ட 38 கோப்புக்கள் தொடர்பாக தகவல்கள் வழங்குமாறு குறிப்பிட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டதுடன், உரிய தகவல்கள் பின்னர் சமர்ப்பிக்கப்படும் என.	தனிப்பட்ட கோப்புக்கள் காணாமல் போதல் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை விரைவாக இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், தாபனக் கோவையின் உரிய பிரிவுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். வழங்கப்பட்டுள்ள கடன் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், கணக்காய்வினால் வேண்டப்பட்டுள்ள தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், இந்த வைத்தியருக்கு முறையான நியமனக் கடிதமொன்று வழங்கப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2000 நவம்பர் 27 திகதி வாகனக் கடன் என ரூபா 415,100 தொகை மேற்கூறிய வைத்தியருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த கடன் தொகையை அறவீடு செய்ததற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய வைத்திய உத்தியோகத்தர் வேலை இடைநிறுத்தப்பட்டு 20 வருடங்களும் 07 மாதங்களுக்கு மிகையான காலமொன்று கடந்திருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 337,000 தொகைக்கான இடர் கடன் மீதியொன்று காணப்பட்டது. அதேபோல், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கோப்பில் நியமனம் நிரந்தரப்படுத்துவதற்கான கடிதங்கள் அடங்கியிருக்கவில்லை. வைத்தியர் தொடர்பாக நடாத்தப்பட்ட ஆரம்ப விசாரணை மூலம் வழங்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்துவது தொடர்பாக முன்னேற்றம் மற்றும் 38 வைத்திய உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோப்புக்கள் காணாமல் போதல் தொடர்பாக இலங்கை பொலிஸ் இற்கு முறைப்பாடொன்ற சமர்ப்பிக்கப்படும் என அறிவித்திருந்த போதிலும், அதன் முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ட) அமைச்சுக்கு சொந்தமான NB – 2699 இலக்கம் கொண்ட வாகனத்தின் திருத்த வேலைகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i)	இந்த வாகனத்தின் கியர் போடுவதற்கு முடியாது என சாரதியினால் திகதி குறிப்பிடப்படாத கடிதம் ஒன்றின் மூலம் அறிவித்திருந்ததுடன், 2024 மார்ச் 19 திகதி போக்குவரத்து உத்தியோகத்தரினால் வழங்கியிருந்த பரிந்துரையின் படி 2024 ஏப்ரல் 05 திகதி முகவர் நிலையத்தில் இருந்து மதிப்பீடு அழைக்கப்பட்டிருந்தது. முகவர் நிலையத்தினால் 2024 ஏப்ரல் 29 திகதி ரூபா 204,895 இற்கான மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்தத் தொகைக்குரிய திருத்த வேலையை நிறைவேற்றுவதற்காக 2024 ஜூன் 05 திகதி முகவர் நிலையத்திற்கு வாகனம் அனுப்பப்பட்டிருந்தது. முகவர் நிலையத்தினால் 2024 ஜூன் 11 திகதி ரூபா 198,523 இற்கான பில்பத்திரம் ஒன்று இந்த திருத்த வேலைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2024 ஆகஸ்ட் 29 திகதி இந்த வாகனம் கடுகதிப் பாதையில் செல்லும் போது கியர் இறுகியிருந்ததால் வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது.	வாகனத்தின் கியர் போடுவதற்கு முடியாமையினை பரிசோதனை மேற்கொள்ளும் படி சாரதியினால் வேண்டப்பட்டவாறு முகவர் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும், வாகனத்தின் கிளச் முறைமையில் வழுவொன்று தொடர்பாக ரூபா 204,895.20 இற்கான மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டு முகவர் நிலையத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 198,523.20 இற்கான பில்பத்திரத்திற்கு 2024 ஜூலை 03 திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	முழுமையான விசாரணையொன்று மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
(ii)	பின்னர் வாகனத்தை முகவர் நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், முகவர் நிலையத்தினால் ரூபா 985,789 இற்கான மதிப்பீடொன்று 2024 ஆகஸ்ட் 29 திகதி வழங்கப்பட்டிருந்தது. தேவையான உதிரிப் பாகங்கள் முகவர் நிலையத்தில் காணப்படவில்லை என கூறப்பட்டது என அறிவித்து	இது தொடர்பாக தொடர்ச்சியாக அவர்களிடம் வினவிய போதிலும், அந்த நிறுவனத்தின் கடமையாற்றும் நபர்களிடமிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தமையால் விரைவாக இந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.	ஒரே கோளறுக்காக இரண்டு சந்தர்ப்பங்களில் ஒன்றிற்கு ஒன்று முரணான திருத்த வேலைகள் மேற்கொள்ளல் தொடர்பாக முகவர் நிலையத்தினால் பெற்றுக்கொள்ள உத்தேசித்துள்ள அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

	2024 செப்தம்பர் 13 திகதி வேறு நிறுவனம் ஒன்றிலிருந்து கூறுவிலைகள் கோறப்பட்டிருந்தது. இதன்படி, ரூபா 488,100 இற்கான மதிப்பீடொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தத் தொகைக்கு வாகனத்தின் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்படி, ஒரே கோளாறுக்காக இரண்டு சந்தர்ப்பங்களில் ஒன்றிற்கு ஒன்று வித்தியாசமான திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இந்த வாகனத்தின் முகவர் நிலையத்தினால் பெற்றுக்கொள்வதற்கு உத்தேசித்திருந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல், இந்த அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு அனுப்பப்பட்டிருந்த கடிதத்துடன், இந்த வாகனத்தின் திருத்த வேலை பின்னர் மீண்டும் ஒப்படைக்கப்பட்டு கியர் முறைமையிலிருந்த அகற்றப்பட்டிருந்த பழைய உதிரிப் பாதங்கள் பரிசோதனைக்காக முகவர் நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டதென உறுதிப்படுத்தப்படவில்லை.		
(iii)	வாகனத்தின் ரேடியேட்டரை மீண்டும் பொறுத்துவதற்காக முகவர் நிலையத்தினால 2024 ஜுன் 14 திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 359,765 இற்கான மதிப்பீடு தொடர்பாக குறிப்பிட்ட திருத்த வேலைகள் டொயோடா அசல் உதிரிப் பாகங்கள் பொறுத்தப்பட்டு மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள போதிலும், டொயோடா அசல் உதிரிப் பாகங்களுக்கு பதிலாக உள்நாட்டு உதிரிப் பாகங்கள் பொறுத்தப்பட்டு	அசல் உதிரிப் பாகங்களின் விலையை விட உள்நாட்டு உதிரிப் பாகங்களின் விலை அதிகரித்தல் தொடர்பாக தெளிவொன்று முகவர் நிலையத்தினால் எழுத்துமூலம் வினவப்பட்டிருந்தது என.	திருத்த வேலைக்குரிய முறையான அங்கீகாரம் மற்றும் டொயோடா அசல் உதிரிப் பாகங்களின் விலையை விட உள்நாட்டு உதிரிப் பாகங்களின் விலை அதிகரித்த காரணங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

	திருத்த வேலை மேற்கொள்வதற்கு கிடைக்கப்பட்ட முறையான அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல், இங்கு காட்டப்பட்டுள்ள சில டோயோடா அசல் உதிரிப் பாகங்கள் விலையை விட உள்நாட்டு உதிரிப்பாகங்களின் விலை அதிகரித்த காரணத்தினை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.		
(ண)	பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலை 2022 ஆண்டின் போது போதனா வைத்தியசாலை என மாற்றுவதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், 2024 திசெம்பர் 31 திகதிய சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுச் செயலாளரின் HM/CF01/FR135/2025 இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் போதனா வைத்தியசாலை ஒன்றிற்குரிய நிதி அதிகாரங்கள் சாட்டப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2025 பெப்ரவரி 19 திகதி அளவிலும், போதனா வைத்தியசாலையாக மாற்றுவதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், போதனா வைத்தியசாலை ஒன்றிற்குரிய பதவியணி திருத்தங்களும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாக மாற்றுவதற்குரிய வர்த்தமானி இதுவரை வெளியிடப்படவில்லை எனவும், பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாக மாற்றுவதற்கு தேவையான சிகிச்சை சேவைகளின் அபிவிருத்திகள் அனேகமாக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது என.	போதனா வைத்தியசாலை ஒன்றாக மாற்றுவதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(த)	பொலன்னறுவை போதனை வைத்தியசாலையின் இருதய வடிகுழாய் சிகிச்சை சேவை 24 மணித்தியாளங்களும் செயற்படுத்திய போதிலும், முக்கியத்துவ பதிவேட்டில் மற்றும் Routine களில் 2025 பெப்ரவரி 10 திகதி அளவில் முறையே 192 நோயாளர்கள் 2025 ஜூன் மாதம் வரையும், 1517 நோயாளர்கள் 2026 ஆண்டு இறுதி வரையும் காத்திருக்கும் பதிவேட்டில்	நிதி வசதிகள் பெற்றுக்கொள்வதற்கு முடியாமையினால் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும், 2025 – 2026 ஆண்டின் புதிய அபிவிருத்தி செயற்த்திட்டத்தின் கீழ் வைத்தியசாலையின் இருதய நோய் பிரிவின் கொள்திறனை அதிகரிப்பதற்காக வைத்தியசாலை நிருவாகம் கவனம் செலுத்தியுள்ளது என.	இருதய நோய் சிகிச்சைப் பிரிவின் கொள்திறனை அதிகரித்துக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இருக்கின்றமையால் இந்தப் பிரிவின் கொள்திறனை அதிகரித்து காத்திருக்கும் பதிவேட்டில் தங்கியிருக்கும் காலத்தை குறைப்பதற்காக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ந) நாளாந்தம் சிகிச்சை கழிவுப் பொருட்கள் சுமார் 200Kg சேகரமாகிய போதிலும் அவற்றை முறைப் பிரகாரம் அப்புறப்படுத்துவதற்கான செய்முறையொன்று குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலையில் நிறுவப்பட்டிருக்காமையால் வைத்தியசாலை வளாகத்தில் குவிக்கப்பட்டிருந்தது. அதேபோல், 2024 ஏப்ரல் 25 திகதி முதல் மெடாமைஸர் இயந்திரத்தின் அலுவல்களும் நிறுத்தப்பட்டிருந்த காரணத்தினால் சேகரமாகியிருந்த மிகவும் பாரிய அப்புறப்படுத்தப்பட்ட சிகிச்சை பொருட்கள் காரணத்தினால் வைததியசாலை வளாகத்திற்கு கடுமையான சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார அச்சுறுத்தல்கள் ஏற்படும் காரணத்தினால் 2024 திசெம்பர் மாதத்தில் ரூபா 9,203,950 தொகை செலுத்தி தனியார் கம்பனியொன்றின் மூலம் கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டிருந்தது. தனியார் பிரிவினால் பாரத்திற்கு ஏற்ப விலை தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், மழையுடனான காலநிலை நிலைமையில் நீர் தேங்குவதனால அதன் பாரம் கூடியதனால் கூடிய செலவொன்று மேற்கொள்ள நேரிட்டிருந்தது. மேலும், சிகிச்சை கழிவுப் பொருள் தவிர பாவனையில் இருந்து அகற்றப்பட்டிருந்த கண்ணாடிகள், இலத்திரனியல் கழிவுப் பொருட்கள் ஆகியவற்றின் பாரிய எண்ணிக்கையொன்றும் வைத்தியசாலை வளாகத்தில் குவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கான முறையான செய்முறையொன்று

தற்போது இந்த வைத்தியசாலையின் தொற்று குப்பைகள் ஏற்றுக்கொள்வது சிலாபம் பொது வைத்தியசாலையினால் மாத்திரம் ஆக காணப்படுவதுடன், அந்த எண்ணிக்கை ஒரு மாதத்திற்கு 4000Kg என வரையறுக்கப்பட்டுள்ளது எனவும், அந்த இயந்திரம் அடிக்கடி செயற்படாமையால் சில நேரங்களில் ஐந்து மாதமளவில் குப்பைகளை ஏற்றுக்கொள்ளாத நிலைமை ஏற்படுகின்றது எனவும், வைத்தியசாலையில் சேகரமாகும் சிகிச்சை கழிவுப் பொருட்கள் மற்றும் புதிதாக சேகரமாகும் சிகிச்சை கழிவுப் பொருட்கள் மழையில் நனைவதனால் ஏற்படுகின்ற சுகாதார அச்சுறுத்தலிருந்து தவிர்ந்துகொள்வதற்காக மறைக்கப்பட்ட களஞ்சியமொன்று நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும். சிகிச்சை கழிவுப்பொருள் கூடிய விரைவில் அகற்றப்பட வேண்டியமையால் பெற்றுக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களை பயன்படுத்தி சிகிச்சை கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், இதற்கு மேலதிகமாக புற்றுநோயக் காரணியான சயனைட்டு மற்றும் போமலின் அடங்கியுள்ள போத்தல் உட்பட டென்டர் செய்முறை ஒன்றின் மூலம் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டது என.

கழிவுப் பொருட்கள் அகற்றுதல் முறைப் பிரகாரம் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும்.

	வைத்தியசாலையில் நிறுவப்பட்டிருக்காமையால் மிகவும் கூடிய கிரயமொன்று மேற்கொள்வதற்கு போலவே சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார சேத சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டிருந்தது.		
(ப)	ஜேர்மனி இலங்கை நட்புறவு மகளிர் வைத்தியசாலை மற்றும் வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் அலுவலகத்தினால் பேணப்பட்டு வருகின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் இரவு உள்வரவு பதிவேட்டில் காணப்பட்ட தகவல்கள் ஒன்றிற்கு ஒன்று முரணானதாக இருந்தென அவதானிக்கப்பட்டதுடன், இரவுச் சேவை முறைகளில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் உள்வரவினை சரியான தன்மையினை உறுதிப்படுத்தல் மற்றும் முறையான மேற்பார்வையொன்றின்றி கொடுப்பனவு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. அதன்படி, 2024 ஜூலை 01 திகதி முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரையான கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைக் காலத்தினுள் முறைசாரா உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் தகவல்களின் படி கூட்டுத்தொகை ரூபா 2.859 மில்லியன் தொகை முறைசாராமல் செலுத்தப்பட்டிருந்தது.	கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த இந்த சிக்கலை தீர்த்துக்கொள்வதற்கான உள்ளக செய்முறை ஒன்றென வைத்தியசாலை ஓவசியரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற இரவு சேவை முறை அறிக்கையின் ஒரு பகுதியாக இரவு சேவை முறைக்காக பாதுகாப்பு உத்தியோகத்தர் ஈடுபடுத்தல் தொடர்பாகவும், உறுதிப்பாடொன்று பெற்றுக்கொண்டு எதிர் காலத்தில் பில்பத்திரம் கொடுப்பனவின் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளும் படி அறிவுரை வழங்கப்பட்டதெனவும், கணக்காய்வு ஐயவினாவின் படி அறவீடு செய்யப்பட வேண்டிய எவையும் காணப்படின் அந்தத் தொகையினை அடுத்த பில்பத்திரங்கள் மூலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தின வரவுகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்தி முறையான மேற்பார்வையொன்றுடன் கொடுப்பனவு அலுவல்கள் மேற்கொள்ள வேண்டியதுடன், மிகையாக செலுத்தியிருந்த தொகையை மீண்டும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ம)	ஜேர்மனி இலங்கை நட்புறவு மகளிர் வைத்தியசாலையில் 2024 ஜனவரி 01 திகதி முதல் ஒப்பந்தக்காரரினால் செலுத்தப்படாத ரூபா 2.94 மில்லியனிற்கான நிலுவை பில்பத்திரத்தை அறவீடு செய்வதற்கு அல்லது ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவில் கழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், அந்தந்த மாதங்களில் மின்சாரக் கட்டணம் மாத்திரம் செலுத்தப்படுவதனால் 2025 ஜனவரி 31 திகதியில்	2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மின்சாரக் கணக்கில் மீதியொன்று காணப்பட்டமையால், மின்சார பில்பத்திரங்கள் செலுத்தும் போது மிகை விதிப்புத் தொகை செலுத்துவது தொடர்பாக சிக்கல் நிலைமையொன்று காணப்பட்டதுடன், மேலும், மாதாந்த மின்சாரக் கட்டணத்தில் இந்த மிகை விதிப்புத் தொகை உட்படுத்தல் தொடர்பாக சரியான உறுதிப்படுத்தலொன்று இலங்கை மின்சார சபையிலிருந்து பெற்றுக்கொள்ளும் வரை மாதாந்த மின்சார பில்பத்திரம்	நிலுவை மற்றும் மிகை விதிப்புக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யும் போது கழித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மிகை விதிப்புக்கள் ஏற்படாதவாறு குறிப்பிட்ட காலத்தில் பில்பத்திரங்களை செலுத்துவதற்கு வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

	உள்ளவாறு நிலுவை மற்றும் மிகை விதிப்புக் கட்டணத்தின் கூட்டுத்தொகை ரூபா 27.23 மில்லியன் தொகை மின்சாரசபைக்கு மேலும் செலுத்த வேண்டியிருந்தது.	மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதுடன், 2025 ஏப்ரல் 22 திகதி நடைபெற்ற கணக்காய்வ ஐயவினா கலந்துரையாடலின் படி 2025 மார்ச் மாதம் முதல் மிகை விதிப்புத் தொகையுடன் பில்பத்திரங்களை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், மேலும், இது தொடர்பாக 2025 ஏப்ரல் 25 திகதி மீண்டும் இலங்கை மின்சாரசபையுடன் கலந்துரையாடுவதற்கு மற்றும் குறிப்பிட்ட கணக்கறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என.	
(ய)	2022 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை மஹமோதர போதனா வைத்தியசாலை தொடர்பாக வ/ப இலங்கை மின்சார (தனியார்) கம்பனியினால் வழங்கப்பட்டிருந்த மானி வாசிப்பின் போது ஏற்பட்டிருந்த தொழில்நுட்ப வழுவொன்று காரணமாக மானி வாசித்தல் பிழையாக பதியப்பட்டிருந்தது. அந்த வழுக்களை சரி செய்து புதிய பில்பத்திரம் ஒன்று தயாரிக்கப்பட்டு ரூபா 3.62 மில்லியனிற்கான நிலுவைத் தொகையொன்று அந்தக் கம்பனிக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரை அந்தக் கட்டணத்தை செலுத்தியிருக்கவில்லை. மேலும், மஹமோதர தாதிகள் பாடசாலைக்காக 2015 நவம்பர் முதல் 2021 ஒக்தோபர் வரையான காலப் பகுதி தொடர்பாக மின்சாரக் கட்டணம் கணித்தல் அரச மூலவளங்களின் கீழ் அதாவது, (தொகுதி GV) இற்கு இணங்க மேற்கொள்ளப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 2.96 மில்லியன் தொகை மிகையாக வ/ப இலங்கை மின்சார (தனியார்) கம்பனிக்கு செலுத்தியிருந்ததுடன், அந்த மிகையாக செலுத்தியிருந்த கட்டணத்தை அறவீடு செய்ய	கணக்காய்வு ஐயவினாவின் படி சரியான அறவீட்டு முறையின் கீழ் மின்சாரக் கட்டணம் கணிக்கப்படாமையின் காரணத்தினால் ரூபா 3,235,697 இற்கான தொகை மீண்டும் அறவீடு செய்து அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும் என இங்கு அறவிடப்பட வேண்டிய தொகை தொடர்பாக இலங்கை மின்சார தனியார் கம்பனிக்கு கடிதம் மூலம் மற்றும் வாய்மொழி மூலம பல தடவைகள் அறிவுறுத்திய போதிலும், இது தொடர்பாக பதிலொன்று கிடைத்திருக்கவில்லை எனவும், மிகைக் கொடுப்பனவொன்று ஏற்பட்டிருக்கவில்லை எனவும், இதற்கு முன்னர் இது தொடர்பாக விண்ணப்பமொன்று சமர்ப்பித்திருந்தால் குறிப்பிட்ட தகவல்களை சமர்ப்பிக்கும் படி LECO நிறுவனம் அறிவித்திருந்தது எனவும், எனினும், அதற்குரிய அறுதியான தகவல்களை கண்டறிவதற்கு முடியாமல் போனது எனவும், அதன் காரணமாக புதிய விண்ணப்பம் ஒன்று அனுப்புவதன் மூலம் இந்த சிக்கல் முறையாக தீர்த்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என. மேற்கூறிய விடயங்களின் படி செலுத்த வேண்டிய ரூபா	மிகையாக செலுத்திய கட்டணத்தை அறவீடு செய்வதற்கும் நிலுவைத் தொகையை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	3,624,263 இற்கான தொகையொன்று செலுத்தியிருக்கவில்லை எனவும், வைத்தியசாலையின் 02 மின்சார வழங்கல் தொடர்பாக உரிய பெறுமதியை பதிலீடு செய்து மீதித் தொகையை செலுத்துவதற்கு LECO நிறுவனத்திற்கு கோறிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டது.	
(ர)	மாதிரிக் கொடுப்பனவு செலுத்தும் போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு கணிக்க வேண்டியிருந்த போதிலும், அதற்கு பதிலாக ஆய்வுகளின் உள்ளடக்க சேர்க்கைகளுக்காக வெவ்வேறாக கொடுப்பனவு கணிக்கப்பட்டு மருத்துவ ஆராய்ச்சி தொழில்நுட்ப வல்லுனர்களுக்காக ரூபா 258,502 தொகை மற்றும் ஆய்வுகூட ஆய்வு உதவியாளர்களுக்காக ரூபா 57,500 தொகை கண்டி தேசிய வைத்திசாலையினால் 2023 ஆகஸ்ட் மாதத்தில் மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.	சுகாதார அமைச்சினால் 2001 ஒக்தோபர் 30 திகதி வெளியிட்டிருந்த 02-117-2001 இலக்கம் கொண்ட பொதுச் சுற்றறிக்கையின் மூலம் விதிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் படி மாதிரிக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தமையால் ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மிகைக் கொடுப்பனவொன்று அவதானிக்கப்படவில்லை என.	இதற்கு முன்னர் அரச கணக்குகள் குழு மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகளின் படி உரிய சுற்றறிக்கையின் அறிவுரைகள் வெளியிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ல)	பேராதனை போதனா வைத்தியசாலை வளாகத்தில் காணப்படுகின்ற 03 மாடிகளைக் கொண்ட மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப வல்லுனர் பயிற்சிக் கல்லூரி, பேராதனை வைத்தியசாலையில் சேவைகளை விரிவாக்குவதற்காக 2024 மார்ச் 11 திகதிய சுகாதார அமைச்சுச் செயலாளரின் ETR/D/MLT/09/2023 இலக்கம் கொண்ட கடிதத்தின் படி வைத்தியசாலைக்கு உரித்தாக்கியிருந்தது. எனினும், அந்த நிறுவனத்தை உரித்தாக்கிய சந்தர்ப்பத்தில் அந்த நிறுவனத்தில் கடமையாற்றிய 05 பேரைக் கொண்டு பதவியணியினர் மற்றும் பொருட் பதிவேட்டுப் பண்டங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் நூலகப் புத்தகங்கள் போன்ற	ஆய்வுகூட தொழில்நுட்ப வல்லுனர்கள் பேராதனை போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்திற்கு இணைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதெனவும், நூலகப் புத்தகங்கள் பல்கலைக்கழத்திற்கு அல்லது அரசாங்க பாடசாலைக்கு வழங்குவதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக சுகாதார அமைச்சுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், சுகாதார அமைச்சின் சொத்துக்களின் முகாமைத்துவம் மற்றும் பண்டக் கணிப்பீடு பிரதான கணக்காளரினால் நிறுவனத்தின் பண்டங்கள், உபகரணங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் முறைப் பிரகாரம் உரிய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.	பயிற்சிப் பாடசாலையில் மனித மற்றும் பௌதீக வளங்கள் உச்ச மட்ட அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	மனித மற்றும் பௌதீக வளங்களின் பயன்பாடு தொடர்பாக திட்டமிடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்காமையால் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த வளங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.		
(வ)	நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் 65 திருமணமானவர்களுக்கான அரசாங்க வீடுகள் காணப்பட்டதுடன், அவை பட்டியலிடப்பட்ட அல்லது பட்டியலிடப்படாதவை என வகைப்படுத்தியிருக்காததுடன், வாடகை அறவீடு செய்தல் தொடர்பாக தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல், வசதிகள் வழங்குவதற்காக ரூபா 990,000 இற்கான வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த வீடொன்றுக்காக வாடகை குறிப்பிட்டுள்ளவாறு அறவிடப்படாமையால் அரசிற்கு ரூபா 679,968 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.	பட்டியலிடப்பட்ட வீடுகள் தொடர்பாக தகவல்கள் மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் வினவிய போதிலும், தகவல்கள் காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதன்படி, மீண்டும் பட்டியலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும், வாடகை அடிப்படையில் பெற்றிருந்த வீடு பெற்றுக்கொள்வதற்கு முன்னர் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (வழங்கல்) இடம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும்.	தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், நிலுவை வாடகைத் தொகையை அறவீடு செய்து கணக்காய்விற்கு அது தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டும்.
(ழ)	அவுஸ்திரேலிய கடன் உதவித் திட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் 701,335.83 அமெரிக்க டொலர்கள் கிரயத்தையுடைய **Metamizer** இயந்திரமொன்று 2017 ஜுன் 16 திகதி சிலாபம் பொது வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், வைத்தியசாலையின் சிகிச்சை கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தல் 2021 ஆண்டில் வழங்கியிருந்த **incinerator** இயந்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றமையால் இந்த இயந்திரத்தின் தேவைப்பாடு காணப்படவில்லை	சுகாதார அமைச்சு அல்லது பயோமெடி இன்டநெஷனல் தனியார் கம்பனி இதற்காக எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்காததுடன், 2023 - 2024 ஆண்டுகளின் போது தொடர்ச்சியாக இந்த வைத்தியசாலைக்கு மெடமைசர் இயந்திரத்தின் தேவைப்பாடு காணப்படவில்லை எனவும், நோயாளர்களுக்கு தங்குமிட வசதிகளுக்காக இடமளிப்பதற்காக இந்த இயந்திரத்தை வைத்தியசாலை வளாகத்திலிருந்து அகற்றித் தருமாறு வேண்டப்பட்டது.	சொத்துக்களை உரிய முறையில் முகாமைத்துவப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திருக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

	எனவும், நோயாளர்களுக்கு தங்குமிட வசதிகளுக்காக இடம் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக வைத்தியசாலை வளாத்திலிருந்து அகற்றித் தருமாறு வைத்தியசாலையினால் அமைச்சுச் செயலாளருக்கு தொடர்ச்சியாக வேண்டப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2025 மார்ச் 12 திகதி அளவிலும், இயந்திரம் விளைவற்று வைத்தியசாலை வளாகத்தில் காணப்பட்டது.		
(ள)	அனுராதபுர வைத்தியசாலையில் நிறுவப்பட்டிருந்த வடிகால் அமைப்பு முறைமை 03 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் செயற்படாது காணப்படுவதுடன், வைத்தியசாலையினால் வெளியேற்றப்படும் மலக் கழிவு / கழிவு நீர் சுகாதார பாதுகாப்புச் செய்முறையொன்றுடன் சுற்றாடலுக்கு விடுவிக்காமல் அனுராதபுர நகரத்திற்கு குடிநீர் வழங்கும் மல்வத்து ஓயாவுடன் தொடர்புடைய குளங்கள் மற்றும் கால்வாய்களுக்கு விடுவிக்கப்படுவதுடன், மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பல சந்தர்ப்பங்களில் கண்டனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்ததெனவும், அது தொடர்பான தேவையான நடவடிக்கை இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த முறைமையின் கொள்திறன் தற்போது போதியளவாக காணப்படாததுடன், நவீன தொழில்நுட்பங்கள் உடனான புதிய முறைமையொன்று நிறுவும் வரை காணப்படும் முறைமைகளின் குறைபாடுகளை இனங்கண்டு அந்த குறைபாடுகளை விரைவாக உரிய நிலைமைக்கு ஆக்குவது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் அனுராதபுர மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை பல தடவைகள் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்ட போதிலும், தற்போது என்னால் இந்த முறைமையை திருத்த வேலை மேற்கொள்வதற்காக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனவும், அந்த அலுவல்கள் முடிவடைந்த பின்னர் அதன் முன்னேற்றம் எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் என.	கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தல் முறையாக முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.
(ற)	அவுஸ்திரேலிய கடன் உதவியின் கீழ் சுகாதார அமைச்சினால் செயற்படுத்தப்பட்டிருந்த அரச வைத்தியசாலைகளின் சிகிச்சை கழிவுப் பொருள் முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் கழிவுப் பொருட்களை துண்டுகளாக்குவதற்கு அனுராதபுர வைத்தியசாலை வளாகத்தில் நிறுவப்பட்டிருந்த metamaizer இயந்திரம் 2022 ஆண்டு முதல் செயற்படாமல் படிப்படியாக துருப்பித்துக் காணப்பட்டதுடன், இந்த	மேடாமைசர் இயந்திரத்தின் மூலம் துண்டுகளாக்கப்பட்ட குப்பைகளை அகற்றுவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடமொன்று காட்டப்பட்டிருக்காமையால் துண்டுகளாக்கப்பட்ட குப்பைகள் வைத்தியசாலையின் வடிகாலமைப்புக்கு அண்மித்து சேகரிக்கப்பட்டு காணப்பட்டதுடன், அந்த சிகிச்சை குப்பைகளை அகற்றுவதற்காக கூறுவிலைகள் அழைக்கப்பட நடவடிக்கை	- மேற்படி -

	இயந்திரத்தின் மூலம் முன்கூட்டியே துண்டுகளாக்கப்பட்ட கழிவுகள் வைத்தியசாலை வளவில், வைத்தியசாலை வளவு எல்லையில் காணப்படும் கால்வாயிற்கு அண்டி 02 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பாதுகாப்பற்ற முறையில் குவிக்கப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. அந்தக் கழிவுப் பொருட்கள் கால்வாய்களுடன் தொடர்புபடுவதை தவிர்ப்பதற்காக எதுவித நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை.	எடுக்கப்பட்டுள்ளது எனவும், தற்போது விலைகூறல் மதிப்பாய்வுக் குழுவில் காணப்படுகின்றதெனவும், அந்த அலுவல்கள் முடிவடைந்தவுடனே வடிகாலமைப்பு முறைமையை அண்டி குவிக்கப்பட்டுள்ள துண்டுகளாக்கப்பட்ட குப்பைகளை முறைப் பிரகாரம் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	
(ன)	1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் பிரிவு 23(அ) இற்குரிய விதிமுறைகள் ஆக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள 2022 ஜனவரி 27 திகதிய 2264/18 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் இருந்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக கவனம் செலுத்தப்பட வேண்டிய விதிமுறைகள் வைத்தியசாலையினால் செயற்படுத்தியிருக்காமையால் 2017 ஆண்டு முதல் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.	கழிவு நீர் சுத்திகரிப்பு முறைமை சிகிச்சை கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தல் மற்றும் சிகிச்சை அல்லாத கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தல் ஆகிய பிரிவுகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக வைத்தியசாலைக்கு இதுவரை மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் இருந்து பெற்றக்கொள்ள வேண்டிய சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்ததுடன் தற்போது இந்த குறைபாடுகளை தவிர்த்துக்கொள்வதற்காக வைத்தியசாலையினால் பல பரிகாரங்கள் கடைபிடிக்கப்பட்டு காணப்படுவதுடன், அந்த அலுவல்கள் முடிவடைந்த பின்னர் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என.	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஃ)	இலக்கம் LW - 1558 கொண்ட நோயாளர் காவு வண்டி 2021 ஜூன் 22 திகதி விபத்துக்கு உள்ளாகி ரூபா 2,698,925 இற்கு அண்மித்த தொகைக்கான நட்டமொன்று ஏற்பட்டு திருத்த வேலை மேற்கொள்ளப்படாமல கேகாலை போதனா வைத்தியசாலையின் 3 ½ வருடங்களுக்கு மிகையான	தற்போது இது தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டு நட்டத்துக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை இனங்கண்டு அது தொடர்பான அறிக்கை அமைச்சுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் நட்டத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	காலம் முதல் விளைவற்று காணப்படுவதுடன், விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி முறையான விசாரணையொன்று மேற்கொள்ளாமை, திருத்த வேலை மேற்கொள்ளாமைக்கான காரணம் ஒன்றாக இருந்தது. நோயாளர் காவு வண்டி விபத்துக்கு உள்ளாகிய சந்தர்ப்பத்தில் எதுவித காப்புறுதி அணவலும் இன்றி ஓட்டி காரணத்தினால் நட்டத்தை ஈடு செய்வதற்காக முடியாமல் உள்ளதுடன், வேறு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர்களை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(அஅ)	தொற்று நோயியல் பிரிவிற்காக 2024 ஆண்டின் போது 10 குளிரூட்டப்பட்ட லொறி வண்டிகள் மற்றும் 21 கப் வண்டிகள் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.		
	(i) 2024 பெப்ரவரி 20 திகதி அந்த 10 லொறி வண்டிகளும் துறைமுகத்திற்கு எடுத்து வரப்பட்டிருந்த போதிலும், 03 மாதங்களுக்கு அண்மித்த காலம் தீர்வை அலுவல்களுக்காக நேரிட்டிருந்ததால் ரூபா 66.38 மில்லியன் தொகைக்கான சுங்க மற்றும் தீர்வைக் கட்டணம் செலுத்துவதற்கு மேலதிகமாக ரூபா 36.19 மில்லியனிற்கான பண்டகசாலைக் கட்டணமொன்று செலுத்த நேரிட்டிருந்ததுடன், விடுவித்த பின்னர் பதிவு செய்தல் வரை 2024 ஜூன் 28 திகதி முதல் 08 மாதங்களுக்கு அண்மித்த காலம் மருத்துவ வழங்கள் பிரிவின் களஞ்சிய	பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.	முறையான விசாரணை மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டிதுடன், இவ்வாறான நிலைமைகளை தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	வளாகத்தில் வாகன செயற்களத்தில் எதுவித பயன்பாட்டிற்கும் எடுக்காமல் நிறுத்தப்பட்டிருந்தது.		
(ii)	ரூபா 102.57 மில்லியன் செலவிடப்பட்டு விடுவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த பத்து குளிரூட்டிய லொறி வண்டிகளுக்கு பக்க மறைப்பு வேலி பொறுத்துவதற்காக மற்றும் வாகனத்தை பதிவு செய்தல் அலுவல்கள் விரைவாக மேற்கொள்வதற்கு அமைச்சின் அலுவலர்கள் செயற்படாமையும் ஒரு வருடத்திற்கு அண்மித்த காலம் துறைமுகத்தின் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவில் வாகன செயற்கலத்தில் இந்த லொறி வண்டிகளை நிறுத்தியிருந்தமையால் லொறி வண்டிகளின் இயந்திரக் கோளாறு ஏற்படும் ஆபத்து நிலைமையொன்று காணப்படக்கூடும் எனவும், இந்த லொறி வண்டிகளின் பட்டரி செயற்படாமல் விடுவதற்கான ஆபத்து நிலைமையொன்று காணப்படுவதுடன், அதன் மூலம் மேலதிக கிரயமொன்று மேற்கொள்வதற்கு நேரிடக்கூடும் எனவும், மருத்துவ வழங்கல் பிரிவில் இவ்வாறு லொறி வண்டிகளை நிறுத்தி வைப்பதனால் மருந்து எடுத்து வரும் கொள்கல வாகனங்கள் மற்றும் லொறி வண்டிகள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு உட்பிரவேசிக்க முடியாத நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.	- மேற்படி -	- மேற்படி -

(iii)	தடுப்பு மருந்து போக்குவரத்து செய்முறைக்கு வசதிகள் வழங்குவதற்கான வெளிக்களத்தில் தடுப்பு மருந்து சிகிச்சை நிலையங்களுக்கு தடுப்பூசிகள் ஆக்கபூர்வமாக எடுத்து செல்வதை வினைதிறனாக்குவதற்காக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் மூலம் 21 டபல் கப் வண்டிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், ரூபா 144.91 மில்லியன் தொகை சுங்கம் மற்றும் தீர்வைக் கட்டணம் என 51 நாட்கள் துறைமுகத்தில் தடுத்து வைத்திருந்தமையால் ரூபா 5.85 மில்லியன் தொகை பண்டகசாலைக் கட்டணம் எனவும், காப்புறுதக் கட்டணம் என ரூபா 1.03 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததெனவும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இந்த துறைமுக பண்டகசாலைக் கட்டணம் மற்றும் காப்புறுதிக் கட்டணம் மருத்துவ வழங்கல் பிரிவில் மருந்து வகைகள் கொள்வனவிற்கான செலவு விடயத்தின் கீழ் செலுத்தப்பட்டிருந்ததுடன், சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட ஏற்பாடுகள் முடிவடைந்திருந்ததால் ரூபா 7.52 மில்லியனிற்கான தீர்வைக் கட்டணம் மேலும் செலுத்த வேண்டியிருந்ததென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	- மேற்படி -	- மேற்படி -
(iv)	தீர்வை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட இந்த 21 டபல் கப் வண்டிகளில் 07 வண்டிகள் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தில் இருந்து விண்ணப்பித்த சந்தர்ப்பத்தில் முக்கியத்துவம் என	வரிசை அமைச்சின் கீழ் புதிய வைத்தியசாலைகளை சாட்டப்பட்ட காரணத்தினால் குறிப்பிட்ட வைத்தியசாலைகளின் போக்குவரத்து வசதிகளை முன்னேற்றுவதற்காக அமைச்சில் காணப்பட்ட வாகனங்களை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டதெனவும்,	- மேற்படி -

	இனங்கண்டிருந்த பிராந்தி சுகாதார பணிப்பாளர் அலுவலகம் மற்றும் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்கள் தவிர சுகாதார அமைச்சின் கீழ் செயற்படுகின்ற ஏனைய 07 பிரிவுகளுக்கு வழங்கப்பட்டு அடிப்படை குறிக்கோள்களுக்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	சேவையின் தேவைப்பாடுகள் மீது இந்த கப் வண்டிகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது என.	
(அஆ)	2024 ஆண்டின் போது மருத்துவ வழங்கல்கள் தரக் குறைவானவை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		-
	(i) அரசாங்க வைத்தியசாலைக்காக வழங்கப்பட்டிருந்த மருத்துவ வழங்கல்களில் ரூபா 4,213.35 மில்லியன் தொகை பெறுமதியான மருந்துகள், அறுவைச் சிகிச்சை மருந்துகள் மற்றும் ஆய்வுகூடப் பொருட்கள் 2024 ஆண்டின் போது தரக் குறைவாகக் காணப்பட்டதனால் பயன்படுத்தப்படாமல் அகற்றப்பட்டிருந்ததுடன், மேலும், ரூபா 1,367.94 மில்லியன் தொகை பெறுமதியான மருந்து வகைகள் தரக் குறைவானக் காணப்பட்டதால் தற்காலிக பயன்படுத்துவதை இடைநிறுப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. தரக் குறைவான மருந்து வகைகளிடையே அனேகமானவை ஒளியியல் துகள்கள் காணப்படல், பிரிட்டிஷ் பார்மகோபொயியா விவரக்குறிப்புக்களுக்கு இணங்கியிருக்காமை (does not confirm to BP specification), ஐக்கிய இராச்சிய பார்மகோபொயியா	பதிலளிக்கப்படவில்லை.	மருத்துவ வழங்கல்கள் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்திலேயே பரிசோதனை மேற்கொள்ளல், இடையிடையே தெரிவு எதிர்பாராத விதமான மாதிரி பரிசோதனை மேற்கொள்ளுவதற்குரிய செய்முறை ஒன்று தயாரிப்பட்டு செயற்படுத்த வேண்டியதுடன், பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு மருத்துவ வழங்கல்களுக்காக செலுத்தப்பட்டிருந்த முழுத்தொகையையும் அறவீடு செய்து கணக்காய்விற்கு அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

விவரக்குறிப்புக்களுக்கு இணங்கியிருக்காமை (doesn’t not confirm to USP specification), லேபள் பண்ணும் வழிகாட்டல்களுக்கு இணங்கியிருக்காமை, நிறங்கள் மாற்றமடைதல், வில்லைகள் உடைதல், கண்ணாடித் துகள்கள் காணப்படல், பிரதிகூலமான எதிர்த்தாக்கங்கள் ஏற்படல் ஆகிய விடயங்கள் இனங்கண்டிருந்ததுடன், அதன் காரணமாக பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு அல்லது பயன்பாட்டிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தது.		
(ii) அவ்வாறு தரக் குறைவானவைகள் என அகற்றப்பட்டிருந்த மருத்துவ வழங்கல்கள் இடையே பற்றீரியா தொற்றுக்கள், தோல் நோய், மனநோய், நீரிழிவு நோய், ஈரல் நோய்களுக்கு பயன்படுத்தப்படும் மருந்து வகைகள் மற்றும் நோயெதிர்பபு மருந்து பயன்படுத்தப்படும் மருந்துகள் காணப்பட்டன.	- மேற்படி -	- மேற்படி -
(iii) தரக் குறைவான மருந்துகள் வழங்குவதற்கான 2023 ஆண்டின் போது தரக் குறைவான சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட விடயங்களுக்காக 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை அரச மருந்துப் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 127.06 மில்லியன் தொகை 2025 மார்ச் 31 திகதி வரை அறவீடு செய்திருக்காததுடன், அரச மருந்துகக் கூட்டுத்தாபனம் உட்பட ஏனைய வெளித் தரப்பினரிடம் அறவிடப்பட வேண்டிய பெறுமதி	- மேற்படி -	அறவிடப்பட வேண்டிய அனைத்துத் தொகைகளும் அறவிடப்பட வேண்டியதுடன், ஏனைய வெளித்தரப்பினர்களிடம் அறவிட வேண்டிய பெறுமதி தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.		
(அஇ) கண் நோயாளர்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற கண்புரை அறுவை சிகிச்சையின் பின்னர் பயன்படுத்தப்படுகின்ற Prednisolone Acetate Eye Drop மருந்து மருத்துவ வழங்கல் பிரிவின் 2021/SPC/N/R/P/00043 இலக்கம் கொண்ட கட்டளையின் மூலம் கட்டளையிடப்பட்டிருந்ததுடன், 2023 ஆண்டின் போது ரூபா 3,631,093 தொகைக்கான 50,000 போத்தல் இருப்பொன்று கிடைத்து சுமார் 1½ மாதங்களின் பின்னர் மருந்துகள் தரக்குறைவானவை என கண்டறியப்பட்டிருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவினால் வைத்தியசாலைக்கு இந்த மருந்துகளை வழங்குவதற்கு முன்னர் மருந்துகளின் தரத்தினை பரிசோதனை செய்வதற்கு போதிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை எனவும், கொழும்பு தேசிய கண் வைத்தியசாலை மற்றும் நுவரெலிய மாவட்ட வைத்தியசாலைகளில் நோயாளர்களின் கண்கள் ஒவ்வாமை நிலைக்கு அளாகியிருந்தன எனவும், 2024 மே 10 திகதிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் SPR/2024/03 இலக்கம் கொண்ட விஷேட கணக்காய்வு அறிக்கையின் மூலமும் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.		
(i) நுவரெலிய மாவட்ட பொது வைத்தியசாலையில் மேற்கூறிய மருந்து பயன்படுத்தப்பட்டு பார்வையை இழந்த நோயாளர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த நட்டஈட்டுத் தொகையை தீர்மானிப்பதற்காக நியமனம்	பதிலளித்திருக்கவில்லை.	மருந்துகள் பயன்படுத்துவதன் மூலம் பங்கமிற்றிருந்த ஏனைய வைத்தியசாலைகளின் நோயாளரகள் தொடர்பாக விசாரணையொன்று மேற்கொண்டு அறிக்கையொன்று கணக்காய்விற்கு

	செய்யப்பட்டிருந்த குழுவின் தொழில்நுட்ப குழு அறிக்கையின் படி நுவரெலிய வைத்தியசாலையில் இந்த மருந்தின் காரணமாக ஆபத்து நிலையக்குள்ளாகிய 17 நோயாளர்களில் 12 நோயாளர்கள் ஒரு கண் நிரந்தரப் பார்வையை இழந்திருந்த காரணத்தினால் (Permanent visual loss) சட்டரீதியாக கண்பார்வையை இழந்துள்ள (Legally blind) எனவும், மேலும் மூன்று நோயாளர்கள் 70 சதவீதத்தை விட கூடியளவில் பார்வையை இழந்துள்ளது எனவும் (70% permanent blindness, 75% permanent loss of vision) கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதேபோல் அந்த மருந்துகளை பயன்படுத்துவதன் மூலம் பங்கமுற்ற ஏனைய வைத்தியசாலைகளில் நோயாளர்கள் தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்ததென வும் கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.		சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் கண் வாட்டில் ஏற்பட்டிருந்த சம்பவம் தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்வதற்காக 2023 ஜூன் 13 திகதி நியமனம் செய்யப்பட்டிருந்த குழுவின் பரிந்துரையின் படி இந்த கடுமையான நிலைமையினால் தோல்வியடைந்த காரணத்தினால் நோயாளர்களுக்கு பாரிய சேதமொன்று ஏற்பட்டிருந்ததெனவும், உற்பத்தியாளர்களை கரைநிரற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க	- மேற்படி -	முறையான விசாரணையொன்று மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் குறிப்பிட்ட நோயாளர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேண்டும் எனவும், தாக்கத்திற்குள்ளாகிய ஆட்களுக்கு கம்பனியூடாக நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கும் தரக் குறைவான மருந்துகள் வழங்கப்பட்ட கம்பனிகளில் இருந்து நட்டஈடு பெற்றுக்கொள்வதற்காக ஏற்பாடுகள் பெறுகை ஆவணங்களில் உட்படுத்துவதற்கும், தேசிய மருந்து தர பாதுகாப்பு ஆய்வுகூடத்தினூடாக தெரிவுத் தர பரிசோதனைகளை அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. அதேபோல், 2024 பெப்ரிவரி 12 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகையை தீர்மானிப்பதற்காக தொழில்நுட்ப குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு பாதிக்கப்பட்டோருக்காக அனுதாப கொடுப்பனவொன்று அல்லது முழு நட்டஈட்டுத் தொகையும் விரைவாக செலுத்துவதற்கும் மருந்து வகைகளை விடுவிப்பதற்கு முன்னர் அதன் தரத்தினை பரிசோதனை செய்யும் செய்முறையொன்று அறிமுகப்படுத்துவதற்கும், மருந்துகளை பரிசோதனை செய்வதற்காக ஆய்வுகூடங்கள் உச்சமட்டத்தில் பயன்படுத்துவற்கும் தரக் குறைவான மருந்துகளை வழங்கும் வழங்குனர்களுக்கு எதிராக உடன்பட்டுள்ள பரிகாரங்களுக்கு மேலதிகமாக பொதுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி இழப்புகளுக்காக நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி சுகாதார செயலாளருக்கு விதிக்கப்பட்டிருந்தது.

	எனினும், இந்த சம்பவம் ஏற்பட்டு 2025 ஏப்ரல் 10 திகதி அளவில் 02 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், குறிப்பிட்ட நோயாளர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு முடியாமல் இருந்தது எனவும், மருந்துகள் காரணமாக தாக்கத்திற்கு ஆளாகிய கம்பனியினூடாக நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்காததுடன், தரக் குறைவான மருந்துகளை வழங்கும் கம்பனிகளிலிருந்து நட்டஈடு பெற்றுக்கொள்வதற்குரிய ஏற்பாடுகள், பெறுகை ஆவணங்களில் உட்படுத்துதல் இதுவரை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை எனவும், இவ்வாறான வழங்குனர்களை கறைநிரழ் படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.		
(அஈ)	மருத்துவ வழங்கல் பணிப்பாளரினால் 2023 ஒக்தோபர் 09 திகதி மற்றும் 18 திகதிகளில் வெளியிடப்பட்டிருந்த இலக்கம் MSD/Q/P/2023/56 மற்றும் MSD/Q/Special/2023/4 கொண்ட சுற்றறிக்கை மூலம் Human Immunoglobulin மற்றும் Rituximab உட்பட மருந்துகள் தரக் குறைவாக காணப்பட்டமையால் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. நாட்டில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்திய மேற்கூறிய 02 மருந்து வகைகளினதும் கொள்வனவு செய்முறை, வினியோகம் மற்றும் தரகுறைவடைதல் மற்றும் மருந்து உற்பத்தி செய்தவற்கு குருதி நீர்மம் பெற்றுக்கொள்ளல்	- மேற்படி -	வழங்கும் கம்பனியில் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டியதுடன், அறவிடப்பட வேண்டிய அனைத்துத் தொகைகளையும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விடயங்கள் உட்பட "2022/2023 ஆண்டுகளின் போது மருந்துத் தேவைப்பாடுகள், பெறுகை, வழங்கல், வினியோகம் மற்றும் ஒழுங்குருத்தல் தொடர்பாக" 2024 மே 10 திகதி SPR/2024/03 இலக்கம் கொண்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விஷேட கணக்காய்வு அறிக்கை மூலமும் விடயங்கள் கண்டறியப்பட்டன. எனினும், இந்த 02 மருந்து வகைகள் தரக் குறைவடைந்து 2025 ஏப்ரல் 10 திகதி அளவில் 1½ வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், 2023 ஜனவரி 13 திகதி வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்த ICL/EOI/P**1**/174/2022 இலக்கம் கொண்ட கொள்வனவு கட்டளையின் 09 பந்தியின் பிரகாரம் இதுவரை குறிப்பிட்ட வழங்கும் கம்பனியில் இருந்து ரூபா 180.37 மில்லியன் தொகைக்கான அந்த மருந்துக் கொள்வனவிற்குரிய விடயம் மற்றும் 25 சதவீத நிருவாகச் செலவு அறவீடு செய்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(அஉ) 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது சுகாதார அமைச்சின் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு இலங்கை கிரிகட் நிறுவனத்தில் இருந்து 2,500,000 அமெரிக்க டொலர்களும் மற்றும் வெளிநாட்டு வேலையாட்டுப் பணியத்திலிருந்து ரூபா 100 மில்லியன் தொகையும் நன்கொடையாக கிடைத்திருந்ததுடன், மருந்துக் கொள்வனவிற்காக இந்த நிதியம் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. -

(i)	நாட்டில் நிலவிய நிதி மற்றும் பொருளாத நெருக்கடி மத்தியில் சுகாதாரத்துறையின் முன்னேற்றத்திற்காக 02 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை மற்றும் காசல் வீதியின் மகளிர் வைத்தியாசாலைக்காக நன்கொடையொன்றாக வழங்குவதற்கு இலங்கை கிரிகட் நிறுவனத்தின் நிறைவேற்றுக் குழுவினால் இணக்கம் தெரிவித்திருந்த போதிலும், 2022 ஜூலை 08 திகதி இலங்கை கிரிகட் நிறுவனத்தினால் 2,000,000 அமெரிக்க டொலர்கள் சுகாதார அபிவிருத்த நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. சுகாதார அபிவிருத்தி நிதியத்தினால் அவற்றின் 1,999,998 அமெரிக்க டொலர் தொகையொன்று Meropenem injection 1g மற்றும் 500mg மருந்துப் பெறுகைக்காக 2022 செப்தம்பர் 16 திகதி அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த 02 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை சுகாதாரத் துறையின் முன்னேற்றத்திற்காக சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை மற்றும் காசல்வீதி மகளிர் வைத்தியசாலைக்காக நன்கொடையாக வழங்கப்படுகின்றதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பின்னர் அந்த நிதியம் மருந்து கொள்வனவிற்காக ஈடுபடுத்துவதற்கான காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.	- மேற்படி -	பொறுப்பான உத்தியோகத்தர்கள் போதிய கவனத்துடன் செயற்படாமை தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொண்டு ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii)	மேற்கூறிய 02 மருந்துகளுக்காக 2022 செப்தம்பர் 16 திகதி அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு நிதியம் கிடைத்திருந்த போதிலும், அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் அந்த இரண்டு மருந்துகளின் இன்வொயிஸ் பெறுமதி மற்றும் சேவைக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகள் உட்பட மொத்தப் பெறுமதியாகிய ரூபா 817.11 இற்கான பில்பத்திரம் தீர்ப்பதற்காக 2022 நவம்பர் 28 திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அந்தத் தொகையினை மருந்து வழங்கள் பிரிவினால் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு தீர்க்கப்பட்டிருந்தது.	- மேற்படி -	- மேற்படி -
(iii)	இலங்கை கிரிகட் நிறுவனத்தினால் சுகாதார அபிவிருத்தி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களின் மீதியான 500,000 அமெரிக்க டொலர்களை பயன்படுத்தி புற்றுநோய்களுக்காக பயன்படுத்தப்படும் தெரிவு செய்யப்பட்ட 19 மருந்துகள் கொள்வனவு செய்து வழங்குவதற்காக 2023 பெப்ரவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப் பகுதியில் 500,000 அமெரிக்க டொலர்கள் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தினால் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 17 மருந்துகள் கொள்வனவு செய்து வழங்குவதற்கு பதிலாக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் மீண்டும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு ரூபா 154.57 மில்லியன் தொகைக்கான	- மேற்படி -	- மேற்படி -

	இன்வொயிஸ் பெறுமதி ரூபா 11.12 மில்லியன் தொகைக்காக 10 சதவீத சேவைக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகள் உட்பட ரூபா 165.69 மில்லியன் தொகை பெறுமதியான வரவுப் பத்திரம் மற்றும் பில்பத்திரம் தீர்க்கும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2023 ஏப்ரல் 20 திகதி முதல் 2024 ஆகஸ்ட் 06 திகதி வரையான காலப் பகுதியில் பில்பத்திரங்கள் தீர்க்கும் 09 ஆவணப்பட்டியல்கள் மூலம் மேற்கூறிய தொகை விண்ணப்பிக்கப்பட்டிருந்தது.		
(iv)	அரச மருந்துகக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரினால் அப்போதைய மருந்துவ வழங்கல் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மற்றும் மருத்துவ வழங்கல் பணிப்பாளருக்கு பிரதிகளுடன் சுகாதார செயலாளரை விழித்துள்ள 2023 ஒக்தோபர் 30 திகதிய கடிதத்தின் பிரகாரம் குறிப்பிட்ட பணம் இலங்கை கிரிகட் நிறுவனத்தினால் வழங்கப்படும் என அறிவித்திருந்த போதிலும், அது தொடர்பாக கவனம் செலுத்தாமல், கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை தீர்த்தல் ஆவணங்கள் 05 தொடர்பாக 10 வகையான மருந்துகளுக்காக ரூபா 117.72 மில்லியனிற்கான பில் பத்திரங்கள் 2023 ஆகஸ்ட் 08 திகதி மற்றும் நவம்பர் 13 திகதி ஆகிய இரண்டு தினங்களில் மருத்துவ வழங்கல் பிரிவினால் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.	- மேற்படி -	- மேற்படி -

(v)	மேற்கூறிய 19 மருந்துகளில் 02 மருந்து விடயங்கள் கொள்வனவு செய்து வழங்குவதற்கு பதிலாக தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தினால் 12,150 அமெரிக்க டொலர்கள் தொகையொன்று 2023 பெப்ரவரி 03 திகதி அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாக 2025 ஜனவரி 02 திகதி 02 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், அந்த மருந்து இருப்பு மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியத்திற்கு கிடைத்திருக்கவில்லை என கணினி தரவு முறைமையின் படி அவதானிக்கப்பட்டது.	- மேற்படி -	- மேற்படி -
(vi)	மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்த மீதியான 06 மருந்துகள் தொடர்பாக ரூபா 45,055,479 தொகைக்கான கொடுப்பனவை தீர்ப்பதற்காக கணக்காய்வுச் சந்தர்ப்பம் அளவில் உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், இந்த கொடுப்பனவுகள் தொடர்பாகவும், 2024 ஆகஸ்ட் 30 திகதி மற்றும் செப்தம்பர் 10 திகதிகளில் வழங்கல் பிரிவு உத்தியோகத்தர்களினால் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் தயாரித்தல் மற்றும் சரி பிழை பார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பிரதான கணக்காளர் (வழங்கல்) மற்றும் பணிப்பாளர் (மருத்துவ வழங்கல்) அவர்களினால் அந்த கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அந்த பரிந்துரைகள் மீது மருத்துவ வழங்கல் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் கொடுப்பனவுகள்	- மேற்படி -	- மேற்படி -

	அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன்படி, இந்தக் கொடுப்பனவுகள் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்கள் முறையான புரிந்துணர்வுடன் செயற்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.		
(vii)	வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் 2023 ஜனவரி 23 திகதி தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு வழங்கியிருந்த ரூபா 100 மில்லியன் தொகை 2023 ஆகஸ்ட் 17 திகதி அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த இந்த நன்கொடையை பயன்படுத்தி புற்றுநோயாளர்களுக்கு அத்தியவசியமான 42 மருந்து விடயங்களை விரைவாக வழங்கும் படி 2023 பெப்ரவரி 06 திகதி மருத்துவ வழங்கல் பிரதிப்பணிப்பாளர் நாயகத்தினால் அரச மருந்தகக் கூட்டுதாபன தலைவருக்கு அறிவித்திருந்ததுடன், கட்டளைகளில் தெரிவு செய்யப்பட்டிருந்த 15 வகையாக மருந்துகளுக்காக 2023 பெப்ரவரி 15 திகதி மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குருத்தல் பிரிவினால அவசர கொள்வனவுகளின் கீழ் கூறுவிலைகள் அழைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கூறுவிலைகள் அழைத்தல் 2023 பெப்ரவரி 15 திகதி பி.ப. 13.15 இற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், விலைகள் திறத்தல் 2023 பெப்ரவரி 17 திகதி மு.ப. 10.00 இற்கு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், விலைகள் சமர்ப்பிப்பதற்கு 02 நாட்களுக்கு குறைவான காலம் வழங்கப்பட்டிருந்தனால் கூடிய எண்ணிக்கையான வழங்குனர்களுக்கு	- மேற்படி -	உத்தியோகத்தர்களின் கவனயீனம் மற்றும் பெறுகை வழிகாட்டல்களுக்கு முரணாக பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளல் காரணமாக நிதி மோசடி ஏற்படக்கூடிய ஆபத்தினை விசாரணை செய்து ஒழுக்காற்று செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.		
(viii) மேற்கூறியவாறு 02 நாட்களுக்கு குறைவான காலத்தினுள் அவசர கூறுவிலை அழைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பெறுகை தீர்மானம் எடுப்பதற்கு ஒரு மாதத்திற்கு அண்மித்த காலமும் தெரிவு செய்த வழங்குனருக்கு கொள்வனவு செய்தல் கட்டளைகள் (இன்டெண்டு) வழங்குவதற்கு 30 – 41 நாட்கள் இடைப்பட்ட காலமும் இன்டெண்டு வழங்கப்பட்ட நாள் முதல் மருந்து இருப்பு கிடைப்பதற்கு 80 நாட்களுக்கும் 191 நாட்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்ததுடன், “அவசர தேவைப்பாடு” என வழங்குனர்களுக்கு விலைகள் சமர்ப்பிப்பதற்காக மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டன.	- மேற்படி -	- மேற்படி -
(ix) மருந்து உற்பத்தி வழங்குதல் மற்றும் ஒழுங்குறுததல் பிரிவின் மேலதிக செயலாளரினால் மேற்கூறிய 15 மருந்துகள் கொள்வனவு செய்தல் தொடர்பாக கூறுவிலைகளை மதிப்பாய்வு செய்வதற்காக 2023 பெப்ரவரி 22 திகதி 07 அங்கத்தவர்களைக் கொண்ட விலைக்குழுவொன்று மாத்திரம் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், புற்றுநோய் மருந்து போன்ற விஷேட மருந்து வகைகளை மதிப்பாய்வு செய்வதற்காக தொழில்நுட்ப அறிவுடைய விஷேட வைத்தியர் ஒருவர்	- மேற்படி -	- மேற்படி -

	அல்லது நிபுணர் ஒருவர் நியமனம் செய்திருக்காததுடன், சுகாதாரத் துறையின் அவசரக் கொள்வனவு பெறுகை வழிகாட்டலின் பந்தி 2.1 இன் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு நியமனம் செய்யப்படாத சந்தர்ப்பத்தில் அவசர கொள்வனவுக் குழுவினால் தொழில்நுட்ப விஷேடத்துவ அறிவுரைகளை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செயற்பட்டதென உறுதிப்படுத்தப்படவில்லை.		
(x)	மேலும், மேற்கூறிய வழிகாட்டலின் பந்தி 2.1 இன் பிரகாரம் சுகாதாரப் பிரிவின் அவசரப் பெறுகை செய்முறையின் கீழ் கொள்வனவு செய்திருந்த விடயங்களின் கொள்வனவு செய்தல் தேவைப்பாட்டினை நியாயப்படுத்தி கொள்வனவு செய்திருந்த விடயம், வழங்குனர் மற்றும் பெறுமதி உட்படக்கூடியவாறு மாதாந்த அறிக்கையொன்ற சுகாதார அமைச்சரினால் அமைச்சரவையின் அணவல் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், பெறுகை நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வாளரினால் பெறுகை செய்முறையை அவதானித்து பெறுகை செய்முறை இறுதியில் நியாய மற்றும் ஆக்கபூர்வ செய்முறைகள் சான்றுபடுத்துவதற்காக அறிவிக்கப்பட வேண்டும். எனினும், மேற்கூறிய 15 வகையான மருந்துகளின் பெறுகை தொடர்பாக அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.	- மேற்படி -	- மேற்படி -

(xi)	2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்து ஒழுங்குறுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவுகள் 58, 82 மற்றும் 101 இன் படி அனைத்து மருந்து இறக்குமதிகள், உற்பத்திகள், விற்பனைகள் மற்றும வினியோகம் தேசிய மருந்து ஒழுங்குறுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்தல் கட்டாயமாக காணப்பட்ட போதிலும், மருந்துகளின் பண்புகள், பாதுகாப்பு மற்றும் தெளிவான தன்மை தொடர்பாக அதிகார சபையினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனினும், அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் இந்தப் பெறுகையின் போது அதிகாரசபையில் பதிவு செய்திருக்காத 11 மருந்துகளுக்காக பதிவு செய்தலிலிருந்து விடுதலை செய்தல் சான்றிதழ் (WOR) மீது வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், அவற்றில் 09 மருந்துகளை பதிவு செய்வதிலிருந்து விடுவிப்பதற்கான குழுவின் முறையான அங்கீகாரம் இன்றி விஷேட செய்முறை (Special pathway) ஒன்றின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக பதிவு செய்தலிலிருந்து விடுவிப்பதற்கான அங்கீகாரம் வழங்கும் போது குறிப்பிட்ட குழுவினால் கவனம் செலுத்தும் விலைகளின் நியாயத் தன்மை, மருந்துகள் தொடர்பான குறிப்பிட்ட கல்லூரியின் அபிப்பிராயம், மருந்துகளின் தேவைப்பாடு, தற்போது காணப்படும் அதே மாதிரியான பதிவு செய்யப்பட்ட மருந்துகளின் எண்ணிக்கை, மருந்துகளின்	- மேற்படி -	- மேற்படி -

	பதிவு செய்தல் நிலைமை, வழங்குனர்களின் மற்றும் உற்பத்தியாளர்களின் பதிவு செய்தல் நிலைமை, பண்புசார் தன்மை தொடர்பாக முன்னர் சிக்கல் காணப்படல் போன்ற காரணி தொடர்பாக கவனம் செலுத்தப்படாமை மற்றும் மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் தெளிவான தன்மையை உறுதிப்படுத்தல் போன்ற ஆவணங்களை மதிப்பாய்வு செய்யாமல் கொள்வனவு கட்டளைகள், இன்ஜெண்டுகள் மற்றும் இன்வொயிஸ்கள் போன்ற கட்டளைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களை மாத்திரம் பரிசோதனை செய்து குறிப்பிட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்து.		
(xii)	மேற்குறிப்பிடப்பட்ட 15 மருந்துகள் 2024 ஜூலை முதல் ஒக்தோபர் வரையான காலப் பகுதியில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்ததுடன், அவற்றின் இன்வொயிஸ் பெறுமதி ரூபா 132.90 மில்லியன் தொகையும், 04 சதவீத சேவைக் கட்டணமாகிய ரூபா 5.31 மில்லியன் தொகை உட்பட மொத்தப் பெறுமதி ரூபா 138.21 மில்லியன் தொகையுமாக இருந்தது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 100 மில்லியன் நன்கொடை சுகாதார அபிவிருத்தி நிதியத்தினால் 2023 ஆகஸ்ட 17 திகதி அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் மருத்துவ வழங்கல்	- மேற்படி -	- மேற்படி -

பிரிவிற்கு அந்தப் பெறுமதியை கழிக்காமல் மொத்தப் பெறுமதியாகிய ரூபா 138.21 மில்லியனிற்காக கொடுப்பனவு செய்வதற்காக வரவுப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மருத்துவ வழங்கல் பிரிவினால் இந்த மருந்துகளுக்காக அந்தச் சந்தர்ப்பத்திலும் ரூபா 100 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததை கவனம் செலுத்தாமல் மொத்தப் பெறுமதிக்காக கொடுப்பனவு உறுதிச் சீட்டு தயாரிக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு பரிசோதனையின் பின்னர் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பின் வினியோகம் மற்றும் செயற்பாடு) இன் 2024 ஒக்தோபர் 11 திகதிய கடிதத்தின் மூலம் ரூபா 100 மில்லியன் தொகைக்கான வரவுப் பத்திர பெறுமதியை கழிக்கும் படி மருத்துவ வழங்கல் பிரிவின் கணக்காளருக்கு அறிவித்திருந்தது. அதன்படி, அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவின் உத்தியோகத்தரினால் வேண்டுமென்றே அல்லது கவனியீனத்தினால் மேற்கூறியவாறு செயற்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 100 மில்லியனிற்கான மேலதிக கொடுப்பனவொன்று மேற்கொள்ளும் சந்தர்ப்பம் காணப்பட்டதுடன், அதன் காரணமாக நிதி மோசடி ஏற்படும் ஆபத்து நிலைமையொன்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(xiii)	புரிந்துணர்வு ஒன்று இன்றி அல்லது கவனயீனத்துடன் செயற்படுதல் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் வேண்டுமென்றே அல்லது கவனயீனத்துடன் செயற்படுவதனால இவ்வாறு ரூபா 117.72 மில்லியன் தொகை மற்றும் ரூபா 817.11 மில்லியன் தொகை என கூட்டுத்தொகை ரூபா 934.83 மில்லியன் தொகைக்கான மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதன்படி, ஒரு வருடத்திற்கு மிகையான காலம் அரச நிதி ரூபா 934.83 மில்லியன் தொகை மற்றும் 02 வருடங்களுக்கு அண்மித்த காலம் 12,150 அமெரிக்க டொலர்கள் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் பிழையான முறையில தடுத்து வைக்கப்பட்டிருந்தெனவும், 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்காக இலங்கை மத்திய வங்கியல் விஷேட டொலர் கணக்கின் மூலம் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த 49,680 அமெரிக்க டொலர்களுக்காகவும், இந்த முறைப்படி வரவு அறிவித்தல் பத்திரம் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவிற்காக மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்தது எனவும், கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. அதன்படி, பொருளாதார நெருக்கடி காணப்பட்ட 2022	- மேற்படி -	- மேற்படி -

	/ 2023 காலப் பகுதியில் ஏனைய அத்தியவசிய மருந்து வழங்கல் பெறுகைகளுக்காக ஈடுபடுத்துவதற்க இயலுமாக காணப்பட்ட ரூபா 934.83 மில்லியன் மற்றும் 61,830 அமெரிக்க டொலர்கள் கணக்காய்வினால் கண்டறியப்படும் வரை 02 வருடங்களுக்கு மிகையான காலம் உத்தியோகத்தர்களின் கவனயீனத்தின் காரணமாக தேவையற்ற விதமான அரச மருந்தாக்க கூட்டத்தாபனத்தில் தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த காரணத்தினால் சுகாதார துறையில் ஏற்படுத்தியிருந்த பிரதிகூலமான தாக்கம் எவ்வளவு என அளவை செய்ய முடியாது என சுட்டிக்காட்டப்படுகின்றது.		
(அஊ)	2025 ஆண்டளவில் முடிவுறுத்தப்பட்டிருந்த மருந்து உற்பத்தி வழங்கல் மற்றும் ஒழுங்குறுத்தல் இராஜாங்க அமைச்சு நடாத்தப்பட்டு வந்த HQ Colombo கட்டிடத்தின் முதல் மாடி Rare wing பகுதி மற்றும் ஐந்தாம மாடி குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் போது பாதுகாப்பு வைப்புக்கள் மற்றும் மின்சார வைப்புக்கள் என தனியார் கம்பனியொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 7,570,493 இற்கான தொகையினை உடன்படிக்கை முடிவடைய முன்னர் மாதாந்த வாடகைக்காக பதிலீடு செய்தவற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து 14 மாதங்கள் கடந்திருந்த போதிலும், அந்த வைப்புத் தொகையை அறவீடு செய்திருக்கவில்லை. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை	இது தொடர்பாக நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ளும் படி மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) மற்றும் பிரதான சட்ட உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது என.	குறிப்பிட்ட வைப்புத் தொகைகளை அறவீடு செய்யப்படாமை தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கு பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை எதுவித சட்ட நடவடிக்கைகளும் எடுத்திருக்காததுடன், குறிப்பிட்ட வைப்புத் தொகையை அறவீடு செய்யாமை தொடர்பாக விசாரணையொன்று மேற்கொண்டு அதற்கு பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவதானிக்கப்படுகின்றது.		
(அள)	சுகாதார அமைச்சுச் செயலாளரின் 2023 திசெம்பர் 04 திகதிய SM/PSRP/14/2022/SWASTHA-Vel.II இலக்கம் கொண்ட கடிதத்தின் படி வருடாந்த மருந்து இருப்புக் கணிப்பீடு சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கணிப்பீட்டுச் சபை ஒன்றின் மூலம் வருடாந்தம் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்கான மருந்து இருப்புக் கணிப்பீடொன்று கணக்காய்வுத் திகதியாகிய 2025 மார்ச் 10 திகதி அளவிலும் எந்த வைத்தியசாலையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	- மேற்படி -	வருடாந்த மருந்து இருப்புக் கணிப்பீடொன்றுக்கு உட்ளாக்கி பற்றாக்குறையை அறவீடு செய்வதற்கு மற்றும் மிகைகளை ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(அஏ)	பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் கதிர் வீச்சுப் பிரிவின் A அறையில் நிறுவப்பட்டிருந்த கதிர் வீச்சு இயந்திரத்தின் ரூபா 7 மில்லியன் பெறுமதியான பகுதியொன்றாகிய Table Detector 2021 நவம்பர் 20 திகதி செயற்படாமையால் ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	குறிப்பிட்ட முகவர் நிலையம் 2021 நவம்பர் 25 திகதி இயந்திரத்தின் table detector உற்பத்தி நாடான ஜப்பானிற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், பின்னர் 2023 மார்ச் 31 திகதி திருத்த வேலை மேற்கொள்ள முடியாதென அறிவித்து அந்த உபகரணத்தை இந்த வைத்தியசாலைக்கு மீண்டும் அனுப்பப்பட்டிருந்தது எனவும், 2021 ஒக்தோபர் 01 திகதி power adaptor ஒன்று அந்த உபகரணத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டதெனவும், 2021 ஜூலை 30 திகதி battery replace பண்ணப்பட்டது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது எனவும்,	நிதிப் பிரமாணமங்களின் பிரகாரம் முறையான விசாரணையொன்று மேற்கொண்டு சேதம் தொடர்பாக பொறுப்பானவர்களை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		அதன் காரணமாக இந்த உபகரணம் செயற்படாமை தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு நிதிப் பிரமாணம் 104 இன் படி அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என.	
(அஐ)	உலக வங்கி கடனுதவியின் கீழ் செயற்படுத்தப்பட்ட கொவிட் - 19 அவசர பதிலளித்தல் மற்றும் சுகாதார முறைமையை தயாரிக்கும் செயற்திட்டத்தின் நிதி ஏற்பாடுகள் மீது UNOPS நிறுவனத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த Blood Glucose Strips அறுவை சிகிச்சை விடயம் மற்றும் Atracurium Besylate மற்றும் Nitroglycerine Sublingual Tablets 0.5 mg (GTN) ஆகிய 02 மருந்து விடயங்கள் வைத்தியசாலைகளுக்கு வினியோகிக்காமல் மருத்துவ வழங்கல் பிரிவுக் களஞ்சியத்திலேயே காலவதியாகியிருந்ததுடன், மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
	(i) நோயாளர்களின் குருதியில் சீனி மட்டத்ததை அளவை செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற Blood Glucose Strips – Adults விடயத்திற்காக கட்டளையிடப்பட்ட 600,000 அமெரிக்க டொலர் கிரயத்தையுடைய (அண்ணளவாக ரூபா 219 மில்லியன்), 5,000,000 அலகுகளில் 50 சதவீதம் எனப்படும் ரூபா 109,500,000 தொகை பெறுமதியான 2,500,000 அலகுகள் 2023 மார்ச் 20 திகதி மருத்துவ வழங்கல் பிரிவின் 54 ஆம் இலக்க களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. அந்த இருப்பு அந்தக் களஞ்சியத்தில் 01 வருடமும்	பதிலளிக்கப்படவில்லை.	முறையான விசாரணையொன்று மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	09 மாதங்களும் அண்மித்த காலமொன்று உரிய ஆவணங்கள் கிடைக்கப் பெறாமை என குறிப்பிட்டு அந்தப் பெறுவனவுகளை பதிவு செய்யாமல் காணப்பட்டதுடன், 2025 ஜனவரி 31 திகதி அளவில் மருத்துவ வழங்கல் பிரிவு களஞ்சியத்திலேயே அந்த இருப்பினை வைத்தியசாலைக்கு வினியோகிக்காமல் காலவதியாகியிருந்தது.		
(ii)	இந்தக் காலப் பகுதியில் UNOPS நிறுவனத்தினூடாக வழங்கப்படுகின்ற இருப்புக்கள் தொடர்பான ஆவணங்களில் காணப்படும் குறைபாடுகளின் காரணத்தினால் மருந்து இருப்புக்களை தற்காலிகமாக களஞ்சியப்படுத்தும் பிழையான செய்முறையொன்று மருத்துவ வழங்கல் பிரிவில் கடைபிடிக்கப்பட்டுள்ளது எனவும், சிரேஷ்ட உதவிப் பணிப்பாளரின் அறிவுரையின் படி இந்த இருப்புக்கான இன்வொயிஸ்கள், பொதி செய்தல் அட்டவணைகள் ஆகியவை இன்றி களஞ்சியப் பொறுப்பாளரினால் குறிப்பிட்ட இருப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு 02 மாதங்களின் பின்னர் அதாவது 2023 மே 31 திகதி அளவில் அந்த ஆவணங்கள் மருத்துவ வழங்கல் பிரிவின் இருப்புக் கட்டுப்பாட்டு அலகிற்கு கிடைத்திருந்த போதிலும், UNOPS நிறுவனத்தினூடாக வழங்கப்படுகின்ற மருத்துவ வழங்கல் கூட்டிணைப்புக்காக மருத்துவ வழங்கல் பிரிவில் செயற்திட்ட கூட்டிணைப்பாளர் என வேறு தனிப்பட்ட மருந்தாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், உத்தியோகத்தர்களின் கவனயீனத்தினால் இந்த	- மேற்படி -	- மேற்படி -

காலவதியாதல் ஏற்பட்டிருந்தது.		
(iii) 2023 ஆண்டிற்காக மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த இருப்புக் கணிப்பீட்டின் போது இவ்வாறு GRN காணப்படாத இருப்பொன்று காணப்படல் தொடர்பாக கணிப்பீட்டுச் சபையினால் கண்டறியப்படாமை காரணத்தினால் குறிப்பிட்ட கணிப்பீட்டு சபை தனது கணிப்பீட்டு அலுவல்களை சரியாக மற்றும் பொறுப்புடன் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. கணிப்பீட்டு அலுவல்கள் சரியாக மேற்கொள்ளப்பட்டிருந்தால் இந்த விடயங்கள் காலவதியாவதை தவிர்த்துக்கொள்ள முடியுமாக இருந்திருக்கும்.	- மேற்படி -	- மேற்படி -
(iv) Blood Glucose Strips விடயம் தொடர்பாக 2021 மற்றும் 2022 ஆண்டுகளிற்கான அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரதான கட்டளைகளில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக தற்போது வைததியசாலைகளில் இந்த விடயத்தில் தட்டுப்பாடொன்று காணப்பட்டதுடன், 2022 ஆண்டின் போது வைத்தியசாலைகளினால் ரூபா 59,607,902 இற்கான உள்நாட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் , உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக மருத்துவ வழங்கல் பிரிவில் 2.5 மில்லியன் அலகுகளுக்கான இருப்பொன்று காணப்பட்ட போதிலும், அந்த இருப்பினை வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படாமையால், 2023	- மேற்படி -	- மேற்படி -

	ஆண்டின் போது வைத்திசாலைகளினால் ரூபா 52,097,126 இற்கான உள்நாட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினூடாக அதற்கு முன்னர் அலகு ஒன்று ரூபா 11 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட இந்த விடயம் UNOPS நிறுவனத்தினூடாக அலகொன்று ரூபா 43 வீதமும் இருப்புத் தட்டுப்பாடு காரணமாக வைத்தியசாலைகளினால் அலகு ஒன்று ரூபா 83 மற்றும் ரூபா 112 இற்கு இடைப்பட்ட கூடிய விலைகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.		
(v)	விவரக் குறிப்புக்களின் படி இந்த விடயத்துடன் இலவசமாக வழங்கப்பட வேண்டிய 2000 Blood glucose meter மற்றும் 4,980,000 Lancet pin 87,680 அமெரிக்க டொலர்கள் தொகை செலவிடப்பட்டு செயற்திட்டத்தினூடாக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், Blood Glucose Strips 2.5 மில்லியன் அலகுகள் காலவதியாகியிருந்தமையால் Lancet pin 2.5 மில்லியன் தொகை பயன்படுத்த முடியாமல் விளைவற்று பயன்படுத்த முடியாத ஆபத்து நிலை ஏற்பட்டிருந்தது.	- மேற்படி -	- மேற்படி -
(vi)	காலவதியாகிய Blood Glucose Strips 2.5 மில்லியன் அலகுகளுக்கான கிரயம் தீர்வைக் கட்டணம் மற்றும் உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 198,057,949 தொகை அரசுக்கு நட்டமொன்றை ஏற்படுத்தி கவனயீனத்துடன் செயற்பட்ட	- மேற்படி -	- மேற்படி -

	உத்தியோகத்தருக்கு எதிராக தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(vii)	மேலும் உலக வங்கி கடன் உதவியின் கீழ் UNOPS நிறுவனம் ஊடாக கட்டளையிடப்பட்ட 129,000 அமெரிக்க டொலர் பெறுமதியான (அண்ணளவாக ரூபா 38,055,000) Atracurium Besylate **25**mg/**2.5**ml USP Injection 250,000 மருந்து அலகுகள் 2023 ஜூலை 06 திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்தது எனவும், குளிரூட்டல் செயற்பாடுகளுடனான மருந்துகள் இறக்குமதி செய்யும் போது பேணப்பட வேண்டிய குளிரூட்டல் செயற்பாட்டு நிலைமை தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு தேவையான வெப்பமானியில் பதிவு செய்யப்படாமையால் இந்த மருந்து புறக்கணிக்கப்பட்ட போதிலும், இந்த அறிக்கை வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் 02 வருடங்களுக்கு அண்மித்த காலம் மருத்துவ வழங்கல் பிரிவில் 06 ஆம் இலக்க குளிரூட்டப்பட்ட களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு 2025 மார்ச் மாதத்தில் காலவதியாகியிருந்தது. அவற்றை அகற்றுவதற்காக UNOPS நிறுவனத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன், இந்த கிரயத்திற்கு மிகையாக இந்த மருந்துக்கான தீர்வை மற்றும் துறைமுக தாமதக் கட்டணம் ரூபா 829,811 தொகை செலுத்தப்பட்டிருந்தது.	- மேற்படி -	- மேற்படி -

(viii) மருத்துவ வழங்கல் பிரிவில் வரையறையான குளிரூட்டப்பட்ட களஞ்சிய கொள்திறன் ஒன்று காணப்படுவதனால் புறக்கணிக்கப்பட்ட மருந்து இருப்பொன்று குளிரூட்டப்பட்ட களஞ்சியத்தில் வைத்திப்பதனால் களஞ்சிய முகாமைத்துவத்திற்கு சவாலாக உள்ளதென அவதானிக்கப்பட்டது. 2025 மார்ச் மாதம் காலவதியாகிய இந்த புறக்கணிக்கப்பட்ட மருந்து இருப்பு தொடர்ந்தும் குளிரூட்டப்பட்ட களஞ்சியத்தில் வைத்திருத்தல் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மேலதிக செலவொன்று மேற்கொள்ள நேரிட்டிருந்தது.	- மேற்படி -	- மேற்படி -
(ix) UNOPS நிறுவனத்தினூடாக கொள்வனவு செய்யப்பட்ட Nitroglycerine Sublingual Tablets 0.5 mg ஆகிய மருந்தும் மருத்துவ வழங்கல் பிரிவின் விவரக் குறிப்புகளுடன் இணங்கியிருக்காமையால், மருத்துவ வழங்கல் பிரிவினால் ஏற்றுகொள்ளப்படாத மருந்து இருப்பொன்றென் அவதானிக்கப்பட்டது. அத்துடன், இந்த மருந்து கணக்காய்வுத் திகதி அளவிலும் மருத்துவ வழங்கல் பிரிவின் இரண்டாம் மாடியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 71 மில்லியனிற்கு அண்மித்த பெறுமதியொன்றான இந்த மருந்துகளை அகற்றுவதற்காக UNOPS நிறுவனத்தினால நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	- மேற்படி -	- மேற்படி -

	(x) UNOPS நிறுவனத்தினூடாக கொள்வனவு செய்யப்பட்ட Blood Glucose Strips, Atracurium Besylate மற்றும் GTN அனைத்து மருந்துகளும் எவ்வித பயன்பாடுகளும் இன்றி காலவதியாகி கணக்காய்வுத் திகதி அளவிலும் மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த துடன், இந்த மருந்துகள் காலவதியாவதை தடுத்துக் கொள்வதற்காக மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவின் விவரக் குறிப்புகளின் படி இந்த மருந்துகள் வழங்குவதற்கு அல்லது அனைத்து விடயங்களையும் முறைப் பிரகாரம் ஒருங்கிணைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இதற்காக செலவிடப்பட்ட மொத்த கிரயம் தொடர்பாக கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	- மேற்படி -	- மேற்படி -
	(xi) மேற்கூறிய விடயங்களுக்கு மேலதிகமாக தரக் குறைவான விடயங்கள் உட்பட ரூபா 890.16 மில்லியன் பெறுமதியான 892 மருத்துவ வழங்கல் விடயங்கள் 2024 திசெம்பர் 31 அளவில் மருத்துவ வழங்கல் பிரிவிலும் வைத்தியசாலைகளிலும் காலவதியாக இருந்தது.	- மேற்படி -	- மேற்படி -
(அஓ)	நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நட்டமொன்று மற்றும் சேதமொன்று ஏற்பட்டவுடனே அதன் எண்ணிக்கை மற்றும் காரணத்தை அறுதியாக அறிந்துகொள்வதற்கும் அதற்கு பொறுப்பு சொல்ல வேண்டியவர்களை தீர்மானிப்பதற்கும் விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், முறையே மருந்து குறைவு, காலவதியாதல் மற்றும்	- மேற்படி -	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	சேதமடைதல் முறையே ரூபா 22.91 மில்லியன் தொகை, ரூபா 218.04 மில்லியன் மற்றும் ரூபா 199.26 மில்லியன் தொடர்பாக 04 வருடங்களுக்கும் 15 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(அழ)	2022 முதல் 2024 வரையான காலப் பகுதியில் காலி தேசிய வைத்திசாலைக்கு ருஹுனு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடமூடாக மற்றும் சுகாதார அறிவியல் பீடத்தினூடாக வந்து Elective பாடநெறிகள் பற்றி வெளிநாட்டு மாணவர்கள் முறையே 876 பேர்களிடம் மற்றும் 73 பேர்களிடம் இடம் கூட்டுத்தொகை ரூபா 168.19 மில்லியன் தொகையொன்று கிடைத்திருந்ததுடன், அந்தப் பணதில் காலி தேசிய வைத்தியசாலைக்கு செலுத்த வேண்டிய 25.9 சதவீதத்திற்கு சமமான ரூபா 43.56 மில்லியன் தொகை போலவே 2024 ஆண்டிற்காக பல்கலைக் கழக நிதி உப குழுவின் தீர்மானத்தின் படி மருத்துவ பீடத்தினால் காலி தேசிய வைத்தியசாலைக்கு செலத்த வேண்டிய ரூபா 250,000 தொகையுடன் கூட்டுத்தொகை ரூபா 43.81 மில்லியன் தொகை 2025 மார்ச் காணக்காய்வுத் திகதி வரை குறிப்பிட்ட பீடங்களில் இருந்து வைத்தியசாலைக்கு அனுப்பியிருக்கவில்லை.	தர மேம்பாட்டு நிதியத்தின் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான பரிசோதனை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டதெனவும் மற்றும் ருஹுனு பல்கலைக் கழகத்தின் பதிவாளர் மற்றும் சுகாதார அறிவியல் பீடத்தின் பதிவாளரிடம் பதில் அழைக்கப்பட்டுள்ளது என.	அறவிடப்பட வேண்டிய அனைத்துத் தொகைகளும் சரியாக கணித்து அறவீடு செய்வதற்கும் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் அது பற்றி கணக்காய்விற்கு உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(அழள)	2022 முதல் 2024 வரையான காலப் பகுதியில் ஜேர்மனி இலங்கை நட்புறவு மகளிர் வைத்தியசாலை, ருஹுனு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடம் மற்றும் சுகாதார அறிவியல் பீடத்தினூடாக Elective பாடநெறி கற்கின்ற வெளிநாட்டு மாணவர்கள் முறையே 122 மற்றும் 83 பேர்களிடம்	கணக்காய்வினால் விடயத்தை சுட்டிக்காட்டி பின்னர் தற்போது மருத்துவ பீடத்தினால் ரூபா 300,000 தொகையும், சுகாதார அறிவியல் பீடத்திலிருந்து ரூபா 233,045 தொகையொன்றும் கிடைத்திருந்ததெனவும். மேலும், தற்போது வெளிநாட்டு மருத்துவ மாணவர்கள் தொடர்பாக முறைப் பிரகாரம தகவல்கள் பெற்றுக்கொள்வதற்காக திட்டப்	- மேற்படி -

கூட்டுத்தொகை ரூபா 12.07 இற்கான தொகையொன்று கிடைத்திருந்ததுடன், அந்தத் தொகையின் ஜேர்மனி இலங்கை நட்புறவு மகளிர் வைத்தியசாலைக்கு செலுத்த வேணடிய 25.9 சதவீதம் எனப்படும் ரூபா 3.13 மில்லியன் போலவே, பல்கலைக் கழக நிதி துணைக் குழுவின் தீர்மானத்தின் படி 2024 ஆண்டிற்காக ஜேர்மனி இலங்கை நட்புறவு மகளிர் வைத்தியசாலைக்கு செலுத்த வேண்டிய ரூபா 100,000 தொகையுடன் மொத்தம் ரூபா 3.23 மில்லியன் தொகை 2025 மார்ச் கணக்காய்வுத் திகதி வரையில் எந்தவொரு பீடத்தினாலும் வைத்தியசாலைக்கு அனுப்பியிருக்கவில்லை.

பிரிவினால் முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றதென.

(அக) எம்பிலிபிடிய மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தை அபிவிருத்தி செய்தல், பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தாபனக் கோவையின் அந்தியாயம் xix இன் பிரிவு 1.1 இன் கீழ் ஏற்பாடுகள் காணப்படாத போதிலும், பணிப்பாளரின் வீட்டுக்காக தளபாடங்கள் பெற்றுக்கொள்வதற்கு சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன்படி, ரூபா 239,535 தொகை பெறுமதியான தளபாடங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் பெறுகை வழிகாட்டல் கடைபிடிக்கப்படாமல் கட்டளை இடப்பட்டு பெறப்பட்டிருந்தது. மேலும், வைத்தியசாலை தேவைப்பாட்டிற்காக

தற்போது அந்த பண்டங்கள் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தில் காணப்படுவதுடன், இதற்காக எதுவித கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும், இது தொடர்பாக சுகாதார அமைச்சின் அவசர சுற்றி வளைப்புப் பிரிவினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அந்த அறிக்கையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், தற்போது களஞ்சிய கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனவும், அதன் பின்னர் வேண்டப்பட்டுள்ள பிரிவுகளுக்கு வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.

பெறுகை வழிகாட்டல்கள் மற்றும் தாபனக் கோவை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டியதுடன், விரைவாக விசாரணை மேற்கொண்டு அந்த அறிக்கை மற்றும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

		கொள்வனவு செய்திருந்த ரூபா 258,755 தொகை பெறுமதியான 06 வகையான வீட்டு மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் பணிப்பாளரின் வீட்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது.		
	(ii)	வைத்தியசாலை பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ள பணிப்பாளரின் வீட்டைச் சுற்றி ரூபா 28,000 தொகை செலவிடப்பட்டு 14 கம்பித் தூண்கள் போடப்பட்டிருந்த வேலியை அகற்றி மதிலொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், மதில் நிர்மாணிக்கும் போது அகற்றப்பட்ட கம்பி தூண்கள் ஏதும் வைத்தியசாலையில் காணப்படவில்லை. 2024 திசெம்பர் 02 திகதியின் பின்னர் கோழிக்கூடொன்று அமைக்கப்பட்டிருந்ததுடன், மேலும், சீமெந்துக் கற்கள் மற்றும் வலைகள் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டிருந்த மேலும் ஒரு பகுதி உடைக்கப்பட்டிருந்ததெனவு ம், 2025 மார்ச் 25 மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.	சுகாதார அமைச்சின் அவசர சுற்றி வளைப்புப் பிரிவினால் விசாணையொன்று மேற்கொள்ளப்படுகின்றதுடன், அந்த அறிக்கையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதெனவும், மேலும் எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்தினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனவும், மதில் கட்டும் போது பொருத்தப்பட்டிருந்த 14 கம்பித் தூண்களை கலற்றி வைத்தியசாலை பணிப்பாளர் உத்தியோகபூர்வ வாசஸ்தள வளாகத்தில் காணப்பட்டதுடன், பின்னர் வைத்தியசாலை பணிப்பாளரின் அறிவுரையின் படி வளாகத்தின் மண்ணரிப்பை தடுப்பதற்காக தடுப்புச் சுவர் தயாரிப்பதற்காக இந்த கம்பித் தூண்கள் பயன்படுத்தப்பட்டது என.	- மேற்படி -
(அங)	நாகொட போதனா வைத்தியசாலையில் சிகிச்சை கழிவுப் பொருட்கள் அப்புறப்படுத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.			
	(i)	வைத்தியசாலையில் உருவாகின்ற சிகிச்சை கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக தனியார் கம்பனியொன்றிடம் அணுகியிருந்த முத்தரப்பு உடன்படிக்கையின்	எதிர் காலத்தில் இது தொடர்பாக தாமதம் இன்றி கண்டறிந்து மேலதிக கொடுப்பனவொன்று மேற்கொண்டிருந்தால் அடுத்த பில்பத்திரங்களில் இருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் செயற்படாத காரணத்தினால் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து தொகைகளையும் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	நிபந்தனைகளின் பிரகாரம் குறிப்பிட்ட தனியார் கம்பனியினால் வழங்கப்பட வேண்டிய கழிவுப் பொருட்களை வகைப்படுத்துதல் மற்றும் களஞ்சியப்படுத்தலுக்கு தேவையான குறியீடு இடப்பட்ட நிறங்களுடனான பொதியிடும் பைகள் வழங்கியிருக்காத காரணத்தினால் 2021 ஆண்டு பெப்ரவரி முதல் 2023 ஆண்டு இறுதி வரையான காலப் பகுதியினுள் 205,140 மஞ்சள் நிற பைகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,717,974 தொகை அரசிற்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.		
(ii)	2024 ஆண்டு ஏப்ரல், மே மற்றும் ஜுன் மாதங்களுக்கான வைத்தியசாலையின் சிகிச்சை கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தல் 5,260 மஞ்சள் நிற பைகள் குறிப்பிட்ட கம்பனியினால் வழங்கியிருந்த போதிலும், வைத்தியசாலை மாதாந்த மஞ்சள் நிற பைகளின் தேவைப்பாடு 7,000 எண்ணிக்கையுன் ஒப்பீடு செய்யும் போது அந்த எண்ணிக்கை எவ்விதத்திலும் போதியளவாக காணப்படவில்லை. அதேபோல், சிகிச்சை கழிவுப் பொருள் களஞ்சியத்திற்காக குறைந்த அளவு 300 gauge கனமான பைகள் வழங்க வேண்டியிருந்த போதிலும் வழங்கிய பைகளின் கனம் 110 gauge அளவே கொண்டிருந்தது.	- மேற்படி -	- மேற்படி -

(அச)	2017 ஏப்ரல் 19 திகதிய 03/2017 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரச நிறுவனங்களிலும், விரல் அடையாள இயந்திரங்கள் பொறுத்துவதன் மூலம் உத்தியோகத்தர்கள் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் உறுதிப்படுத்தும் அறிக்கை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், 2017 மே 12 திகதிய இலக்கம் DMS/0016 கொண்ட திறைசேரி செயலாளரினால் சுகாதார அமைச்சுச் செயலாளருக்கு வழங்கியிருந்த கடிதத்தின் பிரகாரம் சுகாதார பதவியணியினரின் உள்வருகை மற்றும் வெளிச் செல்லலை உறுதிப்படுத்தக் கூடியவாறு விரல் அடையாள இயந்திரங்கள் 2017 ஜூலை 01 திகதி முதல் செயற்படுத்தப்படாவிடின் தற்போதைய சம்பளத்தின் படி மேலதிக நேரப் படி செலுத்தாமல் இருப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். எனினும், அமைச்சினால், அமைச்சுக்கு, அதற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்காக ரூபா 31.08 மில்லியன் செலவிடப்பட்டு நிறுவப்பட்டிருந்த 213 விரல் அடையாள இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டதுடன், தற்போதைய சம்பளத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது சம்பளமாக ரூபா 45,333 மில்லியன் தொகையும், மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் சம்பளமாக ரூபா 39,717.63 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 85,050.63 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல், மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்த மொத்தத் தொகை சம்பள கிரயத்தில் 87.6 சதவீதமாக காணப்பட்டது.	சுகாதார அமைச்சின் கீழ் காணப்படும் உயிரியல் வைத்திய பொறியியலாளர் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவினால் விரல் அடையாள இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றதெனவும், அமைச்சுக் கட்டிடத்தில் விரல் அடையாள இயந்திரம் பொறுத்தப்பட்டுள்ளதுடன், விரல் அடையாள பதிவு செய்ய பின்னர் அவற்றை பயன்படுத்த முடியும் எனவும்.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர்களின் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் தொடரபான அறிக்கைகள் வைத்துக்கொள்வதற்கும் அதற்கு இணங்கியவாறு உத்தியோகத்தரின் மேலதிக கடமைகளுக்கான கொடுப்பனவுகள் செலுத்துதல் தொடர்பான தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அரச கணக்குக் குழுவினால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரையை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளை நெருங்குதல்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சுகாதார அமைச்சு தொடர்பாக 42 நிலைபேறான அபிவிருத்திச் சுட்டிகள் இனங்கண்டிருந்ததுடன், அவற்றில் 26 சுட்டிகளுக்காக மீளாய்வாண்டிற்கான முன்னேற்றம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், முன்னேற்ற அறிக்கை அனுப்பப்பட்டிருந்த 09 சுட்டிகளும் தேவையான செயலாற்றுகை மட்டத்தை நெருங்கியிருக்கவில்லை.	தேவையான தலையீடுகளை மாற்றுவதெனவும், இது தொடர்பாக தரவு பரப்புகள் சேகரிக்கப்பட்டு வருவதுடன், அவற்றை உறுதிப்படுத்திய பின்னர் சில மாதங்களில் சமர்ப்பிக்க முடியும் எனவும்.	2030 அளவில் எதிர்பார்த்த இலக்குகளை நெருங்குவதற்காக வருடாந்த தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தேவையான முன்னேற்றத்தை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சம்பள மட்டங்களின் படி சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் நிறுவனங்கள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த பதவியணியினர் 97,986 தொகை மற்றும் அத் திகதியில் உள்ளவாறு உள்ளவாறான பதவியணி 84,106 தொகை காணப்பட்டது. அதன்படி, ஒட்டுமொத்த பதவியணியில் 13,880 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டது. அவ்வாறாயினும், 279 பதவிகள் தொடர்பாக 14,853 இற்கான பற்றாக்குறை ஒன்றும் 37 பதவிகள் தொடர்பாக 937 உத்தியோகத்தர்கள் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதில் காணப்பட்ட 58 பதவிகளுக்கான 14,536 உத்தியோகத்தர்கள் நிறுவனத்தில் பற்றாக்குறையாக காணப்படல் போலவே சில நிறுவனங்களில் 3,484 உத்தியோகத்தர்கள் மிகையாக காணப்படுதலும் அவதானிக்கப்பட்டதுடன், இவ்வாறு மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளை சமப்படுத்தாமல் இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தல் முகாமைத்துவத்தின் பலவீனம் என அவதானிக்கப்பட்டது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி மேற்கூறிய மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் காணப்பட்ட பதவிகளுக்கு மேலதிகமாக 31 பதவிகள் தொடர்பாக 694 உத்தியோகத்தர்களுக்கான பதவியணி	நிரந்தர பதவியணியில் சேர்க்கப்படாத ஊழியர்கள் தொடர்பாக ஒரு பொதுவான கொள்கைத் தீர்மானம் ஒன்றிற்கு அணுக வேண்டியிருந்ததுடன், முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் **DMS/CI/H& N/O** இலக்கம் கொண்ட மற்றும் 2010.06.11 திகதிய கடிதத்தின் மூலம் சுகாதார அமைச்சின் கீழ் காணப்பட்ட 102 களஞ்சியப் பொறுப்பாளர் பதவிகளை ஒழித்து 104 மருந்து வழங்கல் உதவியாளர் பதவிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட:டுள்ளது எனவும், முறைசாரா விதமான சேர்க்கப்பட்டுள்ள நுளம்பு ஒழிப்பு உதவியாளர்கள் ஆட்சேர்ப்பு தொடர்பாக அரசினால் கொள்கைசார் தீர்மானமொன்று எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட பின்னர் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என.	அலுவல்களை செயற்திறனுடன் நடாத்திச் செல்வதற்காக அத்தியவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அவ்வவ் வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை இணைப்பதற்கும் அங்கீகாரம் இன்றிய பதவிகளுக்காக உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மிகைகள் காணப்பட்டது. முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் 2017 நவம்பர் 07 திகதி அமைச்சிற்கு பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) பேரில இலங்கை திட்டமிடல் சேவையின் விஷேட பதவி ஒன்றிற்காக அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், அந்த பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. டெங்கு ஒழிப்பு அலுவல்களுக்காக 2017 ஆண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் முறைசாரா விதமாக சேர்க்கப்பட்டிருந்த நுளம்பு ஒழிப்பு உதவியாளர்கள் 1,102 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றில் 671 பதவிகளுக்காக மாத்திரம் 2024 ஆண்டில் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்தது.

(ஆ) 2009 பெப்ரவரி 20 திகதிய 1589/30 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதி XVIII அத்தியாத்தின் பிரிவு 193 இன் பிரகாரம் அனைத்து அரச உத்தியோகத்தர்களும் இடமாற்றங்களுக்கு ஆளாக்க வேண்டியதுடன், 2024 செப்தம்பர் 30 திகதி அளவில் சிமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை பதவியணி தொடர்பாக சேவைக் காலம் 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட 520 உத்தியோகத்தர்களும் 10 வருடங்களுக்கும் 20 வருடங்களுக்கும் இடைப்பட்ட 389 உத்தியோகத்தர்களும் 20 வருடங்களுக்கும் 30 வருடங்களுக்கும் இடைப்பட்ட 219 உத்தியோகத்தர்களும் 30 வருடங்களுக்கு மேற்பட்டோர் 33 உத்தியோகத்தர்களும் சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர். அதேபோல் 26 பதவிகளுக்குரிய 422 உத்தியோகத்தர்கள் 06 வருடங்களுக்கும் 33 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் பொலன்னறுவை போதனா வைத்தியசாலையில் தொடர்ச்சியாக கடமையாற்றுகின்றனர் என அவதானிக்கப்பட்டது. மேலும் கண்டி தேசிய வைத்தியசாலையில் தாதிப் பதவியினருக்காக அறுதியான உள்ளக இடமாற்றக் கொள்கையொன்று அல்லது செய்முறையொன்று

கண்டி தேசிய வைத்தியசாலையில் 426 தாதி உத்தியோகத்தர்களில் 204 பேர் மாத்திரம் விஷேட அலகுகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையால் வைத்தியசாலையில் உள்ளக இடமாற்ற செய்முறையொன்று தயாரித்தல் தொடர்பாக விஷேட தர தாதி உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், பேராதனை வைத்தியசாலையில் விஷேட பயிற்சி பெற்றுள்ள ஊழியர்கள் மற்றும் இரகசிய தன்மையுள்ள பிரிவுகள் (பிணச் சாலை, மருத்துவ சுவடிக்கூடம்) போன்ற ஊழியர் தவிர ஏனைய ஊழியர்கள் பல வருடங்களுக்கு ஒருமுறை இடமாற்றம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளவர்களுக்கு மாத்திரம் வருடாந்த இடமாற்றங்கள் செயற்படுத்தப்படும் என.

2009 பெப்ரவரி 20 திகதிய 1589/30 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதி XVIII அத்தியாத்தின் பிரிவு 193 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், உள்ளக இடமாற்ற செய்முறையொன்று தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	செயற்படாமல் உள்ளதுடன், கண்டி தேசிய வைத்தியசாலையில் 426 தாதி உத்தியோகத்தர்கள் 10 வருடங்களுக்கும் 31 வருடங்களுக்கும் இடைப்பட்ட நீண்ட காலம் ஒரே அலகில் அல்லது ஒரே பிரிவில் கடமையாற்றுகின்றனர். மேலும், வைத்தியசாலையின் தாதிப் பதவியணியினர் தொடர்பான தகவல்கள் அடங்கிய தகவல்கள் முறைமையொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.		
(இ)	தாதி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கும் போது மற்றும் தாதி பயிற்சி வழங்கும் போது சரியான முறையில் தனிப்பட்ட கோப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு பேணிச் செல்லாமை சுகாதார அமைச்சின் பல்வேறு நிறுவனங்கள் இடையே உள்ளக தொடர்புகள் மற்றும் அறிவின்மை அல்லது மோசடித் தன்மையான ஏற்பாடுகள் காரணமாக 1984 தாதிப் பயிற்சிப் பாடநெறிக்கு உட்படுத்தியிருந்த 1988 ஜூலை 18 திகதி பெண் தாதி உத்தியோகத்தர் என நியமனம் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தரிடம் 02 பிறப்புச்சான்றிதழ்கள் மற்றும் 02 தேசிய அடையாள அட்டைகள் மூலம் மாற்றமான தகவல்கள் தனிப்பட்ட கோப்பில் மோசடியான முறையில் வழங்கப்பட்டிருந்து. ஆவணங்களின் படி அந்த பெண் உத்தியோத்தர் 2022 நவம்பர் 01 திகதி ஓய்வு பெற வேண்டியிருந்த போதிலும், மோசடி ஆவணங்கள் தயாரித்து அது கண்டறியப்பட்ட சந்தர்ப்பமாகிய 2023 ஆகஸ்ட் 20 திகதி வரை கடமையில் ஈடுபட்டிருந்த மோசடித் தன்மையுடன் செயற்பட்டிருந்ததுடன், ஓய்வு பெற்ற பின்னருக்கு அவருக்கு 10 மாதங்களுக்காக ரூபா 648,680 இற்கான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.	குறிப்பிட்ட பெண் தாதி உத்தியோகத்திர் EJ/பொது கோப்பு கொண்ட கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக MH/FS/PI/09/2023/B-175/354 இலக்கத்தின் கீழ் ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், அந்த ஆரம்ப விசாரணை இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை என.	தனிப்பட்ட கோப்புக்கள் முறைப் பிரகாரம் பேணிச் செல்லப்பட வேண்டியதுடன், குறிப்பிட்ட ஆரம்ப விசாரணைகள் விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	2002 ஜனவரி 07 திகதி முதல் கதிர் வீச்சு நிபுணர் என நியமனம் பெற்றிருந்த உத்தியோகத்தர் ஒருவர் தேவையான தகைமைகள் பூர்த்தி செய்திருந்த போதிலும், அவர் ஓய்வு பெற்று 08 மாதங்கள் மிகைக்கும் சந்தர்ப்பமாகிய 2024 ஆகஸ்ட் 30 திகதி வரையும், சேவையில் நிரந்தரப்படுத்துவற்கு சுகாதார	2024 செப்தம்பர் 13 திகதிய TA/02/RG/PF/05/2002 இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் 2002 ஜனவரி 07 திகதி முதல் மருத்துவத்திற்கான நிறைவுகாண் நிபுணர்கள் சபையின் கதிரியக்க நிபுணர் பதவியில் நிரந்தரப்படுத்துவதற்காக	மிகையாக செலுத்திய தொகையினை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமைச்சினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல், சேவை மூப்பிற்காக வழங்கப்படுகின்ற சலுகையின் கீழ் அரசாங்க சேவையில் மருந்தகர் என 2017 மார்ச் 20 திகதி கண்டி தேசிய வைத்தியசாலையில் நியமனம் செய்யப்பட்டிருந்த இலங்கை இராணுவத்தில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்காக பொது நிருவாக சுற்றறிக்கை 03/2018 இன் 06 பந்தியின் பிரகாரம் ஓய்வூதியத்துடன் உரித்தான வாழ்க்கைப் படிக் கொடுப்பனவு அடுத்த அரை மாத கொடுப்பனவுடன் வழங்கப்பட வேண்டிய போதிலும், மொத்த வாழ்க்கைப் படிக் கொடுபனவு அவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, அவருக்கு ரூபா 398,830 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

சுகாதார செயலாளர் அங்கீகரித்திருந்ததெனவும், 2017 மார்ச் 20 திகதி முதல் 2024 ஒக்தோபர் 31 திகதி வரை மிகையாக செலுத்தியுள்ள ரூபா 398,830 தொகையினை சம்பளத்திலிருந்து அறவீடு செய்து அரச வருமானத்திற்கு செலவு வைப்பத்றகு நடவடிக்கை எடுக்கப்படும் என.